ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 020 8900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P
ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly
முரசு: 7 23 – 29 ஓகஸ்ட் 2001 முழக்கம்: 345

FORWARD CONSULTANTS
-CONSULTING FOR PEOPLE-
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants. co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

# யாழ்.மண் விரைவில் மீட்கப்படும்

## விடுதலைப் புலிகள் அறிவிப்பு !

### முப்படைத் தளபதிகளும் அவசரமாக யாழ்.விஜயம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை யாழ்குடா மக்களுக்கு கடந்தவாரம் விடுத்துள்ள அறிக்கையொன்றில், யாழ். மண் விரைவில் தம்மால் மீட்கப்படும் என அறிவித்துள்ளனர். அண்மைக்காலமாக குடாநாட்டில் இடம்பெற்றுவரும் சமூக, கலாச்சார சீரழிவுகள் குறித்தும், தேசத்துரோக நடவடிக்கைகள் குறித்தும் - குடா நாட்டு மக்களுக்கு நீண்ட மடல் - என்ற தலைப்பில் விடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலேயே யாழ்மண் விரைவில் மீட்கப்படும் என்ற அறிவித்தலையும் புலிகள் விடுத்துள்ளனர்.

யாழ்மண் எதிரிகளிடம் இருந்து மீட்கப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை எனவும், யாழ்மண் எம்மால் முற்றுகையிடப்பட்டு மீட்கப்படும்போது எதிரிகளே தப்பமுடியாத நிலையில் துரோகங்களுக்கு துணை போனவர்கள் எமக்கு நிச்சயம் பதில் சொல்லவேண்டி வரும் என்றும் மேற்படி அறிக்கையில்

(☞ 2ம் பக்கம்)

## சந்திரிகா அரசின் தமிழின அழிப்புத் திட்டம் அம்பலம்

### இரசாயன ஆயுதங்கள் கொள்வனவு புலிகள் கடும் எச்சரிக்கை

தமிழ் மக்களை பெருமளவில் கொன்றொழிக்கும் திட்டத்துடன் சிறீலங்கா அரசு கொடிய இரசாயன ஆயுதங்களை வாங்கிக் குவித்திருப்பது தெரியவந்துள்ளது. பேரழிவை ஏற்படுத்த வல்ல. இவ் ஆயுதங்களை போராளிகளுக்கும், பொது மக்களுக்கும் எதிராகப் பயன்படுத்தவதற்கான திட்டத்தையும் அரசு வகுத்துள்ளது அம்பலத்திற்கு வந்துள்ளது.

சர்வதேச சட்ட விதிகளையும் மீறி ரஷ்யாவிடமிருந்து மேற்படி கொடிய ஆயுதங்களை கொள்வனவு செய்திருக்கும் சிங்கள அரசு, தமிழ் மக்களுக்கு எதிராக அதனை பயன்படுத்துமானால், பாராதூரமான

(☞ 2ம் பக்கம்)




## 28 அமைச்சர்களும் பதவி விலக வேண்டும்

### ஐ.தே.க. வலியுறுத்தல்

(20.08.01)

பதவியில் இருந்து விலகுவதாகத் தெரிவித்து சிறீலங்கா ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் 28 அமைச்சர்கள் கடந்த 16ம் திகதி சந்திரிகாவிடம் திகதியிடப்படாத கடிதங்களை கையளித்திருந்தனர். சிங்கள தேசிய அரசு ஒன்றை கட்டியமைப்பதற்காக, பதவி விலகல் நாடகம் ஒன்றை நடாத்தி

(☞ 2ம் பக்கம்)

### கட்டுநாயக்கா செய்திகளுக்கு தடை

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் தொடர்பான எந்தத் தகவல்களையும் விமான நிலைய அதிகாரிகள் ஊடகங்களுக்குத் தெரிவிக்கக் கூடாதென சிறீலங்கா விமானப் போக்குவரத்து, விமான நிலைய அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கடும் உத்தரவைப் பிறப்பித்துள்ளார். கட்டுநாயக்கா விமான நிலையம் தாக்குதலுக்கு உள்ளான பின்னர் விமான நிலைய அதிகாரிகள், தாக்குதல் தொடர்பாக

### விசேட அறிவித்தல்

ஈழமுரசு இதழில் வெளியாகும் பிறந்தநாள், திருமண மற்றும் மரண அறிவித்தல்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் தமிழீழத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். இதற்கென ஒரு விசேட பகுதியை நாம் ஒதுக்கியுள்ளோம். இது தொடர்பாக உங்கள் நாடுகளில் உள்ள எமது பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழினி
TAMILINI
Cash and Carry
பல்பொருள் அங்காடி
195-197 The Broadway,
Southall, Middx Ub1 1LZ
Tel: 020 8606 9900
Fax: 020 8813 8269
* எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:** P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE PUBLI-HEBDOS 1
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
AMUTHASURABI
Rheinische Str-55, 44137 Dortmund.
அமுதசுரபி: 02311206692
அமரன்: 01734242356

டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07884051522
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா: 'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93510
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041



குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.


(1ம் பக்கத் தொடர்ச்சி

## யாழ். மண்....

தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (முழுமையான அறிக்கையை 17ம் பக்கத்தில் பார்க்கவும்)

### முப்படைத் தளபதிகள் யாழ்.விஜயம்

இதேவேளை, புலிகளின் யாழ். மீட்புப்பற்றிய அறிவித்தலைத் தொடர்ந்து சிறீலங்காவின் முப்படைத் தளபதிகளும் உடனடியாகவே யாழ்ப்பாணத்திற்கு சென்று கள நிலவரங்களை நேரில் பார்த்தறிந்துள்ளனர். கடந்த வெள்ளியன்று யாழ்குடாவிற்கு அவசரமாக விரைந்த முப்படைத் தளபதிகளும், வடமராட்சி மற்றும் தென்மராட்சி தனங்கிளப்பு பகுதிகளுக்கும் சென்று, பாதுகாப்பு நிலவரங்களை ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது கூட்டு நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தளபதி ஜெனரல் றொகான் தளுவத்தை, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல, விமானப் படைத்தளபதி எயார் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி மற்றும் நடவடிக்கைகளுக்கான தளபதி பிரிகேடியர் நிமல் ஜெயசூரிய ஆகியோரே யாழ்குடா சென்று நிலமையை நேரில் பார்வையிட்டுள்ளனர். நிலமைகளை அவதானித்த பின்னர், பலாலி திரும்பிய இவர்கள், இராணுவத் தலைமையகத்தில் யாழ் குடாவிலுள்ள இராணுவத் தளபதிகளுடன் உயர்மட்ட மாநாடொன்றையும் நடாத்தியுள்ளனர்.

### படைகள் குவிப்பு

இது இவ்வாறிருக்க, தற்போது வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு வருவதாகவும், இராணுவத் தளபாடங்கள் அப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி

## சந்திரிகா அரசின்...

விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என விடுதலைப் புலிகள் அறிக்கையொன்றின் மூலம் அரசிற்கு கடும் எச்சரிக்கையையும் விடுத்துள்ளனர். அத்துடன் சர்வதேச சமூகம் இதனைக் கண்டிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் மனித மலங்களையும், கழிவுகளையும் விமானத்திலிருந்து தமிழ் மக்கள் மீது அள்ளிக்கொட்டிய அரசு கொடிய ஆயுதங்களை தமிழ் மக்கள் மீது பாவிப்பதற்கு தயங்காது என அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ரஷ்யாவைத் தவிர வேறெந்த நாட்டு இராணுவத்தின் பாவனையிலும் இல்லாத இந்த இரசாயன ஆயுதம், ஒரே நேரத்தில் ஏராளமான உயிரழிவை ஏற்படுத்துவதுடன் மோசமான எரிகாயங்களையும், நுரையீரல் பாதிப்பையும் கூட ஏற்படுத்த வல்லதென தெரிய வருகிறது. அத்துடன் பாதுகாப்பான முகமூடிகளை அணிந்தாலே இத்தாக்குதல் விளைவுகளில் இருந்து ஓரளவேனும் தப்பிக்கொள்ள முடியும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி

## 28 அமைச்சர்களும்...

ஐக்கிய தேசியக் கட்சியினை உள் இழுக்கும் நோக்கத்துடன் சந்திரிகா அரசு இந்நடவடிக்கையை மேற்கொண்டதாக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இவ்விவகாரம் தொடர்பாக பிரதியமைச்சர்கள், அமைச்சர்கள் இராஜிநாமா கடிதம் சமர்ப்பிப்பு விவகாரம் தொடர்பில் எழுந்துள்ள சட்டப் பிரச்சினைகள் குறித்து தெளிவுபடுத்தும் செய்தியாளர் மாநாடு நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. இதன்போது, அமைச்சர்களோ பிரதியமைச்சர்களோ இராஜிநாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிக்கும் பட்சத்தில் அவர்கள் அந்த நிமிடம் முதலே பதவி விலகியதாகக் கணிக்கப்படும். திகதியிடப்பட்ட, திகதியிடப்படாத கடிதம் என்ற விதிமுறைகள் எதுவும் அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை. எனவே இராஜிநாமாக் கடிதங்கள் கையளிக்கப்பட்ட சகல பிரதியமைச்சர்களும் பதவி விலகியதாகவே கருதப்பட வேண்டும். இவர்கள் மீண்டும் அந்தப் பதவியை வகிக்க வேண்டுமானால் ஜனாதிபதியால் மீண்டும் நியமனம் வழங்கப்பட்டு பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னரே அதனை வகிக்கலாம். பதவி விலகல் கடிதம் கோரி தாம் பலவந்தப்படுத்தவில்லை எனவும் சுயவிருப்பின் பேரிலேயே அவர்கள் கடிதங்களை கையளித்ததாகவும் ஜனாதிபதியே தொலைக்காட்சியில் பேசுகையில் தெரிவித்துள்ளார். இக்கூற்றின் மூலம் பிரதியமைச்சர்கள் தமது சுயவிருப்பின் மூலமே பதவி விலகியுள்ளனர். எனவே தொடர்ந்து அப்பதவிகளில் அவர்கள் இருக்க முடியாது என ஐ.தே.க. வட்டாரங்கள் வலியுறுத்தியுள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி


## கட்டுநாயக்கா...

ஊடகங்களுக்குப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். இதனால் தற்போது பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாலேயே இத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்: 29 – 09 – 1962

ஆண்டவன் அழைப்பில்: 12 – 08 – 2001



## அமரர் உயர்திரு சிவானந்தன் (சிவா) குமாரசாமி

(தர்சனாஸ் சுப்பர் மார்கட் உரிமையாளர் Kipling)

தமிழீழம் அனலைதீவை பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடா ரொரன்ரோவை வதிவிடமாகவும் கொண்டவரும் தர்சனாஸ் சுப்பர் மார்கட் உரிமையாளரும் எல்லோராலும் சிவா என அழைப்பட்டவருமான உயர்திரு. சிவானந்தன் (சிவா) அவர்கள் 12-08-2001 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவன் பதம் அடைந்தார்.

அன்னார் ரதிமலரின் ஆருயிர் கணவரும் சஞ்சீவ், திவ்யா, அஜூனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திரு. திருமதி. குமாரசாமி-சாரதாவள்ளி தம்பதிகளின் அருமை மகனும், திரு. திருமதி. சண்முகம் இலட்சுமி தம்பதிகளின் ஆசை மருமகனும், திரு.திருமதி. தம்பையா வள்ளியம்மை தம்பதிகளின் அன்புப் பேரனும், ஆனந்தன், குகன், ரஜனி, கிருபா, நிமலன், சுபாசினி, சுதாசினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கௌரி, ரஜனி, சிறிதரன், வனஜா, யோகமலர், சஞ்சிவ், ரமணி, ரீந்திரன் (சுவிஸ்), ரஞ்சனி, வசந்தா, ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும் சண்முகம். சோதிமாலா, நாதசோதிலிங்கம், சிறிலவராசன், பேரானந்த ரூபன் ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சந்திரமதியா, காலஞ்சென்ற கனகசபை தம்பதிகளின் அருமைப் பேரனும், மதியாபரணம் ஆகியோரின் பெறாமகனும் தம்பையா பரமேஸ்வரி, சபாரட்ணம், சொர்ணம்மா ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற மயில்வாகனம், ஞானசுந்தரம், சுந்தரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமி, இராசம்மா, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறாமகனும், ஜிவி, சூர்யா, சபரிசன், அபிரா, நதியா, குயூரன், கனிஷா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கௌசிகா, சகானா, தனுஷா, ஜதுயா, துஷன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ஜெனாத், தர்சனா, நந்துஷா, சாரவிகா ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் 16-08-2001 வியாழக்கிழமை தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நம் தமிழ் உறவினர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்: ஆனந்தன் (சகோதரன்) (416) 746-2294

# மரண அறிவித்தல்

மறைவு: 09 – 08 – 2001



## திரு. சின்னப்பு வல்லிபுரம்

(சங்கானை)

சங்கானையைச் சேர்ந்த திரு சின்னப்பு வல்லிபுரம் அவர்கள் 09-08-2001 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

இவர் தமிழும் சங்கானை காளிகோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற சின்னப்பு வள்ளியமை தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு. நாகலிங்கத்தின் அன்பு மைத்துணரும் தேவராணி, சிறிதேவி, வேலும் மயிலும் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலராஜா. தேவதாஸ், அனுமா ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகா, சரண்யா, சகித்திபா, சயந்தன், வரப்பிரதாப், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் வருகின்ற, சனிக்கிழமை (18-08-2001) லண்டனில் நடைபெறவுள்ளது. இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: மக்கள், மருமக்கள் (லண்டன்) 01144208 6908899
சி.பரமேஸ்வரன் (கனடா) 905-625-4645


# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,950 Frs. |
| Madras | - | 4,800 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 07595 01 37

(ADV)

# துறைமுகத்தை பாதுகாக்க இஸ்ரேல் விமான நிலையத்தை பாதுகாக்க பிரித்தானியா

(19.08.01)

கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பிற்கான விசேட பயிற்சிகளை சிறீலங்கா கடற்படையினருக்கு வழங்குவதற்கு இஸ்ரேலியப் பாதுகாப்புக் குழுவொன்று கொழும்பிற்கு வருகைதர உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ள சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் அழைப்பின் பேரிலேயே இஸ்ரேலிய நிபுணர் குழு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்கா தாக்குதலால் உல்லாசப் பயணத்துறை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத் துறையும் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளது. பல்வேறு வழிகளில் பாதிப்புகள், பொருளாதார நெருக்கடிக்குள்ளும் சிறீலங்கா அரசு தள்ளப்பட்டுள்ளது. துறைமுகத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் உட்பட வழமைக்குத் திரும்பிவிடும் என்றும், கொழும்புத் துறைமுகம் மீது கப்பல் நிறுவனங்கள் நம்பிக்கை வைக்கும் என்றும் இதனால் நெருக்கடி நிலை நீங்கிவிடுமெனவும் சிறீலங்கா அரசு தரப்பு கருதுகிறது. இதனால் துறைமுகத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் முயற்சிக்கு இஸ்ரேலிய ஒத்துழைப்பு நாடப்பட்டுள்ளதாகப் சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. தற்போது உலகில் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான நடவடிக்கைகளில் இஸ்ரேலியர்களின் உதவி நாடப்பட்டு அந்தந்த நாடுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் புதிய முறையில் அணுகிவருகின்றன. இதனடிப்படையிலேயே இஸ்ரேலியர்களின் உதவியை சிறீலங்காவும் நாடியுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பை மேலும் அதிகரிப்பதற்காக பிரித்தானியா மற்றும் இஸ்ரேல் பாதுகாப்பு நிபுணர்களின் உதவியை சிறீலங்கா அரசு நாடியிருந்தது. சிறீலங்கா அரசின் அவசர வேண்டுகோளையடுத்து இவற்றின் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக பிரத்தானிய நிபுணர்கள் குழுவொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிற்கு சென்றுள்ளது. இக் குழுவினருடன் இஸ்ரேல் நிபுணர்கள் குழுவும் இணைந்து விமானப்படைத் தளம் மற்றும் விமான நிலைய பாதுகாப்பிற்கான ஆலோசனைகளை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள சிறீலங்கா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் மீது திடீர்த் தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டால் அதனை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பான ஒத்திகை ஒன்று சிறீலங்காப் படையினரால் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் தடுப்பு ஒத்திகையில் பொலீஸார், தீயணைப்புப் படையினர், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் என்று நூற்றுக்கணக்கானோர் ஈடுபட்டனர். கடந்த 15ம் திகதி இரவு 9 மணி முதல் 10 மணிவரை சுமார் ஒரு மணி நேரம் இந்த ஒத்திகை நடத்தப்பட்டதாக தெரியவருகிறது.

## மஞ்சந்தொடுவாயில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

(19.08.01)

மட்டு. மஞ்சந்தொடுவாயில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் இரு தமிழ் இளைஞர்கள் சிறீலங்கா பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். மட்டு - கல்முனை பிரதான வீதியில் மஞ்சந்தொடுவாய் என்னுமிடத்தில் காத்தான்குடி பொலிஸ் நிலையம் உள்ளது. இப் பொலிஸ் நிலையத்தில் இருந்தே, பொலிஸ் நிலையத்தைத் தாண்டி சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு இளைஞர்கள் காரணம் எதுவுமின்றி பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்கள் கொக்கட்டிச்சோலை அரசடித்தீவைச் சேர்ந்த நவரத்தினராசா சுதர்ஜன் (23), ஆரையம்பதி தாளங்குடாவைச் சேர்ந்த வெள்ளைத்தம்பி புவனேந்திரராஜன்(18) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


புதிய மலர்வு

ஆறியும் புதல்விகள்

பாடல் இசைத்தட்டு



இசை: முரளி

மின்மினிப் பூவெனவே வாழலாமா
மிதிபடும் விதியை மாற்ற வா
அக்கினிப் பூவெனவே அனலை ஏந்தி..

தமிழீழத்து பல முன்னணிக் கவிஞர்களின் 10 கவிவரிகளிற்கு பாடியுள்ளனர்
சாந்தன், சுகுமார், வசிகரன், பிறின்சி, தவமலர், சிவரதி, நிரோஜன், திருமலைச்சந்திரன், மணிமொழி, குமாரதாஸ், செங்கதிர் ஆகியோர்.

உருவாக்கம்: கலைபண்பாட்டுக் கழகம் மகளிர் பிரிவு

வெளியீடு: விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினர்

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வெளியீட்டுப் பிரிவிடம் பெற்றுக்கொள்ளலாம்


## அணு ஆயுதங்களை வேறு நாடுகள் வைத்திருக்கின்றன நாம் இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாதா? – சரத் கருனாரட்ண கேட்கிறார்

(19.08.01)

இரசாயன ஆயுதங்களை சிறீலங்கா அரச கொள்வனவு செய்தது தொடர்பாக இலண்டன் பி.பி.சி.யின் சிங்கள சேவை சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரட்ணவிடம் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் என்பன தடைசெய்துள்ள ஆயுதங்களை சிறீலங்கா இராணுவம் வாங்கியுள்ளது. இந்த ஆயுதங்களைப் பயன்படுத்துவது சட்ட விரோதம் என்றால் அவற்றை சிறீலங்கா இராணுவம் ஏன் வாங்கியது எனக் கேள்வி எழுப்பியது. இதற்கு பதிலளித்த சரத் கருணாரட்ண, ரஷ்யாவிடம் இருந்த நாம் கொள்வனவு செய்த இந்த ஆயுதங்கள் குறித்து இத்தகைய கேள்வி எழ வாய்ப்பேயில்லை. ஆயுதங்களை வைத்திருப்பது வேறு பயன்படுத்துவது என்பது வேறு. அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள் போன்றவற்றை வேறு நாடுகள் வைத்திருக்கின்றன அல்லவா? அவை ஏன் அவற்றை வைத்திருக்கின்றன என்ற கேள்விக்கு என்ன பதிலோ அதுதான் இந்தக் கேள்விக்கும் பதிலாக அமையும் எனக் கூறியுள்ளார். சிறீலங்காவின் இராணுவப் பேச்சாளர் ஆயுதக்கொள்வனை ஒத்தக் கொண்டுள்ள நிலையில் சிறீலங்கா அரசு அவ்வாறான ஆயுதம் எதனையும் கொள்வனவு செய்யவில்லை என மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வேலணை கோஸ்டி மோதலில் 6 பேர் படுகாயம்

(19.08.01)

யாழ். வேலணைப் பகுதியில் இடம்பெற்ற கோஸ்டி மோதல் ஒன்றில் அறுபேர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இரண்டு குடும்பங்களுக்கிடையில் இடம்பெற்று வந்த சச்சரவு கோஷ்டி மோதலாக மாறி கத்தி வெட்டு, இரும்புக்கம்பி, கொட்டன் அடிதடிகளில் முடிந்துள்ளது. வேலணை 7ம் வட்டாரம் அம்பாள் நகர் பகுதியில் கடந்த வாரம் இம் மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது முருகேசு நாகராசா(63), அவரது மகன் நாகராசா கோடீஸ்வரன்(26) மற்றும் நடராசா விக்னேஸ்வரன் (33) அவரது சகோதரன் நடராசா விமலேஸ்வரன்(21), சந்திரலிங்கம் இந்திரகுமார் (36), கார்த்திகேசு அமுதலிங்கம்(24) ஆகியோர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கைத் தொலைபேசி மூலம் பரீட்சை எழுதிய மாணவன் கைது

(19.08.01)

கைத்தொலைபேசியின் உதவியுடன் க.பொ.த. உயர்தர பரீட்சையில் பௌதீக விஞ்ஞான பாட வினாத்தாளிற்கு பதில் எழுதிய மாணவன் ஒருவன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நீர்கொழும்பு கல்வி வலயத்தில் ரத்தொழுகம பஞ்ஞானந்த பாடசாலை பரீட்சை மண்டபத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது, விபத்துக்குள்ளாகி காயமேற்பட்டது போல் நடித்து இடது கையில் பன்டேஜில் சுற்றிக்கொண்டு பரீட்சை மண்டபத்திற்குள் வந்த மாணவன் ஒருவன், சிறிது நேரம் கழித்து மாத்திரைகளை உட்கொண்டுள்ளார். வேதனையுடன் இருப்பதாகக் காண்பித்துக் கொண்டு இடது கையை காதில் பொத்தி வைத்துக் கொண்டும், மேசையில் தலையை சாய்த்து படுத்தும் இருக்கிறார். அடிக்கடி இதுபோல் செய்துவர பரீட்சை மண்டப அதிகாரிக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கைக்கட்டை கழற்றிப் பார்க்க வேண்டும் என அதிகாரி மாணவனிடம் கூற அவர் மறுக்க இதற்கான முழுப் பொறுப்பையும் தான் ஏற்றுக்கொள்வதாகக் கூறி அவ் அதிகாரி பன்டேஜை கழற்றியுள்ளார். அதன் போது உள்ளேயிருந்த சிறிய கைத்தொலைபேசி வயர்கள் உடலுக்குள் சென்று இரகசிய ஸ்தானத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததும் தெரியவந்துள்ளது. இதனையடுத்து பொலிசாருக்கு இதுபற்றி தெரிவிக்கப்பட்டு மாணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின்போது கைத்தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பரீட்சை வினாத்தாள் கேள்விகளுக்கான விடைகளை இம் மாணவர் எழுதியுள்ளது தெரியவந்துள்ளது.

இவர் தொடர்பு கொண்டு எழுதியவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட முதலாவது பரீட்சைத் தில்லுமுல்லு இதுவென்று வர்ணித்துள்ள பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர், இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.


GLENMORE PROPERTY SERVICES LTD

Sales | Lettings | Management | Mortgage advice

எல்லாவித மோட்கேஜ்களும் செய்து தரப்படும்

You have tried the rest, now come to the best

810 Harrow Road, Wembley,
Middlesex HAO 3EL
Tel: 020 8904 5040

website: www.glenmoreproperties.co.uk
e-mail: rightmove@glenmoreproperties.co.uk
Fax: 020 8904 5220

your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loan(s) secured on it.

# அமைதியாக முடிந்த மடுமாதா திருவிழா மாவீரர் துயிலும் இல்லத்தில் விளக்கேற்றி வணங்கிய தென்பகுதி மக்கள்

(19.08.01)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்ததன் பின்னர் இரண்டாவது வருடமாக நடைபெற்ற மடுமாதாவின் ஆவணித் திருவிழா இம்முறையும் எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி மிகவும் அமைதியாகவும், மகிழ்வுடனும் நடைபெற்று முடிந்துள்ளதாக அங்கு சென்று திரும்பிய தென்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இராணுவத்தினரால் மடு தேவாலயம் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தபோது அதனை ஒரு முகாமாக இராணுவம் பாவித்திருந்த நிலையில், விடுதலைப் புலிகளின் கட்டப்பாட்டில் வந்ததன் பின்னர், தேவாலயப் பகுதியினுள்ளும் மற்றும் சுற்றாடல் பிரசேத்திலும் விடுதலைப் புலிகள் எவரும் ஆயுதபாணிகளாகவோ, சீருடையிலோ காணப்படவில்லை எனவும் சென்று திரும்பியுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஆலய பிரதேசத்தின் எல்லைக்கு அப்பால் மாவீரர் துயிலும் இல்லப்பகுதிகளிலேயே விடுதலைப் புலிகளைக் காணக் கூடியதாக இருந்ததாகத் தெரிவித்த பக்தர் ஒருவர், மடுத்திருப்பதியில் திருவிழா வேளையில் நியாயமான விலைகளில் உணவுப் பொருட்கள், உணவுப் பண்டங்களை வாங்கக் கூடியதாக இருந்ததாகவும் பலாப் பழம், வாழைப்பழம் என்பன மிகவும் மலிவான விலையில் தாராளமாகக் கிடைத்ததாகவும் தெரிவித்துள்ளார். பாண் ஒரு இறாத்தல் பத்து ரூபாவுக்கு தேவையான எல்லா வேளைகளிலும் வாங்கக் கூடியதாக இருந்ததுடன், காய்கறிகள், விசேடமாக மீன், இறைச்சி, கருவாடு என்பனவும் மலிவான விலைக்கு வாங்க முடிந்ததாகத் தென்பகுதி பக்தர்கள் தெரிவித்ததுடன், பொருட்கள் எதற்குமே அங்கு தட்டுப்பாடு இருக்கவில்லை என்றும் மடுத்திருப்பதிக்குச் சென்றிருந்த பலரும் விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லப் பகுதிக்குச் சென்று மாவீரர்களின் கல்லறைகளில் தீபம் ஏற்றியும் மெழுகுதிரிகளைக் கொளுத்தியும் வணங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது என்றும் மடுவுக்குச் சென்று திரும்பியவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மடுவிற்குச் சென்றவர்களுக்கு வன்னியின் இன்றைய வாழ் நிலைகளை விளக்கும் மற்றும் சிறீலங்காப் படைகளின் தாக்குதல்களை விளக்கும் தெருக்கூத்துக்கள், தெரு நாடகங்கள் பண்டிவிரிச்சான் பகுதியில் இடம்பெற்றதாகவும் அத்துடன், விசேட நிகழ்வுகளாக வானகத்தைக் கட்டி இழுத்தல், ஆட்களைக் கீழே கிடத்தி, அவர்களுக்கு மேல் வாகனங்களைச் செலுத்துதல், படுத்திருப்பவரின் மேல் பாறாங்கல்லைத் தூக்கி வைத்து அதனை சுத்தியலால் அடித்து உடைத்தல் போன்ற சாகச செயல்களும்செய்து காட்டப்பட்டன. அத்துடன் மடு ஆலயம் மீது சிறீலங்கா இராணுவம் 99 நவம்பர் 20ம் திகதி நடாத்திய தாக்குதலின்போது ஏற்பட்ட அனர்த்தங்கள், உயிரிழப்புக்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் புகைப்படங்கள், விவரணங்கள் என்பனவும், போரின் பாதிப்புக்களை தெளிவுபடுத்தும் ,காட்சிகள், போரினால் அகதிகளாக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்கள் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் பராமரிக்கப்பட்டு வருவது தொடர்பான விவரணங்களும் கண்காட்சியாக வைக்கப்பட்டு, அதுகுறித்த விளக்கமும் தென்பகுதி மக்களுக்கு விளக்கப்பட்டது. இதன்போது பார்வையிடச் சென்ற பலரும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நல வாழ்க்கைக்காக தமது நிதி அன்பளிப்புகளை வழங்கியதாக வன்னிச் செய்திகள் கூறுகின்றன.

இது இவ்வாறிருக்க, மடுத்திருப்பதியில் நடைபெற்ற ஆவணித் திருநாளில் கலந்துகொண்டு விட்டு சொந்த இடங்களுக்குத் திரும்பிய தென்னிலங்கை யாத்திரிகர்கள் பிரமனாலங்குளம் சோதனை நிலையத்தில் வைத்துப் படையினரால் தீவிரமாகச் சோதனையிடப்பட்டுள்ளர். இவர்களின் உடு புடவைகள் மற்றும் பொதிகள், மடுவில் வாங்கிய பொருட்கள் என்பன கடுமையாகச் சோதனையிடப்பட்டன என தென்னிலங்கை திரும்பியுள்ள பக்தர்கள் தெரிவித்துள்ளனர். பெரும்பாலான பக்தர்கள் திரும்பி வரும்போது வன்னியில் இருந்து பனை ஓலையால் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் கருவாடு, வெங்காயம் போன்றவற்றையே பெருமளவு வாங்கிச் சென்றனத காணமுடிந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.


A.S.C.E.S இன் புதியவகுப்புகள்

14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்

CP1,CP2,CM1,CM2,6$^e$ → terminale
bio,chimie,maths,tamoul,anglais,français,histoire,comptabilité etc
வீட்டுப்பாடங்கள் செய்ய விளக்கம் பெற உதவி செய்யப்படும்
சனி பி.ப. 1.30 மணி-- ஞாயிறு காலை 10 மணி

பிரஞ்சு
01.09.01 சனி மாலை 1.30 மணி
02.09.01 ஞாயிறு மாலை 3.30 மணி
03.09.01 திங்கள் 3.30 மணி
04.09.01 செவ்வாய் பி.ப. 3 மணி
05.09.01 புதன் பி.ப 2.30 மணி
01.09.01 3 மாத காலப் பேச்சுப்பயிற்சி வகுப்பு சனி பிப 3.30 மணி

பிரஞ்சுகற்க சிறந்த கைநூல் நடைமுறை பிரஞ்சு

ஆங்கிலம்
Cambridge,Toefl பரீட்சைகளுக்கும்
பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்
25-26.08.01 சனி - ஞாயிறு காலை 11 - பி.ப 1.30மணி-3.30

கம்பியூட்டர்
win 98-2000,word,excel,access,NT4
பாகங்கள் பொருத்த வாங்க ஆலோசனை
25-26.08.01 சனி-ஞாயிறு காலை 10மணி பி.ப 1.30மணி 3.30 மணி
ஞாயிறு பி.ப 1 மணி hardware பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்
சிறுவர்க்கான தமிழ்- ஆங்கிலம்- பிரஞ்சு-கணித வகுப்புக்கள்
பிரதி சனி பிற்பகல் 1.30மணி முதல்

நடன வகுப்புக்கள் ஞாயிறு பி.ப 3 மணி
தையல் கேக் அலங்காரம் : சனி பி.ப 2 மணி 3.30மணி
சங்கீத, ஓர்கன் வகுப்புகள்
சனி ஞாயிறு 10 மணி 2 மணி

சனி ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்
41, rue Didot 75014 Paris M° Pernety Direction N°13
Tél 01 42 57 23 56
திங்கள் செவ்வாய் புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்
2,rue Esclagnon 75018 Paris M° Porte de Clignancourt


# யாழ்.குடா இராணுவ தளபதி மாற்றம்

(19.08.01)

யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் டி.எஸ்.கே.விஜேசூரிய நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, பயிற்சிக்காக சீனா செல்லவுள்ளதால் இவருக்குப் பதிலாக விஜேசூரிய நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் சீனாவில் தங்கியிருந்து ஒருவருடகால பயிற்சியை பெற்றுக்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சியில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட தீச்சுவாலை நடவடிக்கை படுதோல்வியடைந்ததையடுத்து யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜயேந்திரா அப் பதவியிலிருந்து மாற்றப்பட்டு அவருக்குப் பதிலாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விமான நிலைய தாக்குதலால் மூடப்படும் உல்லாசப் பயணிகளின் விடுதிகள்

(19.08.01)

கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதலையடுத்து உல்லாசப் பயணிகளின் வருகை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் ஏராளமான விடுதிகள் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் பல நட்சத்திர விடுதிகளும் அடங்கியுள்ளன. இந்தக் காலநிலையில் சுமார் 50,000 வரையான உல்லாசப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அதில் பத்தில் ஒரு பகுதியினர் கூட வரமாட்டார்கள் என உல்லாசப் பயணத்துறை தெரிவித்துள்ள நிலையில் விடுதிகளை மூடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் விடுதிகளை மூடுவதன் மூலம் பல ஆயிரக்கணக்கானவர்கள் தமது தொழிலை இழக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சிறீலங்காவிற்கு வருவதற்காக விடுதிகளில் முற்பதிவு செய்தவர்களில் 90 வீதமானோர் அந்தப் பதிவுகளை இரத்துச் செய்துள்ளனர். இந்த நிலை ஐந்து மாதங்களுக்குத் தொடருமானால் 125 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் இழக்கப்படும். இதனால் சிறீலங்காவிலுள்ள 140 உல்லாசப் பயணிகளுக்கான விடுதிகளில் ஏற்கனவே, சில விடுதிகள் மூடப்பட்டுவிட்டன. உடனடியாக 30 விடுதிகள் மூடப்படும் சூழ்நிலை தோன்றியுள்ளது. இதன் மூலம் சுமார் 8000ற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை வாய்ப்பை இழக்கும் சூழ்நிலை தோன்றும். அத்துடன் இத்துறையினால் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ள அனைத்துத் துறைகளையும் சேர்ந்த நான்கு இலட்சம் பேர் வேலை வாய்ப்பை இழக்கும் சூழ்நிலை உருவாகும் என உல்லாசப் பயணத்துறையினரால் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரதர் அணிக்கு பிடியாணை

(19.08.01)

ரெலோ — ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் குழு ஆகியவற்றிற்கு இடையே இரு வாரங்களின் முன் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பான விசாரணையின் போது, நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காத ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிபதி எம்.இளஞ்செழியன் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# கூரை மீது ஏறி சத்தியாக்கிரகம்

(19.08.01)

குருவிட்ட பிரதேச சபையின் உபதலைவர் சிறீபால வீரசேகர என்பவர் பிரதேச சபைக்கட்டடக் கூரை மீது ஏறியிருந்து சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்துள்ளார்.

சப்ரகமுவ மாகாணத்தால் வழங்கப்படும் நிதியை பொதுவாகச் செலவு செய்யாமல் ஒரு சில இடங்களுக்குச் செலவிடுவதைக் கண்டித்தே தான் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும், சப்ரகமுவ மாகாண முதலமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் சுரங்கனி எல்லாவல ஆகியோர் வந்து தனது கோரிக்கையை ஏற்றுச் செயற்படுத்தும் வரை தனது சத்தியாக்கிரகம் தொடரும் என அவர் கூறியுள்ளார்.


உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்

VICTOR SARL

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

VICTOR SARL - 25bis, Rue des Chaufourniers, 75019 Paris. Tel: 01 42 06 59 19 Fax: 01 42 06 61 19

# தாக்கியவர்களின் தடையம் ஒன்றும் கிடைக்காது புலனாய்வுப் பிரிவு திண்டாட்டம்

## மேலும் 14 விமானப்படை அதிகாரிகள் விசாரணையில்

(19.08.01)

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தின்மீதும், விமான நிலையத்தின் மீதும் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தொடர்பான, எந்தவொரு தடயங்களும் கிடைக்காது சிறீலங்காப் புலானய்வுப் பிரிவினர் பெரும் திண்டாட்டத்தில் உள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. தாக்குதலை நடாத்தியவர்கள் எங்கு அணி திரண்டார்கள், எப்படி வந்து சேர்ந்தார்கள், அவர்கள் பயணம் செய்த தனியார் பேரு-ந்து எங்கே உள்ளது என்பன போன்ற எந்த விடயங்களுக்கும் தடையங்கள் எதுவும் கிடைக்காமையால் புலனாய்வுப் பிரிவினர் பெரும் நெருக்கடிக்குள் உள்ளதாகவும் தொடர்ந்து இரகசிய விசாரணைகளை பல்வேறு வழிகளினூடாகவும் மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, இத்தாக்குதல் தொடர்பாக மேலும் 14 விமானப் படை உயர் அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். எனினும் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை எனவும், இது வரை விமானப்படையைச் சேர்-ந்த 160 பேர் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவம் தொடர்பாக விமானப்படையின் 11 அதிகாரிகள் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. இவர்களுடன் மேலதிகமாக மேலும் 14 அதிகாரிகள் தற்போது விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த தாக்குதல் தொடர்பாக ஆறு குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்லிறவில் கடற்படை மீது தாக்குதல் 3 படையினர் பலி; 6 போராளிகள் வீரச்சாவு

(19.08.01)

திருமலை கல்லிறவு முகாமில் இருந்து 30ம் கட்டைக்கு ரோந்து சென்ற சிறீலங்கா கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயங்களுடன் தப்பிச் சென்றுள்ளனர். கடந்த 16ம் திகதி வியாழனன்று இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதன்போது கொல்லப்பட்ட படையினரிடம் இருந்து ஆயுத தளவாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இத் தாக்குதலில் ஆறு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர்.

மேஜர் செல்வமுருகன் அல்லது அன்பு (அமிர்தலிங்கம் மதன் -யாழ்.), லெப்.கார்த்திகன் (யோக ராஜா ராஜேஸ் - திருமலை), லெப்.இசைச்செல்வன் (மாதவன் விஜயகுமார் - திருமலை), லெப். கலைச்செல்வி (கனகசபை நாகமலர் - திருமலை), வீரவேங்கை காந்தரூபி (கணபதிப்பிள்ளை சந்திரமலர் - திருமலை), வீரவேங்கை பவித்திரா (மயில்வாகனம் தர்சினி - திருமலை) ஆகிய போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிக பயணிகளுடன் வந்தால் விமானக் கட்டணம் இல்லை

(19.08.01)

விமான நிலைய தாக்குதலால் பெரும் பொருளாதார இழப்பினை எதிர்கொண்டு வரும் சிறீலங்கா அரசு அதனை நிவர்த்தி செய்ய பல்வேறு வழிகளையும் கையாண்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாக தற்போது 200 பயணிகளுக்கு மேல் ஏற்றிக் கொண்டு வரும் விமானங்களு-க்கு கட்டுநாயக்காவில் தரையிறங்க கட்டணம் இல்லையென தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் டிசம்பர் 31ம் திகதி வரை அமுல் படுத்தப்படும் எனவும் ஆனால், உடனடியாக இது நடைமுறைக்கு வருவதாகவும் விமான சேவை, விமான நிலைய அபிவிருத்தி அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த புதிய நடவடிக்கையால் மாதாந்தம் சுமார் 20 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்படும் எனவும் ஆனாலும், அண்மையில் விமான நிலையத்தில் இடம் பெற்ற சம்பவத்தையடுத்து இலங்கைக்கான சிவில் விமான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவோர் அதிகளவு காப்புறுதிக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியிருப்பதால் அவர்களுக்கு வசதி செய்துகொடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளது.

## யாழில் புதிய நோயினால் பலர் பாதிப்பு

(19.08.01)

யாழ் குடாவில் புதிதாக தோன்றியுள்ள நோய் ஒன்றினால் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தோல் துளைப் புழு என்னும் சிறிய நுண்ணங்கியினாலேயே பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாய், பூனை போன்றவற்றின் மலக்கழிவிலிருந்து வெளியேறி மண்ணுடன் கலக்கும் இந்த நுண்ணங்கிப் புழு, பின்னர் மண்ணில் இருந்து மனிதர்களின் தோலுக்குத் தொற்றுவதாகவும், கிறீப்பிங் எரெப்சன் (Creeping Eruption) எனப்படும் இந்த நுண்ணங்கியால் தோல் நோய் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இந்தத் தோல் புழுவின் தொற்றுக்கு ஆளாகிச் சிகிச்சை பெற வைத்தியசாலைக்குச் சென்ற சிலரது உடலில் தோலின் கீழ்ப் புறத்தில் இவ்வாறான புழுக்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தோல் புழுவை ஒழிப்பதற்கான மருந்து வகைக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் தோலின் கீழ் உள்ள புழுவை மின் உபகரணம் ஒன்றின் மூலம் சுட்டு எரித்து அழிக்கும் மாற்று சிகிச்சை முறை மூலமே இத்தகைய நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நல்லூர் ஆலயச் சூழலில் அங்கப் பிரதிஷ்டை செய்த பலரும் கூட இந்த தோல் தொற்றுநோய்க்கு இலக்காகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் நல்லூர் ஆலய வெளி வீதியில் பக்தர்கள் அங்கப்பிரதிஷ்டை செய்வதற்கு வசதியாகப் பரவப்பட்டிருக்கும் மணல் மண்ணில் இருந்து இந்தக் கிருமித் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. அங்கப்பிரதிஷ்டை செய்யும் போது மணலில் உள்ள நுண்ணங்கிகள் இலகுவில் தோலுக்குத் தொற்ற மிக வாய்ப்பு இருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

## திருத்தப்பட்ட எயார் லைன்ஸ் பயணிகள் அச்சம்

(19.08.01)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இடம் பெற்ற தாக்குதலில் சிறீலங்கன் எயார் லைன்ஸ் சேவையின் இரு விமானங்கள் சேதமடைந்திருந்தமை தெரிந்ததே. தற்போது இதில் ஒன்று திருத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் மீண்டும் சேவையில் இணைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, சேதமடை-ந்த இவ் எயார் லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்வது ஆபத்தானதென அச்சங்கள் பல மட்டத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. விமானம் திருத்தப்பட்டுள்ள போதிலும் அதிலுள்ள சிறு பாதிப்புக்களினால் கூட பெரும் ஆபத்துக்கள் எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம் எனவும் பயணிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

## பேரியல் வாகனத் தொடரணி மீது கல்வீச்சு

(19.08.01)

ஓட்டமாவடியில் வைத்து கடந்த செவ்வாயன்று இளைஞர்கள் குழுவொன்று பேரியல் அஸ்ரப் உட்பட கட்சி ஆதரவாளர்கள் சென்ற வாகனத் தொடரணி மீது கற்களை வீசியுள்ளனர். இவர்கள் காத்தான்குடியிலிருந்து கொழும்பை நோக்கி பத்துக்கும் மேற்பட்ட வாகனங்களில் பலத்த பாதுகாப்புடன் சென்று கொண்டிருந்தபோது ஓட்டமாவடியில் வைத்து இளைஞர்கள் குழுவொன்று வாகனங்கள் மீது கல்வீச்சு நடத்தியுள்ளது. கல்வீச்சிலிருந்து பேரியல் சென்ற வாகனம் தப்பிச் சென்ற போதிலும் இவர்களின் மெய்ப்பாதுகாவலர்கள் சென்ற வாகனம் கல்வீச்சுக்கு இலக்காகிச் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுறது.


சக்தி குறூப் ஆதரவில்
தமிழர் விளையாட்டுக் கழகம் 78–95
முதன் முதலாக நடாத்தும்
தேனிசை மாலை

காலம்: 16-09-2001 பிற்பகல் 15.30 மணி
இடம்: L'Espace 'Champ de Foire',
Route des Refuznicks, Sarcelles.

ஸ்ரார் இசைக்குழுவின் கான மழை
நகைச்சுவை நாடகம்
அவதாரம் நடனக்குழுவின் மேலைத்தேய நடனங்கள்
பரத நாட்டியம்
இன்னும் பல நிகழ்வுகளுடன்....

இந்நிகழ்வின் போது நுழைவுச்சீட்டு
இலக்கங்களிற்கு நல்வாய்ப்பு பார்க்கப்படும்.
மேலதிக தொடர்புகட்கு: 06 09 32 63 83 / 06 22 28 70 43
www.ifrance.com/ast78et95

உலகெங்கும் துரிதகதியில் உங்கள் பணத்தை உரியவர்கட்கு சேர்த்திட
World Wide Money Transfer
IITAG Holding/ Innovative Independent Trust AG
இது ஒரு வரையறுக்கப்பட்ட சர்வதேச கூட்டு நிறுவனம். இவற்றின் கிளைகள் உலகெல்லாம் பரந்துள்ளன.

ஒரு மணித்தியாலத்திலிருந்து மூன்று நாட்களுக்குள் உங்கள் பணம் சேரவேண்டியவர்களிடம் அனுப்பிவைக்கவும், பிரயாண காசோலைகளை பெற்றுக்கொள்ளவும், அனுமதிபெற்ற நிறுவனம். இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஒல்லாந்து, டென்மார்க், முதலிய நாடுகளுக்கு சட்டபூர்வமாக அனுப்பிவைக்கவும், பெற்றுக்கொள்ளவும்...

தொலைபேசி இலக்கங்கள்: தலைமை அலுவலகம் சுவிற்சர்லாந்து 0041 81 354 99 11, 354 99 12. ஜேர்மனி 069 24 00 49 80

நீங்கள் உங்கள் இடங்களிலிருந்தே எங்கள் வங்கிக்கணக்கிற்கு பணத்தை செலுத்தி தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ பற்றுச்சிட்டையும் பணம் சேரவேண்டியவர்களினுடைய விபரங்களையும் அனுப்பிவைத்தால் குறித்த நேரத்தில் எங்கள் கிளைகளில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

Head office - New Address - Tele Phone and Fax

சில வங்கிகளின் விபரம், Swiss: UBS AG Chur, 208-929016.06D, Germany: Commerzbank Frankfurt 6030043 00 BLZ 500 400 00, Postbank: 17279-604 BLZ 500 100 60

தொடர்புகட்கு: IItag Holding/Innovative Independent Trust AG
7002 Chur-Switzerland http//:www/iitag.com, Email:iitag@iitag.com
Tel:++41 81 354 99 11, 354 99 12 Fax: ++ 41 81 354 99 10
அல்லது அந்நாடுகளிலுள்ள எமது கிளைகள் அல்லது பிரதிநிதிகளிடம் தொடர்பு கொள்ளவும்.

Pub

# புலிகள் மீது தாக்குதல் நடத்த சென்ற ராசிக்குழு சுட்டுக்கொலை

## சரணடைந்த புலி உறுப்பினர் சுட்டுக் கொன்றாராம்

(19.08.01)

மட்டக்களப்பு நகருக்கு மேற்கே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்துவதற்கு தலைமை தாங்கிச்சென்ற சிறீலங்கா அரசின் கூலிக்குழுவான ராசீக்குழுவின் முக்கிய உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். குட்டி என்று அழைக்கப்படும் செம்பாப்போடி மேகநாதன் (37) என்பவரே நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சனியன்று அதிகாலை, விடுதலைப் புலிகள் அணியொன்றின் மீது தாக்குதல் நடத்துவதற்காக பதுங்கியிருந்தபோதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, சிறீலங்கா இராணுவத்தினருடன் இணைந்து புலிகளின் அணி மீது தாக்குதல் நடாத்துவதற்கு திட்டமிட்ட ராசீக்குழுவினர், வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து 2 கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கின்றன குறிஞ்சாமுனைப் பகுதிக்கு வெள்ளியிரவு 8 மணிக்கு சென்று பதுங்கியிருந்துள்ளனர். இந் நிலையில் சனியன்று அதிகாலை 2 மணியளவில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலகி இராணுவத்தினரிடம் சரணடைந்த முதலைக்குடாவைச் சேர்ந்த புலிகளின் உறுப்பினர் ஒருவர், தாக்குதல் குழுவில் சென்றதாகவும் அவரே மேகநாதனை சுட்டுக்கொன்றுவிட்டு தனது ஆயுதத்துடனும் கொல்லப்பட்டவரிடம் இருந்த ஆயுதத்தையும் எடுத்துக் கொண்டு மீண்டும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் தப்பிச் சென்று விட்டதாகவும் ராசிக்குழு தெரிவித்துள்ளது.

## மிதிவெடியில் சிக்கி ஒருவர் பலி; இருவர் படுகாயம்

(19.08.01)

மிதிவெடிகளினால் பாதிக்கப்படுபவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. யாழ். இளவாலைப் பகுதியில் கடந்தவாரம் மிதிவெடியில் அகப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். காணியில் பற்றைகளை துப்புரவு செய்த சமயம் அங்கு நிலத்தில் புதையுண்டிருந்த மிதிவெடி மண்வெட்டியால் தாக்குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவத்தில் இளவாலை, உயரப்புலம் பருத்திப்புலத்தைச் சேர்ந்த நல்லையா குமார் (23) என்பவர் உயிரிழந்தார். இராமு சூரியகுமார் (33) என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி இரத்தினபுரம் என்ற இடத்தில் பனை மரத்தில் ஓலை வெட்டச் சென்ற தர்மராசா விஜயகுமார் (26) என்ற குடும்பஸ்தர் மிதிவெடியில் சிக்கி வலது காலை இழந்துள்ளார். கடந்த புதன் கிழமை காலை இச் சம்பவம் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு சத்திர சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

## உடனடியாக போர் விமானங்கள் கொள்வனவு சாத்தியமில்லை

### - சிறீலங்கா வான் படை -

(19.08.01)

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தில் இழக்கப்பட்ட போர் விமானங்களுக்குப் பதிலாக, புதிதாகப் போர் விமானங்கள் எதனையும் விமானப் படையினர் உடனடியாகக் கொள்வனவு செய்ய முடியாதளவிற்கு பெரும் நிதி நெருக்கடியிலிருப்பதாக சிறீலங்கா விமானப் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் தற்போது தம்வசமிருக்கும் குண்டு வீச்சு விமானங்கள் மற்றும் தாக்குதல் உலங்குவானூர்திகளுடன் நிலைமைகளை சமாளிக்க வேண்டும் எனவும் அது தம்மால் முடியுமெனவும் தெரிவிக்கும் விமானப்படையின் அதிகாரிகள் தரப்பு, குறுகிய காலத்தினுள் புதிய வானூர்திகளைக் கொள்வனவு செய்வதென்பது சாதாரண விடயமல்ல எனவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, புதிய போர் விமானமொன்றைக் கொள்வனவு செய்யக் குறைந்தது ஆறு மாதங்கள் செல்லுமெனவும், எனினும், அவசர தேவைக்காக பாகிஸ்தானிலிருந்து நான்கு நவீன ரக போர் விமானங்கள் வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

## விசுவமடுவில் கிபீர் தாக்குதல் மாணவன் உடல் சிதறிப் பலி

(19.08.01)

கட்டுநாயக்கா தாக்குதலின் பின்னர் தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் மீது சிறீலங்கா வான் படை தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டு வருவது தெரிந்ததே. கடந்த 13ம் திகதி கிளிநொச்சி விசுவமடுவில் கிபிர் விமானம் மேற்கொண்ட தாக்குதலில் மாணவர் ஒருவர் உடல் சிதறிப் பலியாகியதுடன், பெண் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். விசுவமடுவைச் சேர்ந்த மாணவரான பரமகுலசிங்கம் ஜெகன் அல்லது ஜெகதீஸ்(22) என்பவரே உயிரிழந்தவராவார். ஞானசுந்தரம் தவமணிதேவி என்ற பெண் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் தொடரும் விமானக் குண்டு வீச்சு சொத்துக்கள் அழிப்பு

(19.08.01)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறீலங்கா வான்படை மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்களால் பொது மக்களில் சொத்துக்கள் ஏராளமாக அழித்து நாசக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கட்டுநாயக்கா தாக்குதலின் பின்னர் கடந்த மூன்று வார காலமாக மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் மீது சிறீலங்கா வான்படை தாக்குதலை தினமும் நடத்தி வருகின்றது.

குடும்பிமலைப் பகுதியில் நேற்று முன்திம் வெள்ளிக்கிழமை சுமார் ஒரு மணிநேரம் தொடர்ச்சியான தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதேவேளை, தொப்பிக்கல காட்டுப் பகுதிகள் மீதும் கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன. அத்துடன் தொப்பிக்கல காட்டுப் பகுதிக்கு அருகிலுள்ள மீயான்கற்குளம், தரவை போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது பொது மக்கள் பாதுகாப்பு தேடிய படியால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டதாகவும் எனினும் அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டதுடன் கால்நடைகளும் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## தொடருந்து - பேருந்து மோதல் 9 பேர் பலி; 23 பேர் படுகாயம்

(19.08.01)

சிறீலங்கா சீதுவை பகுதியில் கடந்த வியாழனன்று பகல் 11.30 மணியளவில் தொடருந்துப் பாதையொன்றை கடந்துகொண்டிருந்த பேருந்தின் மீது வேகமாக வந்த தொடருந்து மோதியதில் 9 பேர் பலியாகியதுடன் 23 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

நீர்கொழும்பு - கொச்சிக்கடையில் இருந்து கொழும்பு கோட்டையை நோக்கி சென்று கொண்டிருந்த கடுகதித் தொடருந்தும் ரத்தொழுகமவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறீலங்கா அரச பேருந்துமே மோதிக் கொண்டுள்ளன. தொடருந்து பாதையை கடந்து பேருந்து செல்லும்போது அதன் பின்பகுதியில் தொடருந்தின் முன்பகுதி தாக்கியுள்ளது. இதன்போது பேருந்து நூறு அடி தூரத்திற்கு வீசியெறியப்பட்டுள்ளது. இதில் பேருந்தின் பின்புறத்தில் இருந்தவர்கள் பலியானதுடன் ஏனையவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.


EURO MINI BUS வாகன சேவை

நீங்கள் உல்லாசப் பயணங்களை மேற்கொள்ள குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனசேவை.

தொடர்புகளுக்கு: 01 48 40 82 31
06 14 12 84 70
தொலைநகல்: 01 48 40 95 64



லூர்ட்ஸ் செல்லும் பக்தர்களுக்குத் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.



வோல்த்தம்ஸ் ரோவில் புதிய நகைமாளிகை

ATN Jewellery

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்



37, Palmerston Road, Walthamstow E17 6PR
Tel: 020 8521 9767

தமிழர் தங்க நகைத் தேவைகளையும் உயர் ரக வேலைப்பாடுகளுடன் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் ATN Jewellery. இங்கு உலக தரத்தின் சின்னமான 916 ATN பொறிக்கப்பட்ட உத்தரவாத தங்க நகைகள் கிடைக்கும். என்றும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய நிறுவனம் ATN!!

Pub.Lon.

## ரஷ்யாவிலிருந்து உக்ரேயின் ஊடாக பிரிட்டிஸ் நிறுவனம் மூலமாக

# இரசாயன ஆயுதக் கொள்வனவு ஆதாரங்களை அரசு மறுக்க முடியாது

## - யோசப் பரராஜசிங்கம் -



(19.08.01)

தமிழ் மக்களுக்கு பாரிய அழிவினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சிறீலங்கா அரசு இரசயான ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளதாக வெளியான செய்திகளை சிறீலங்கா இராணுவத் தலைமை ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனால் சிறீலங்கா அரசு அதனை மறுத்த நிலையில், இந்த கொடிய இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான சாட்சியங்களையும், ஆதாரங்களையும் அரசு ஒருபோதும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதி அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது, வடக்கு கிழக்கில் வதியும் தமிழ் மக்களுக்கு முழுமையான பாதிப்பை ஏற்படுத்தும் கொடிய இரசாயன ஆயுதங்களை வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை எதிர்கொள்ள பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்துள்ளது என்ற செய்திகளை கண்ணுற்ற நான் பெரும் கவலையும், அதிர்ச்சியும் அடைகின்றேன். ஆர்.பி.ஓ.சிமெல் றொக்கட் லோஞ்சர் என்ற தொழில்நுட்ப பெயருடைய ஆயிரம் ஆயுதங்களை பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்துள்ளதென்ற உண்மை வெளியாகியுள்ளது. ரஷ்ய நாட்டில் ஒரேயொரு கம்பனியால் தயாரிக்கப்படும் இவ் ஆயுதங்களை ரஷ்யாவிலிருந்து உக்ரேயின் நாட்டு கம்பனி ஒன்றின் மூலம் வரவழைத்து பிரிட்டிஸ் ஆயுதக் கொள்வனவு கம்பனி மூலமாக பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்துள்ளது என்ற உண்மையை நான் அறிந்துள்ளேன்.

நிலமை இப்படியிருக்கும் பொழுது இதுபோன்ற அழிவுகளை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்கள் தாம் கொள்வனவு செய்யவில்லை என்று அரசாங்கம் மறுப்பு தெரிவிப்பதில் எதுவித ஆச்சரியமும் இல்லை. காரணம் இக்கொள்வனவு சம்பந்தமான ஆதாரங்களையோ அல்லது உண்மையையோ அரசு ஒருபோதும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இது சம்பந்தமாக தங்கள் இராணுவ பேச்சாளர் சென்ற வாரம் பி.பி.சி.சிங்கள சேவையான சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில்; இந்த ஆயுதத்தை கொள்வனவு செய்துள்ளோம் ஆனால் அதனைப் பாவிக்கமாட்டோம் என்ற உண்மையையும் வெளியிட்டுள்ளார் என்பதையும் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

அமெரிக்க நாட்டின் இரகசிய பாதுகாப்பு முகவரின் அறிக்கையின் படி இந்த இரசாயன ஆயுதத்தின் வெடிப்பு முனைப்பகுதி நச்சுத்தன்மையுடையது என்றும் இது ஒருவேளை வெடிக்கத் தவறினாலும் மிகவும் ஆபத்தான ஆயுதம் என்றும் தெரிவித்துள்ளது.

எனவேதான் மனித குலத்திற்கு அழிவு ஏற்படுத்தும் நச்சுத்தன்மையுள்ள இந்த இரசாயன ஆயுத பாவனையை அமெரிக்கா தடை செய்துள்ளது. இவ் ஆயுதம் மிகவும் நவீன தொழில் நுட்ப ஆகாய எரிபொருள் வெடிமருந்தை உள்ளடக்கியதாகும். இதனை ஏவி வெடிக்க வைப்பதன் மூலம் வெளியாகும் வெடிமருந்து அதன் புகை மண்டலம் படரும் இடம் எல்லாம் எரித்து சாம்பலாக்கி விடும். இந்த ஆயுதத்தை கட்டடங்களை நோக்கி ஏவுவதன் மூலம் ஏற்படும் சேதம் 122 மில்லி மீட்டர் ஆட்டிலரி ஏவுகணையின் தாக்கத்துடன் ஒப்பிட முடியும்.

கிராமப்புறங்களில் இவ் ஆயுதத்தை போராளிகளுக்கு எதிராக தனித்து ஏவிவிடமுடியாது. காரணம் இதன் பாரிய வெடிமருந்துத் தன்மையும், அதனால் ஏற்படும் அழிவுகளில் இருந்தும் சாதாரண பொது மக்கள் எதுவித பாதுகாப்பும் பெறமுடியாது. 1993ம் ஆண்டு அமெரிக்க நாட்டின் பாதுகாப்பு ஏஜென்சியால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த ஆயுதத்தை மனித சமூகத்திற்கு எதிராக பாவிக்கும் பொழுது இதனால் பாதிப்புக்குள்ளானவர்கள் எரிகாயங்களுக்கு ஆளாவதுடன் இவ் நச்சுத் தன்மையான எரிபொருள் சுவாசிக்கும் பொழுது மனித சுவாசப் பைகளும் பாதிக்கப்படுகின்றது என்று கூறியுள்ளது.

இந்த ஆயுதத்தை ரஷ்ய நாடு செச்சினிய நாட்டு மக்களுக்கு எதிராக உபயோகித்தபோது சர்வதேச மனித உரிமை குழுக்கள் கடுமையான கண்டனம் தெரிவித்தனர். 'மனித உரிமை வார்ச்' என்ற நிறுவனம் அதனது 2000 ஆண்டு பெப்ரவரி மாத அறிக்கையில் இவ் ஆயுதத்தை செச்சினிய நாட்டில் உபயோகித்ததன் மூலம் ஏற்பட்ட மனித அழிவுகளையும் அதன் விளைவுகளையும் விளக்கியுள்ளது. எனவே இந்த ஆயுதத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி தங்களுக்கு நான் விளக்கத் தேவையில்லை. காரணம் இந் நாட்டின் தலைவி என்ற வகையிலும், முப்படைத் தளபதி என்ற வகையிலும் இவ் வாயுதம் சம்பந்தமான சகல தீமைகளையும், அழிவுகளையும் ஏற்கனவே தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

வியட்நாம் நாட்டிற்கு எதிராக ஜென்சி ஒறேஞ் என்றழைக்கப்படும் நச்சுத்தன்மையுடைய போலியன் என்ற இரசாயன ஆயுதத்தை அமெரிக்க நாடு உபயோகித்ததின் மூலம் அந்த நாடு உலக நாடுகளின் கெட்ட பெயரை சம்பாதித்துக் கொண்டது மட்டுமன்றி அப்போரில் தோல்வியை தழுவியது என்ற உண்மையை இச்சந்தர்ப்பத்தில் தங்களுக்கு நினைவு கோர விரும்புகின்றேன். காலத்திற்கு காலம் இந்த நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் தங்கள் அரசு உட்பட தமிழர் பிரச்சினை சம்பந்தமாக தீர்வு யோசனைகளை இடை நடுவில் கைவிடுவதும் அதற்கு மாறாக வீழ்ச்சி அடைந்து வரும் பொருளாதாரத்துக்கு மத்தியிலும் தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாசைகளை அடக்கி ஒடுக்கும் நோக்குடன் மிகவும் கொடிய ஆயுதங்களை கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை செலுத்தி வருவதும் தங்களுக்கு நன்றாகத் தெரியும். தங்கள் காலம் சென்ற தந்தை உணர்ந்து கொண்டது போன்று தமிழர் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினையாகும். எனவே இப் பிரச்சினை அரசியல் மூலமே தீர்க்கப்படல் வேண்டும். ஆயுதத்தின் மூலம் தீர்த்து விடலாம் என்ற தப்பான எண்ணத்தை தாங்கள் கைவிடவேண்டும். பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க வேண்டுமேயன்றி பயங்கர ஆயுதங்களை பாவிப்பதன் மூலம் தீர்க்க முடியாது என்ற யதார்த்தத்தை தாங்கள் உணர வேண்டும்.

இதுபோன்ற பயங்கரமானதும், அழிவுகளை ஏற்படுத்தும் முயற்சிகளை தங்கள் அரசு மேற்கொள்வதன் மூலம் இந்நாட்டிற்கு பெரும் அழிவு ஏற்படுவதுடன் சர்வதேச சமுகத்தின் முன் இந்நாடு ஒரு ஒதுக்கப்பட்ட நாடாகவே கருதப்படும் என்ற உண்மையை தாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை உபயோகித்து தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாசைகளை அடக்கி ஒடுக்கி விடலாமென்ற கொள்கையை கைவிட்டு நோர்வே நாட்டின் சமாதான முயற்சியை தொடர்வதுடன், ஒரு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு வடக்கு கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்கி, அவர்களுடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடாத்தி யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவேண்டிய அவசிய நடவடிக்கையை மேற்கொள்வதே அறிவுடைய செயலாகுமென தங்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன். இவ்வாறு அக் கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, அரசு இரசாயன ஆயுதங்களை வடகிழக்கு மக்களுக்கு எதிராக பாவிக்க முற்படுவது தமிழ் மக்களை பூண்டோடு அழிக்க முற்படும் செயலாகும். இச்செயல் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதாகும் என எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்ற குழு அறையில் நடைபெற்ற கூட்டு எதிர்க் கட்சிகளது கூட்டத்திலும் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்திருந்தார். அத்துடன் அரசு இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளது தமிழ் மக்களை அழிக்கும் ஒரே நோக்கிலாகும். எனவே இச்சபை இதனை வன்மையாக கண்டிக்கிறது என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். ஆனால், அதற்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஏற்கனவே இக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டதால் இத்தீர்மானத்தை ஏனைய கட்சித் தலைவர்களுடன் பேசி அடுத்த கூட்டத்தில் எடுத்துக் கொள்ளலாம் என தெரிவித்தார். அத்துடன், இப்பிரச்சினை சம்பந்தமாக கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கும் சர்வதேச அமைப்புக்களுக்கும் அறிக்கை ஒன்றினையும் பரராஜசிங்கம் அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கட்டுநாயக்கா அருகில் விமான எதிர்ப்பு ரவைகள் கண்டெடுப்பு

(19.08.01)

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சீதுவை அமந்தொழுவ பகுதியின் வயல் வெளியில் இருந்து கடந்த வெள்ளியன்று விமான எதிர்ப்பு ரவைகள் மற்றும் ரீ.56 ரக துப்பாக்கி ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக, சிறீலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் இவற்றினைக் கண்டு, இது தொடர்பாக தமது உறவினர்களுக்கு தெரிவித்ததையடுத்து பொலிசாருக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் இவற்றை மீட்டதாகவும் அதில் 26 ரவைகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தை தாக்கவந்த புலிகளே இவற்றை அங்கு விட்டுச் சென்றிருக்கலாம் என பொலிசார் மேலும் தெரிவிக்கின்றனர்.




லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் தனித்துவமான உணவகம்

சுவை அருவி

உங்கள் திருமண, பிறந்தநாள், மங்கலகரமான வைபவங்களுக்கு சுவைமிக்க உணவு வகைகள் குறித்த நேரத்தில் தயாரித்துக்கொடுக்கப்படும்.

ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்!
மீண்டும் மீண்டும் வரத்தூண்டும் இடம்!!

Suvai Aruvi
96, High Street,
Colliers Wood
London SW19 2BT

Srilankan & South Indian Restaurant

Tel: 020 8286 6677/020 8543 6266

Pub.Lon

# பத்திரிகையாளர்கள் விரட்டி... விரட்டி தாக்கப்பட்டனர்

## - பாதிக்கப்பட்ட நிருபர்கள் தெரிவிப்பு

திராவிட முன்னேற்றக்கழக தலைவர் கலைஞர் கருணாநிதி கைது செய்யப்படும்போது பொலிசார் மேற்கொண்ட வன்முறைகளை கண்டித்து கடந்த 12ம் திகதி தி.மு.க.வினர் மேற்கொண்ட பேரணியில் பத்திரிகையாளர்கள் பொலிசாரால் தாக்கப்பட்டமை தெரிந்ததே. இச் சம்பவங்கள் தொடர்பாக பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் வன்முறையை கண்டித்து கடந்த 15ம் திகதி சென்னையில் பத்திரிகையாளர்கள் உண்ணாவிரதம் ஒன்றை நடாத்தினர். இதன்போது பேரணியில் தமக்கு ஏற்பட்ட அவலங்களை உண்ணாவிரதத்தின்போது நடைபெற்ற உரையில் குறிப்பிட்டார்கள்.

இச் சம்பவம் பற்றி பேசிய நக்கீரன் நிருபர் பிரகாஷ் தெரிவித்ததாவது:

நான் எனது பத்திரிகை சார்பாக பேரணியை நேரில் பார்த்து செய்தி சேகரிக்கச் சென்றேன். பேரணி பொலிஸ் டி.ஜி.பி அலுவலகம் அருகே சென்றுகொண்டு இருந்தது. சரியாக இரவு 7 மணிக்கு கலவரம் ஆரம்பித்தது. கலவரம் நடந்ததை படம் எடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று நிருபர்கள் பலரின் அலறல் சத்தம் கேட்டது. அந்த நேரம் நான் காந்திசிலை அருகே நின்றுகொண்டு இருந்தேன். எனக்கு அருகே 'ஜூனியர் விகடன்' பத்திரிகை நிருபர் விக்னேஷ் அலறிக்கொண்டு என்னிடம் ஓடி வந்தார். அண்ணா என் 'காமிராவை' பறித்து கொண்டனர். என்னை பயங்கரமாக பொலிசார் அடிக்கிறார்கள். என்னை காப்பாற்றுங்கள் என்று கத்தினார். அப்போது எனது பத்திரிகை ஆசிரியர் காமராஜ் கைதொலைபேசி மூலம் என்னிடம் தொடர்பு கொண்டு பேசினார். அவரிடம் அண்ணா பத்திரிகையாளர்களை அடிக்கிறார்கள் என்று கோசமிட்டேன். உடனே வேறு ஒரு புறம் இருந்த எனது பத்திரிகையைச் சேர்ந்த நிருபர் அன்பு அலறிக்கொண்டு வந்தார். பொலிசார் என்னை அடிக்கிறார்கள் என்னை காப்பாற்றுங்கள் என்று கத்தினார். நான் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக்கொண்டு இருந்தேன்.

இந்த கொடூரமான சம்பவம் நடக்கும் போது காந்தி சிலை அருகே உள்ள மணி குண்டு அருகே நின்றுகொண்டு ஜெயா டி.வி.நிருபர் ஒருவர் படம் பிடித்துக்கொண்டு இருந்தார். இதற்கு பொலிசார் பாதுகாப்பாக நின்றுகொண்டு இருந்தனர். அப்போது என்னை நோக்கி ஒரு பொலிஸ் கும்பல் அடிக்க வந்து கொண்டு இருந்தது. உடனே நான் அங்கிருந்து தப்பி ஓடி டி.ஜி.பி. அலுவலகத்தினுள் புகுந்து கொண்டேன். எனது புகைப்படக்காரர் சம்பத்தை பொலிசார் தாக்கிக்கொண்டு இருந்தனர்.

பொலிஸ் டி.ஜி.பி. அலுவலகத்தில் உயர் அதிகாரி சந்தீப்பட்டீல் இருந்தார். அவரிடம் சார் உங்களை பற்றி உயர்வாக எழுதிய பத்திரிகையாளர் விக்னேஷ் தாக்கப்படுகிறார். தடுத்து நிறுத்துங்கள் என்று கூறினேன். நான் என்ன செய்வது என்று அவர் கூறிக்கொண்டு இருந்தபோது அவரையும் தாக்குகிறார்கள். நான் அருகே ஒதுங்கிச் சென்று பார்த்தால் அங்கு 'சீ.டி.வி' நிருபர் வித்யாவை ஒரு பொலிஸ் அணி அலுவலகத்தினுள் சூழ்ந்துகொண்டு டி.வி.யில் எங்களை படம் பிடித்தாயே அந்த 'கேசட்' எங்கே என்று கேட்டு மிரட்டினர். அப்போது நான் குறுக்கிட்டு அண்ணா அவர் டி.வி.நிருபர் என்று கூறினேன். நிருபர் என்று தெரியாமல் அடிக்கிறார்கள் என்று கருதி அப்படி கூறினேன். ஆனால் அவர்கள் தெரிந்தேதான் அடிக்கிறார்கள் என்று பின்னர்தான் புரிந்தது. பெண் நிருபரை தகாத வார்த்தைகளை கூறி பொலிசார் திட்டினர். கேசட்டை தராவிட்டால் விட மாட்டோம் என்று கூறி மிரட்டினர். பின்னர் என்னிடம் கேசட் எங்கேடா என்று கேட்டு மிரட்டினர். நான் டி.ஜி.பி. அலுவலகத்தினுள் தப்பி ஓடினேன். என்னை பொலிசார் துரத்தி வந்தனர். நான் டி.ஜி.பி. தினந்தோறும் செல்லும் வழியில் உள்ள படிக்கட்டு வழியாக மேலே ஏறி தப்பி ஓட முயன்றேன். ஆனால் எனது கால் தடுமாறி கீழே விழுந்தேன். என்னை துரத்தி வந்தவர்கள் கீழே விழுந்த என்னை கொடூரமாக தாக்கினார்கள். கண்மூடித்தனமாக தாக்கினார்கள். தாக்கிவிட்டு 'டேய் நாயே கேசட்டை எடுடா' என்று கேட்டார்கள். என்னிடம் இருந்த சிறிய 'காமிராவை' எடுத்து உடைத்துவிட்டு அதில் உள்ள 'பிலிமை' அகற்றினர். கடுமையாக தாக்கிய என்னை அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட்டனர். நான் கதறி அழுததை பல பொலிசார் பார்த்துக்கொண்டு இருந்தனர். நிருபர்கள் இப்படி தாக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். பொலிசார் திட்டமிட்டு இப்படி தாக்குதல் நடத்தி உள்ளனர்.

இதேவேளை, ஆஜ்தக் நிருபர் ஜெயஸ்ரீ பேசுகையில்,

நான் இந்த சம்பவத்தை கேள்விப்பட்டதும் இதை படம் பிடிக்க சென்றேன். சம்பவ இடத்திற்கு எனது சிறிய காமிராவுடன் சென்றேன். நான் சிறிது நேரம் படம் பிடித்தேன். அதற்குள் பொலிசார் என்னை வந்து சூழ்ந்து கொண்டனர். என்னை தகாத வார்த்தைகளால் கடுமையாக திட்டிக்கொண்டு எனது 'காமிராவை' பிடிங்கினர். நான் எந்த படமும் எடுக்கவில்லை என்று கூறியதை அவர்கள் கேட்காமல் என்னை கடுமையாக தாக்கிவிட்டு என்னிடம் உள்ள 'காமிராவை' பிடுங்கி அதை காட்டுமிராண்டித்தனமாக கீழே போட்டு உடைத்தனர். பின்னர் 'கேமராவில்' உள்ள 'கேசட்டை' எடுத்து உடைத்தனர். அத்துடன் உடைந்த எனது 'காமிராவை' எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர். 'காமிராவை' திரும்ப தரும்படி கேட்டேன். ஆனால் இது வரை அதை தர மறுத்துவிட்டார்கள். பொலிசார் பெண் நிருபர் என்று பார்க்காமல் இப்படி காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டனர் என்றார்.

இதேவேளை பெண் நிருபர் சுஸ்மிதா கூறுகையில், நான் சம்பவம் அன்று நேரில் இருந்தேன். நிருபர்களை பொலிசார் கடுமையாக தாக்கிக்கொண்டு இருந்தார்கள். நிருபர்கள் என்று கூறினாலே அடிக்கிறார்கள். நீங்கள் இப்படி செய்வது நியாயமா என்று கேட்டேன். பொலிசார் தாக்குவதை படம் எடுத்துவிட்டோம், இதை வெளியிட்டால் தவறு செய்தவர்கள் பற்றிய விவரம் தெரிந்துவிடும் என்று கருதி இப்படி பத்திரிகை நிருபர்கள் கையில் இருந்த 'காமிராவை' பறித்தனர். பல நிருபர்கள் தப்பி ஓடினார்கள். பொலிஸ் டி.ஜி.டி. அலுவலகத்தினுள் நிருபர்களை சூழ்ந்துகொண்டு பொலிசார் தாக்கினார்கள் எனக் கூறினார்.

இதேவேளை இன்னொரு இதழின் நிருபரான ரேவதி கூறுகையில்,


நானும் எனது நிருபர்களை காப்பாற்ற சென்றேன். பல நிருபர்களை டி.ஜி.பி. அலுவலகத்தினுள் சிறை வைத்து இருந்தனர். மணீஷ் என்ற கேமராமேனின் தலையில் பொலிசார் பித்தளை லத்தியால் ஓங்கி அடித்தனர். இதனால் அவரது மண்டை உடைந்து இரத்தம் சொட்டியது. அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வாகனம் தர பொலிசார் மறுத்துவிட்டனர். அதன்பிறகு ஒரு வண்டியை பிடித்து காயம் அடைந்தவரை மருத்துவமனையில் சேர்த்தோம். காயம்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்க்க கூட பொலிசார் உதவி செய்ய மறுத்துவிட்டனர். பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டு உள்ளது. இதை உடனே தடுத்து நிறுத்தவேண்டும் எனக் கூறினார்.

## இந்தியச் செய்திகள்

# சுதந்திர தினத்தில் பத்திரிகையாளர் மீதான வன்முறைக்கு எதிராக உண்ணாவிரதம்

இந்தியாவின் சுதந்திர தினமான கடந்த ஒகஸ்ட் 15ம் திகதி பத்திரிகையாளர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியுள்ளனர். கடந்த வாரம் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரணியின்போது பத்திரிகையாளர்கள் பொலிசாரால் தாக்கப்பட்டதற்கு எதிராகவே இவ் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக இந்திய குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து மனு ஒன்றை கையளித்தனர். மனுவை ஏற்றுக்கொண்ட பிரதமர், பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு தனது வருத்தத்தை தெரிவித்ததுடன்,



இவ் விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சென்னை பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் பல முக்கிய இதழ்களின் ஆசிரியர்களும் கலந்துகொண்டு தமது கண்டனங்களை தெரிவித்துள்ளனர். இதேவேளை இவ் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக சென்னை தவிர்ந்த தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலும் பத்திரிகையாளர்கள் கறுப்பு பட்டி அணிந்து அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

# தலைமுடியால் 80 கோடி வருமானம்

திருப்பதியில் பக்தர்கள் காணிக்கை செலுத்தும் தலைமுடியை விற்பனை செய்வதன் மூலம் வருடம் 80 கோடி ரூபாய் வருமானமாக கிடைப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இங்கு சேகரிக்கப்படும் தலைமுடி மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஏலத்தில் விடப்படுகின்றது. இதன் மூலம் சுமார் 20 கோடிரூபாய் வருமானம் கிடைக்கின்றது. வருடத்தில் நான்குமுறை நடைபெறும் இவ் ஏலத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 80 கோடி ரூபாய் வரை வருமானம் கிடைப்பதாக தெரிவிக்கப்படுகிறது.




# தேர்தலில் போட்டியிடாமல் அமைச்சரவையில் நீடிக்ககூடாது

## - உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆகாமல் அமைச்சராக ஆறு மாதங்களுக்கு மேல் பதவியில் இருக்க முடியாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.


பஞ்சாப் மாநிலத்தில் முன்பு 1995ம் ஆண்டு ஹர்சரண்சிங் பிரார் அமைச்சரவையில் அமைச்சராக நியமிக்கப்பட்டவர் தேஜ் பிரகாஷ்சிங். இவர் அப்போது சட்டப்பேரவை உறுப்பினர் பதவியில் இல்லை. 6 மாதம் அமைச்சர் பதவியில் நீடித்த தேஜ்பிரகாஷ் சட்டப்பேரவை உறுப்பினராக முடியவில்லை. இதைத் தொடர்ந்து தேஜ்பிரகாஷ்சிங் 1996ம் ஆண்டு மார்ச் மாதம் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். இதை அடுத்து பஞ்சாபில் புதிய முதல்வராக ரஜிந்தர்கவுர் பட்டல் முதல்வராக பதவி ஏற்றார். ரஜிந்தர்கவுர் தனது அமைச்சரவையில் தேஜ்பிரகாஷ் சிங்கை மீண்டும் அமைச்சராக நியமித்தார். சட்டப்பேரவை உறுப்பினர் அல்லாத ஒருவரை மீண்டும் அமைச்சராக நியமிக்கப்பட்டது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று பஞ்சாப் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இதை அடுத்து இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து இப்போது தீர்ப்புக் கூறி இருக்கிறது. சட்டப்பேரவை உறுப்பினர் பதவிக்கு தேர்ந்து எடுக்கப்படாத ஒருவர் 6 மாதத்துக்குப் பிறகு அமைச்சர் பதவியில் நீடிக்கக்கூடாது. மீண்டும் அவரை அமைச்சர் பதவியில் நியமித்தது செல்லாது என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறிஉள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படாமல் முதலமைச்சராகி கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஒடுக்கியே திருவோம்

## - பிரதமர் வாஜ்பாய் -



எல்லை தாண்டிய பயங்கரவாதங்களை ஒடுக்கியே திருவோம் என பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற 55வது இந்திய சுதந்திர தினத்தில் கலந்து கொண்டு பேசியபோது இதனைத் தெரிவித்துள்ளார். செங்கோட்டையில் கடந்த புதனன்று நடைபெற்ற இவ் விழாவில் மேலும் பேசுகையில், பாகிஸ்தானின் பயங்கரவாதச் செயல்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்து பிரதமர்; காஸ்மீரை தான் எடுத்துக்கொள்ளலாம் என நினைத்தால் அது தோல்வியில்தான் முடியும் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை, தமிழகத்தில் நடந்த விழாவில் பேசிய தமிழக முதல்வர் ஜெயலலிதா, இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரான தீவிரவாத, தேசவிரோத கும்பல்களை அடியோடு அழிப்பேன் எனக் கூறியுள்ளார்.

# வெடிமருந்து ஆலை விபத்தில் 23 பேர் பலி

தமிழகம் வேலூர் அருகே உள்ள காட்பாடி எனும் இடத்தில் அமைந்துள்ள தமிழக அரசின் வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி



23 பேர் பலியானார்கள். கடந்த வியாழனன்று இச் சம்பவம் இடம்பெற்றது. வெடிமருந்து தயாரிக்கும் இவ் ஆலையில் வெடிபொருளின் இறுதிப் பணிகளைப்



பூர்த்தி செய்யும் பகுதியில் திடீரென வெடிபொருட்கள் வெடித்து சிதறியுள்ளன. இதன்போது அப் பகுதியின் கூரைப்பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது. இதில் அப் பிரிவில் பணியாற்றிய 23 பேர் பலியாகியுள்ளனர். சிலர் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து அப் பகுதிக்கு விரைந்த மீட்புப் படையினர், தொடர்ந்து வெடிபொருட்கள் வெடிக்காமல் இருப்பதற்காக தண்ணீர் அடித்து வெடிபொருட்கள் அனைத்தையும் ஈரப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை இறந்த பலரது உடல்கள் சிதறுண்டு கிடந்ததால் அவைகள் உடல்களுடன் பொருத்தப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ் வெடிவிபத்திற்கான காரணம் என்னவென்று இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இதனைக் கண்டுபிடிக்கும் பணியில் பொலிசார் ஈடுபட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறாமல் தடுப்பது குறித்தும் ஆராய்ந்து வருகின்றனர்.

# தொடருந்து மோதி 14 பேர் பலி; விபத்தில் 12 பேர் பலி

தொடருந்து பாதை ஒன்றில் சென்றுகொண்டிருந்த 14 பேர், வேகமாக வந்த தொடருந்து மோதியதில் பலியாகியுள்ளனர். மராட்டிய மாநிலத்தில் அசோகவோன் மத்திய தொடருந்து நிலையத்திற்கு அருகில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொடருந்து ஒன்றில் வந்திறங்கிய 14 பேர் தொடருந்து பாதை ஒன்றினூடாகச் சென்று கடக்க முயன்றவேளையே வேகமாக வந்த கிதாஞ்சலி துரிதகதி தொடருந்தினால் மோதப்பட்டு பலியாகியுள்ளனர். பலியானவர்களில் 6 பெண்களும் 5 குழந்தைகளும் அடங்கி இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பீகாரில் இரு தொடருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 12 பேர் பலியாகி 48 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். ஒரே தொடருந்துப் பாதையில் சரக்கு ஏற்றி வரும் தொடருந்தும், பயணிகள் தொடருந்தும் எதிர் எதிராக வந்தபோதே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

# இராணுவ ஆட்சேர்ப்பில் தடியடி நால்வர் படுகாயம்

சென்னையில் இராணுவ ஆட்சேர்ப்பின்போது ஏற்பட்ட நெருக்கடியை சமாளிக்க பொலிசார் நடாத்திய தடியடி பிரயோகத்தில் நால்வர் காயமடைந்தனர். கடந்த வெள்ளியன்று, சென்னை தீவுத் திடலில் உள்ள இராணுவ ஆட்சேர்ப்பு மையத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் குவிந்தனர். ஆரம்பத்தில் வரிசையில் நின்ற இவர்கள், இளைஞர்கள் கூட்டம் அதிகமாக வரிசை நிரல் குழம்பி கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து இவர்களை கட்டுப்படுத்த பொலிசார் தடியடிப்பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது காயமடைந்த நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சிவாஜியின் பெயரில் நடிப்புக்கு தனிக்கல்லூரி

மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பெயரில் நடிப்பிற்கென தனியாக பயிற்சிக் கல்லூரி அமைக்கப் போவதாக அவரது மகனும் நடிகருமான பிரபு தெரிவித்திருக்கிறார். சிவாஜியின் அஸ்தி கரைக்கும் நிகழ்ச்சியில் கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் அஸ்தியின் ஒரு பகுதி கரைக்கப்பட்டது. இன்றைய தினம் கேரளா சுற்றுலா மாளிகையில் நிருபர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே பிரபு இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள புண்ணிய நதிகள் அனைத்திலும் சிவாஜி கணேசனின் அஸ்தி கரைக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் 26ம் திகதி இராமேஸ்வரம் கடலிலும் அஸ்தி கரைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# 2001ன் சிறந்த பெண்மணியாக ராஜஸ்தான் அமைச்சர்

அமெரிக்க வரலாற்று நிறுவனம் வழங்கிவரும் சிறந்த பெண்மணிக்கான விருதில், 2001ம் ஆண்டின் சிறந்த பெண்மணியாக ராஜஸ்தான் மாநிலத்தின் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கமலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. சமூக, பொருளாதாரத் துறைகளில் இவர் ஆற்றிய பணிக்கு இவ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. ராஜஸ்தான் ஹஷ்பூராவில் நடைபெற்ற விழாவில் மாநில முதல்வர் இவ் விருதினை வழங்கி கௌரவித்தார்.

# தமிழக பத்திரிகையாளர் மீதான தாக்குதலுக்கு இந்திய பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதற்கு இந்திய பத்திரிகைகள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. கடந்த 12ம் திகதி சென்னையில் நடைபெற்ற தி.மு.க பேரணி குறித்து செய்தி சேகரிக்கவும், புகைப்படம் எடுக்கவும் சென்ற பத்திரிகையாளர்கள் மீது தமிழக காவல்துறையினர் மிருகத்தனமாக தாக்குதல் நடத்தினர். இதில் பலர் படுகாயம் அடைந்தனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனை கண்டித்து சென்னையில் 500-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதற்கு இந்திய பத்திரிகைகள் சங்கம் (ஐ.என்.எஸ்) கடும் கண்டனத்தை தெரிவித்து உள்ளது. இந்த சங்கத்தின் தலைவர் விஜய் குமார் சோப்ரா இது தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறியுள்ளதாவது: சென்னையில் கடந்த 12ம் திகதி இரவு பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களை சேர்ந்த செய்தியாளர்களையும், புகைப்படக்காரர்களையும் காவல் துறையினர் ஈவுஇரக்கமின்றி கடுமையாக தாக்கியுள்ளனர். இது மிகவும் கண்டனத்திற்குரியது.

தமிழ்நாட்டில் பத்திரிகையாளர்களின் அரசியலமைப்புச் சட்ட உரிமைகளான பேச்சுரிமை எழுத்துரிமையை காவல்துறையினர் சட்டவிரோதமாக பறித்து அத்துமீறலில் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்குள் பத்திரிகையாளர்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்ட சம்பவம் இரண்டுமுறை நடந்துள்ளது. பத்திரிகையாளர்களின் பேச்சுரிமை, எழுத்துரிமையை காவல்துறையினர் தாக்கியுள்ளனர் என்பதில் சந்தேகமே இல்லை. இதில் தமிழக அரசு தலையிட்டு தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# உலகச் செய்திகள்

## மசிடோனியாவில் நேட்டோ தளபதி

(20.08.01)

வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் எனப்படும் நேட்டோவை இராணுவ தளபதியான ஜெனரல் ஜோசப் ரள்ஸ்தன் திங்களன்று மசிடோனியா வந்து சேர்ந்தார். இவர் சிலமணி நேரங்களே அங்கு தங்கியிருந்து தனது தளபதிகள் மற்றும் அரச தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார் எனச் சொல்லப்படுகிறது. அல்பேனிய தீவிரவாதிகளுக்கும், மசிடோனிய அரசிற்குமிடையே கைச்சாத்திடப்பட்டுள்ள சமாதான ஒப்பந்தத்தினை செயற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகைகளைக் கண்டறியவே அவர் அங்கு சென்றுள்ளார். 1991ம் ஆண்டு முதல் நேட்டோ படைகள் மூன்றாவது முறையாக பல்கன் பிராந்தியத்தில் தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. பெல்ஜியத் தலைநகர் பிரசல்சிற்கு திரும்புமுன் மசிடோனிய பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சுக்களை மேற்கொள்ளுவார். அத்துடன் நேட்டோவின் தூதுவர்களையும் அவர் சந்திக்கவுள்ளார். செவ்வாயன்று சுமார் 3500 பேர்கொண்ட பலம்மிக்க நேட்டோ படைகள் மசிடோனியாவிற்கு அனுப்பப்படலாம் என நம்பப்படுகின்றது. இவர்கள் அல்பேனிய தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களை பெற்றுக் கொள்வார்கள். மசிடோனிய அரசு அல்பேனிய சிறுபான்மை மக்களுக்கு சாதகமான, அவர்களுக்கான உரிமையை வழங்கும் சட்ட சீர்திருத்தங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றும் பட்சத்தில் அல்பேனியத் தீவிரவாதிகள் தங்களது ஆயுதங்களை நேட்டோ படைகளிடம் ஒப்படைக்கத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்தனர். இதற்கிடையே தலைநகர் ஸ்கோப்பியேக்கு மேற்கில் றெட்டோவோ கிராமப் புறப் பகுதிகளில் மீண்டும் இரு தரப்பினர்களுக்குமிடையே மோதல்கள் மூண்டன.

அரசியல் இராணுவ நகர்வுகள் சாதகமாக அமையும் பட்சத்தில் அடுத்துவரும் 30 நாட்களுக்குள் ஆயுத களைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என நேட்டோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனாலும் அல்பேனிய தீவிரவாதிகளின் ஆயுதங்களை முழுமையாக பெற்றுக் கொள்வதில் நேட்டோவிற்கு வெற்றி கிட்டப்போவதில்லை என பல்கன் அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தேசிய விடுதலை இராணுவம் என தம்மை அழைத்துக் கொள்ளும் தீவிரவாதிகளின் தலைவர் அலி அகமட் தாம் நேட்டோ படையினரிடம் ஆயுதங்களை ஒப்படைக்க தயாராக உள்ளோம் எனக் கூறினார். அவர் யுத்தம் முடிந்துவிட்டதென நாம் நம்புகிறோம். அத்துடன் நேட்டோ எமது உரிமைகளை பாதுகாக்கும் எனவும் நாம் நம்புகிறோம் என்றார்.


இது இப்படியிருக்க மற்றுமொரு தீவிரவாத அமைப்பான அல்பேனிய தேசிய இராணுவம் தாம் பரந்த அல்பேனியாவை அமைக்கும்வரை யுத்தத்தைத் தொடருவோம் எனக் கூறியுள்ளனர். அவ் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் சர்வதேச அழுத்தங்களின் மத்தியில் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தங்களெல்லாம் தற்காலிகமானவையும், செயற்படுத்தப்பட முடியாதவையுமாகும் தேசிய விடுதலை நோக்கிய எமது யுத்தம் தொடர்ந்தும் இடம்பெற வேண்டும் எனக் கூறியுள்ளனர். அத்துடன் தேசிய விடுதலை இராணுவத்தை யுத்தத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுமாறும் மசிடோனியாவை பிரித்து பரந்த அல்பேனியாவை அடையும் வரை யுத்தத்தை தொடர்ந்தும் சகல அமைப்புக்களும் நடாத்த வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

## பாலஸ்தீன நகரங்கள் மீதான தாக்குதல்கள் தொடரும்

**- இஸ்ரேல் -**

(19.08.2001)

பாலஸ்தீன அதிகாரசபையின் ஆளுமைக்கு உட்பட்ட பகுதிகள், நகரங்கள்மேல் தொடர்ந்தும் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று பிரதமர் ஷரோனின் பிரதான ஆலோசகர் அவி பாஸ்னர் கூறியுள்ளார். பாலஸ்தீன தன்னாட்சிப் பகுதிகளுக்குள் இஸ்ரேலிய படைகள் தொடர்ந்தும் முற்றுகைகளை மேற்கொள்ளும் என்றும் தேவையேற்படும்போது அப்பகுதிகளில் தேடுதல்கள், கைதுகள் போன்றவைகளையும் மேற்கொள்ள இஸ்ரேலிய இராணுவம் தயாராகவே உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். இது ஒரு தற்பாதுகாப்பு செயற்பாடு என்றும் பயங்கரவாதிகளை அவர்களது இடங்களிலேயே தேடிப்பிடிப்பதற்கு இஸ்ரேலுக்கு சட்டரீதியான உரிமை உள்ளது என்றும், ஹமாஸ், மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு போன்றவைகள் பல தாக்குதல்களை இஸ்ரேலில் மேற்கொள்ளப்போகும் திட்டங்களை தமது உளவுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர் என்றும் அவற்றை தடுத்து நிறுத்துவதற்கான செயற்பாடுகளை இஸ்ரேல் தொடர்ந்தும் மேற்கொள்ளும் என்றும் கூறினார். தங்களது



இஸ்ரேலியத் தாக்குதலில் இறந்த பாலஸ்தீனர்களின் இறுதி ஊர்வலம்

செயற்பாடுகளில் அமெரிக்கர்களும் திருப்தி தெரிவித்துள்ளனர் என்றும், யாசீர் அரபாத் மீது அழுத்தம் பிரயோகித்து அவர் ஏதாவது முடிவு ஒன்றுக்கு வர மேற்கண்ட நகர்வுகள் உதவும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஞாயிறன்று பாலஸ்தீனத்தின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற மோதல்களில் ஒருசிறுவன் உற்பட 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரது மரணம் மர்மமான முறையில் ஏற்பட்டுள்ளதென செய்திகள் தெரிவிக்கின்றன. காசாவின் தென்பகுதியில் வீடொன்றின் மேல் இஸ்ரேலிய ஏவுகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததில் பாத்தா அமைப்பின் செயற்பாட்டாளர் ஒருவரும் அவரது மகளும் கொல்லப்பட்டனர். ஆனால் இவரது மரணத்திற்கு தாம் பொறுப்பல்ல என இஸ்ரேல் அறிவித்துள்ளது. மேலும் இறந்த செயற்பாட்டாளர் வீட்டில் குண்டு தயாரித்துக்கொண்டிருந்தவேளையில் அக்குண்டு வெடித்ததாலேயே கொல்லப்பட்டார் என்றும் இஸ்ரேலின் செய்தி மேலும் தெரிவிக்கின்றது. இதற்கிடையே இஸ்ரேல் எகிப்து எல்லைப் பகுதியில் ரோந்து சென்றுகொண்டிருந்த இஸ்ரேலிய படையினர் மீது இனந் தெரியாத இளைஞர்கள் கைக்குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் அப் பகுதியில் மோதல் வெடித்தது. பாலஸ்தீன அதிகார சபையின் பாதுகாப்பு தளம் அமைந்திருந்த கான்யூனிஸ் பகுதிமீது இஸ்ரேலியத் தாங்கிகள் தாக்குதல்களை மேற்கொண்டன.

கடந்த 11 மாதங்களாக தொடர்ந்துவரும் மோதல்களில் 572 பாலஸ்தீனர்களும், 152 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சியராலியோனில் 16,000 தீவிரவாதிகளின் ஆயுதங்கள் களைவு

(20.08.01)

சியராலியோனில் அரச ஆதரவு ஆயுத குழுக்கள் மற்றும் அரச எதிர்ப்பு ஆயுதக்குழுக்கள் போன்றவற்றின் பல ஆயிரம் உறுப்பினர்கள் திங்களன்று நாட்டின் வடபகுதி நகரான கபாலாவில் ஒன்றுகூடினர். இங்கு இடம்பெறும் ஆயுத ஒப்படைப்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இவர்கள் அங்கு கூடினர். ஐக்கிய நாடுகள் சபையின் சியராலியோனுக்கான விசேட பிரதிநிதி ஒழுயெமி அடேநிஜி மற்றும் சியராலியோனின் ஐநா அமைதிப்படையின் பதில் தளபதி மேஜர் ஜெனரல் மாட்டின் லூதர் அக்வேய் போன்றவர்களின் தலைமையில் சுமார் 16,000 ஆயுதபாணிகளிடமிருந்து ஆயுதங்கள் களையும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அரச அதிகாரிகள் மற்றும் அரச ஆதரவுகொண்ட கமாஜோர் ஆயுதப்பிரிவு, புரட்சிகர ஐக்கிய முன்னணி போன்றவைகளும் இதில் பங்குபற்றின. சியராலியோனின் பத்துவருடகால யுத்தத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கொய்னா லுகு மாவட்டத்தின் மத்தியில் கபாலா அமைந்துள்ளது. இந்நகரப்பகுதி கடந்த சில வருடங்களாக புரட்சிகர ஐக்கிய முன்னணியினதும் பதவியிலிருந்து அகற்றப்பட்ட இராணுவ கட்டமைப்பின் கட்டுப்பாட்டிலும் இருந்துவருகின்றது. இங்கு தொடர்ந்து இடம்பெற்றுவந்த மோதல்களால் விவசாய நிலங்களும், வீடுகளும் பெரும் அழிவுகளுக்கு உள்ளாகின. சியராலியோனில் ஐநாவின் 17500 சமாதானப் படையினர் நிலைகொண்டுள்ளனர். தற்போது சுமார் 45,000 ஆயுதபாணிகள் நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டியுள்ளனர் என அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. இதுவரை 6414 அரச எதிர்ப்பு அமைப்பினரும் அரசிற்கு சார்பான 9142 பேரும் 201 முன்னாள் இராணுவத்தினரும் 254 பதவியிலிருந்து அகற்றப்பட்டு அதிகாரிகளும் மேலும் 16 பேர்களும் தமது ஆயுதங்களை ஒப்படைத்துள்ளனர். அத்துடன் 2426 ஆயுத பாணிகளான சிறுவர்களிடமிருந்தும் ஆயுதங்களை களையவேண்டியுள்ளதென ஐநாவின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய $20M^3$ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214 / 0613342518
0607348051 / 0148385825

Pub Fr



வோல்த்தம்ஸ் ரோவில் புதிய நகைமாளிகை

ATN Jewellery

37, Palmerston Road, Walthamstow E17 6PR
Tel: 020 8521 9767

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்



தமிழர் தங்க நகைத் தேவைகளையும் உயர் ரக வேலைப்பாடுகளுடன் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் ATN Jewellery. இங்கு உலக தரத்தின் சின்னமான 916 ATN பொறிக்கப்பட்ட உத்தரவாத தங்க நகைகள் கிடைக்கும். என்றும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய நிறுவனம் ATN!!

Pub Lon.

# கொங்கோ அமைதியில் ஐ- நாவின் மௌனம் குறித்து கபிலா வருத்தம்

(19.08.2001)

கொங்கோ ஜனநாயக குடியரசில் அமைதி ஏற்படுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதில் ஆபிரிக்க ஒன்றியமும் ஐ.நா. சபையும் ஆழ்ந்த மௌனம் சாதித்து வருவதையிட்டு அந்நாட்டின் ஜனாதிபதி ஜோசப் கபிலா வருத்தம் தெரிவித்தார். இரண்டு நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு மலாவி வந்த அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கொங்கோ ஜனநாயகக் குடியரசில் அமைதியை ஏற்படுத்த ஐ.நாவும், ஆபிரிக்க ஒன்றியமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும், இது வரை சாதகமான முயற்சிகள் எதனையும் பிராந்திய, சர்வதேச சக்திகள் புரியவில்லை என்றும் குற்றம் சுமத்தினார்.

1994ம் ஆண்டு ருவண்டாவில் ஏற்பட்ட இனப்படுகொலைக்கு காரணமான ஹூடு தீவிரவாதிகளை ஒடுக்க 1998ம் ஆண்டு ருவண்டாவும், அதனையடுத்து உகண்டாவும் கொங்கோ ஜனநாயக குடியரசிற்குள் நுழைந்தன. இதேவேளை அரசுக்கு ஆதரவாக சிம்பாப்வே, அங்கோலா, நமீபியா போன்ற நாடுகள் படைகளை அனுப்பியதுடன் மோதல்கள் தீவிரமாகின. இம் மோதல்களை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் லுசாக்காவில் அமைதி ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப் பட்டது. ஆனால் ஜனவரி மாதம் ஜனாதிபதி லோறன் கபிலா கொலை செய்யப்படும் வரை எவ்வித தீர்வும் ஏற்படவில்லை. இப்போது பொட்ஸ்வானாவின் முன்னாள் ஜனாதிபதி ஜெருமில் மெசிரேயின் ஏற்பாட்டில் கொங்கோ ஜனநாயக குடியரசின் போரிடும் அமைப்புக்கள் தலைநகர் கபரோனில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளன. இப் பேச்சுக்களுக்கு ஐ.நா பொதுச் செயலர் கோபி அனான் தனது ஆதரவினை தெரிவித்துள்ளார். தனது நாட்டில் நிலைகொண்டுள்ள அந்நியப் படைகள் விலகிக்கொண்டதன் பின் தேர்தலை நடத்த உத்தேசித்திருப்பதாயும் 2002ம் ஆண்டளவில் சகல கட்சிகளும் கலந்து கொள்ளக்கூடிய தேர்தல் இடம் பெற தான் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாயும் அவர் கூறினார்.

# யுகோஸ்லாவிய அதிபர்- சேர்பிய அரசு உறவுகளில் விரிசல்

(19.08.2001)

யுகோஸ்லாவிய அதிபர் வொஜிஸ்லாவ் கொஸ்தோனிச்சாவின் சேர்பிய ஜனநாயகக் கட்சி சேர்பிய அரசில் இருந்து விலகிக்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது. சேர்பியப் பிரதமர் சேரான் ட்ஜின்ஜிச் தலைமையிலான அரசு சேர்பியாவில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவில்லை என்றும் மிலோசோவிச் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டதில் ஜின்ஜிச் தன்னிச்சையாக செயற்பட்டார் என்றும் யுகோஸ்லாவிய அதிபர் கொஸ்தோனிச்சா குற்றம் சுமத்தியுள்ளார். யுகோஸ்லாவிய, சேர்பிய அரசியலில் 18 கட்சிகளின் கூட்டணியின் ஆட்சியில் கொஸ்தோனிச்சாவின் ஜனநாயக கட்சி பலம் பொருந்திய ஒன்றாகும். இப்போது கூட்டணியில் இருந்து ஜனநாயகக் கட்சி விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளதானது சேர்பியாவில் புதிய தேர்தல் ஒன்று இடம்பெறும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். சேர்பியாவின் இரகசிய பொலிஸ் அதிகாரி ஒருவர் அண்மையில் கொல்லப்பட்ட சம்பவங்களுடன் பிரதமர் ட்ஜின்ஜிச்சின் நெருங்கிய ஆதரவாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளதை சேர்பியாவின் பத்திரிகையொன்று வெளிக் கொணர்ந்த நிகழ்வு இருவருக்கும் இடையேயான பிளவுகள் அதிகரிக்க காரணமாகின. இப்போது கொஸ்தோனிச்சாவின் கட்சியினர் மிலோசோவிச்சின் சோசலிசக் கட்சியினருடனோ அல்லது அரசினை பதவியில் அகற்றுவதற்காக வேறு தோழமைக் கட்சிகளுடனோ இணைந்து செயற்படக்கூடும் என்றும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# உக்கிரேன் சுரங்க விபத்தில் 36 பேர் மரணம்

(20.08.01)

உக்கிரேனில் நிலக்கரி சுரங்கமொன்றில் இடம்பெற்ற வெடி விபத்தொன்றின் காரணமாக 36 தொழிலாளர்கள் இறந்தும், 14 பேர் காணாமலும் போயுள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஞாயிறன்று காலை உக்கிரேனின் கிழக்குப் பகுதியில் டொனேட்ஸ்க் நகரின் மத்திய பகுதிக்கு அருகே அமைந்திருந்த சுரங்கத்திலேயே மெத்தேன் வாயு வெடிவிபத்து ஏற்பட்டது. இவ் விபத்து ஏற்பட்ட சமயம் 259 சுரங்கத் தொழிலாளர்கள் அங்கு இருந்துள்ளனர். நில மட்டத்திலிருந்து அரை மைல் பாதாளத்தில் இவ் வெடிவிபத்து ஏற்பட்டது. சுமார் 52 மீட்புக் குழுக்கள் அங்கு செயற்பட்டுக்கொண்டிருந்தபோதிலும் தீ பரவிய காரணத்தினால் அவர்களது உதவிகள் சரியாகக் கிடைக்கவில்லை. இவ் விபத்தில் சிக்கிய மேலும் 20 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப் பகுதியில் ஏற்பட்ட இரண்டாவது விபத்து இதுவாகும். 1999ம் ஆண்டு இப் பகுதியில் நடந்த மற்றுமொரு விபத்தில் 50 சுரங்கத் தொழி

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

# பிலிப்பீன் தீ விபத்தில் 75 பேர் பலி

(19.08.2001)

பிலிப்பீன் தலை நகர் மணிலாவில் வெள்ளியன்று இடம் பெற்ற தீ விபத்து ஒன்றினால் 75 பேர்வரை பலியாகி 100 பேர் வரை தீக்காயங்களுக்கும் சுவாசக் கோளாறுகளுக்கும் உள்ளாகியுள்ளனர். மணிலாவின் நடுத்தர வர்க்கத்தினர் வாழும் பகுதியில் உள்ள ஐந்துமாடி தங்கு விடுதியொன்றின் மூன்றாவது மாடியில் மேற்படி தீ விபத்து ஏற்பட்டது. கிறிஸ்தவ அமைப்பொன்றின் உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவொன்றின் மத்தியில் திடீரென தீ பரவியுள்ளது. இதனையடுத்து அங்கிருந்தவர்கள் அகப்பட்டவழிகளால் வெளியேற முனைந்துள்ளனர். பலர் அங்குள்ள குளியலறைகளுக்குள் நுளைந்து கதவுகளை மூடிக்கொண்டுள்ளனர். விபத்தின் பின் விசாரணைகளில் ஈடுபட்ட அதிகாரிகள் மின்சாரக் கோளாறே தீ பரவியதற்கு காரணம் என்றுள்ளனர். அவசர கால கதவு இல்லாத நிலையில் பலர் படிகளில் மூச்சுத்திணறி இறந்து கிடக்கக் காணப்பட்டுள்ளனர்.



தீ விபத்தில் மீட்புக் குழுவினர்

அத்துடன் குளியலறைகளுக்குள் இருந்தும் பலர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். 1996ம் ஆண்டு மணிலாவின் புற நகர்ப் பகுதியில் களியாட்ட விடுதியொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 150 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க கடற்படை விமானத்திற்கு சீனா தடை

(19.08.01)

அமெரிக்க கடற்படை ரோந்து விமானமொன்று பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஹொங்கொங்கிற்கு பறக்க முயன்றபோது சீனாவினால் அது இறங்குவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. சீனாவின் இன் நடவடிக்கைக்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை என அமெரிக்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அமெரிக்க கடற்படையின் 3 C ரக விமானம் வழமையான பயிற்சி மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக புதன், வியாழன் தினங்களில் ஹொங்கொங் துறைமுகப் பகுதிக்குள் செல்ல முயன்றது. ஆனால் அப்பகுதிக்குள் அமெரிக்க விமானங்கள் நுழைவதை சீனா தடைசெய்வதாக அறிவித்தது.

கடந்த ஏப்ரல் மாதம் 1ம் திகதியன்று சீன யுத்த விமானம் ஒன்றும், அமெரிக்க உளவு விமானம் ஒன்றும் மோதிக்கொண்ட சம்பவத்தை அடுத்து சீன அரசினால் அமெரிக்க விமானங்கள் மற்றும் கப்பல்கள் ஹொங்கொங்கிற்குள் வருவது தடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் சிறிய ரக அமெரிக்க யுத்தக் கப்பல்கள் தொடர்ந்தும் துறைமுகப் பகுதிக்குள் அனுமதிக்கப்பட்டே வந்தது. அமெரிக்காவின் விமானந்தாங்கிக் கப்பலான யு எஸ் எஸ் கொன்ஸ்ரலேசன் எனும் கப்பல் ஹொங்கொங் துறைமுகத்தை அடைவதற்கு ஒருநாள் இருக்கையிலே மேற்கண்ட அறிவிப்பு சீனாவினால் வெளியிடப்பட்டுள்ளது.

# தலிபான் விமானங்கள் எதிர் நிலைகள் மீது குண்டுவீச்சு

(19.08.01)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இடம்பெற்ற சுதந்திர தின அணிவகுப்பின்போது எதிர்த் தரப்பினரால் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் எந்தவொரு எறிகணையும் சுதந்திரதின நிகழ்வு நடைபெற்ற பகுதிகளை அண்மிக்கவில்லை. இதனையடுத்து ஆளும் தலிபான் அரசின் யுத்த விமானங்கள் வடபகுதியில் பல குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இரண்டு குண்டுகள் பக்ராம் விமானத்தளத்திற்கு அருகே வீழ்ந்து வெடித்ததால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. இரண்டு குண்டுகள் குவாசி கேல் கிராமத்தில் வீழ்ந்து வெடித்ததில் பல வீடுகள் சேதமடைந்தன. ஆனால் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. அத்துடன் தலிபான் இராணுவத்

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)


"எப்பொழுதுமே மலிவு விலை"



ரதி ஜுவலர்ஸ்

28, Ealing Road, Wembley, Middx HA0 4TL

OPEN: Mon - Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை

7 Days a Week Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

Tel: 020-2903 3063

Fax: 020-2903 9711



SML
**Royal Jewellery**
287. High Street North
East Ham. Manor Park, London E12 6SL
Tel - 020 8472 5500 - Fax - 020 8472 5687

புதிய நிர்வாகத்தின் கீழ்
**AMIRTHAAM**
முற்பணமாக £20 செலுத்துபவர்கட்கு
ஒரு நேர உணவு ஏழு நாட்களுக்கும்.



**OPENING HOURS:**
Monday-Thursday - 12 noon- 3.00 pm 6.00 pm 11.00 pm
Friday/Saturday - 12.00 noon- 12.00 midnight
Sunday - 12.00 noon - 11.00 pm
200B Alexandra Avenue, South Harrow, Middlesex HA2 9BU,
Tél: 020 8423 9666/ 020 8864 3636

உங்கள் நிறைவான
தேர்விற்கு...
**V.G Supermarket**
165, Forest Road
Waltham Stow,
London E 17 6He
T.P & Fax - 020 8531 7459

உங்களுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றிட
Katpakam cash & Carry
36. Loampit Hill
Lewisham Se 13 7SW
Tel - 020 8694 88 10
ஞாயிற்றுக்கிழமைகளில்
பங்கு ஆட்டிறைச்சி
பெற்றுக்கொள்ளலாம்.

**Millennium** Super Market
⌘ உங்களின் வீடியோ, ஓடியோ,
சீடிக்களின் தேர்வுகளிற்கும்
⌘ உங்கள் இல்லத் தேவைகளுக்கும்
நாடவேண்டிய இடம்.
21, Plumsted Road
Woolwich
Tel - 020 8316 7105
Mobil - 07958305466

**சீலன்ஸ்**
இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மரக்கறி, கடலுணவு, பல சரக்குகள் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்வதோடு, மிகக்குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
Seelans
332 & 334. High Street North
East Ham, London E 12-6Ph
Tp & Fax- 020 8471 5733

**Palm Beach**
RESTAURANT
10%OFF
ALL TAKE
AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
Finest South Indian & Sri Lankan Cuisine
17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

**Leama GmbH**
உங்கள் மொத்த, சில்லறைப்
பொருட்கொள்வனவுக்கு...
**மக்கள் கடை**
Markt Str-16
46045 Oberhausen
Tel: 02082053650
Fax: 02082053651
Marienkirch Platz-5
41460- Neuss
Tel: 02131546311
Rotebühl Str-139, 70197- Stuttgart

**TRAVEL AIR**
உங்கள் பிரயாணத் தேர்வுகளை
உங்கள் வசதிக்கேற்றவாறு கணினி
வலையூடாக தேர்வு செய்யலாம்.
www.travel-air.de
LUISEN STR-46, 42103 WUPPERTAL.
Tel: 0202/4936921/0202/2443104-05
Fax: 0202/2443106
Handy: 0173-2850638

டென்மார்க்கில்
முதன் முறையாக
**ஈழமுரசு** நடாத்தும்



# இசை முரசு 2001
## சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

**காலம்: 08.09.2001 சனிக்கிழமை**
**நேரம்: மாலை 4.30 மணி**
**இடம்: Petersminde Hallen**
Petersminde Vej-25
7100 Vejle.
**தொடர்புகளுக்கு: 97 21 76 49**

**NÆRKØB REJSER**
M. Anton Raj
Korskervej. 104, 7000 Fredericia
Tel: 75 91 58 40
Fax: 75 91 58 42
E-mail: nærkøb-travels@post.tele.dk

**PRIMA FOOD**
டென்மார்க்கில் ஆசிய உணவுப்
பொருட்களின் தாயகம்
Prima Food Import/Export
Ibæk strandvej 11, 7100 Vejle.
Tel: 75828941 Fax: 75828852
Mobil: 28 11 88 41

**FRED ASIA HOUSE**
உங்களின் அனைத்து நகைத்
தேவைகளுக்கும் Fred Asia House
Gothers gade30, 7000 Fredericia.
Tel: 75914182 Fax: 75914162
Mobil: 21608225
E-mail: fahouse@get2not.dk

**NØRRE AABY RADIO & TV**
OSTRE GADE 37
5580 NØRRE AABY



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# இனப்படுகொலைக்கு இன்னொரு முயற்சி


தமிழ் மக்களை அழிப்பதற்காக உலக நாடுகளெங்கும் இருந்தும் பலகோடிக்கணக்கான அழிவு ஆயுதங்களை வாங்கி தாக்குதல் நடாத்திய சிறீலங்கா அரசு, அதன் மூலம் தமிழ் மக்களை பெருமளவில் அழிக்கமுடியாத நிலையில், தற்போது சர்வதேச நாடுகளால் தடை செய்யப்பட்ட கொடிய நச்சு ஆயுதங்களை தமிழ் மக்கள் மீது பாவிப்பதற்கென கொள்வனவு செய்துள்ளது.

இவ் ஆயுதம் பாவிக்கப்பட்டு அது வெடித்ததன் பின்னர் பாதிப்பு ஏற்படும் என்பதை விட, வெடிக்காமல் இருந்தாலே அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் மிகவும் ஆபத்தானவை என எச்சரிக்கை செய்யப்பட்டவை. இதன் மூலம் ஏற்படும் விளைவுகள் உடனடிப் பாதிப்புக்களை மட்டுமல்ல, இதன் பின் விளைவுகள் தலைமுறைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டே இந் நாசகார ஆயுதங்கள் உலக நாடுகளால் தடை செய்யப்பட்டுள்ளன.

வேற்று நாட்டு மக்கள் மீது அல்லது வேற்று நாடுகளின் மீது தாக்குதல்களை நடாத்துவதற்கே இவ்வகையான இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டது வரலாறு. வியட்நாம் மீது தாக்குதல் நடாத்திய அமெரிக்காவோ, செச்சினியா மீது தாக்குதல் நடாத்த ரஷ்யாவோ அல்லது தனது நாட்டில் இருந்த யூதர்களை அழிப்பதற்காக ஜேர்மனியோ தான் இவ்வகையான இரசாயன ஆயுதங்களை பாவித்ததாக கூறப்படுகின்றது. ஆனால் தனது நாட்டின் இன்னொரு பகுதியில் வாழும் மக்களை அழிப்பதற்காக இவ் ஆயுதத்தை கொள்வனவு செய்தது சிறீலங்காவாகத் தான் இருக்க முடியும்.

தமிழர்களை அழிப்பதற்கு எந்தப் பேயுடனும் கூட்டுச் சேருவேன் எனத் தெரிவித்த சிங்களத் தலைமையில் இருந்து வந்தவர்கள் தமிழ் மக்களை அழிப்பதற்கு எந்தவிதமான நச்சு ஆயுதங்களையும் கொள்வனவு செய்வதற்கு தயங்கமாட்டார்கள் என்பது தெரிந்ததே. ஆனால், தமிழ் மக்கள் மீது கடும் விமானத் தாக்குதலை மேற்கொண்டு பேரழிவுகளை ஏற்படுத்தியபோது அமைதியாக இருந்த சர்வதேசம், கட்டுநாயக்கா மீதான தாக்குதலுக்கு கண்டனங்களை வெளியிட்டது. தற்போது சிறீலங்கா அரசு சர்வதேச நாடுகளால் தடை செய்யப்பட்ட கொடிய ஆயுத தளவாடங்களை கொள்வனவு செய்துள்ள உண்மைகள் வெளிவந்துள்ள நிலையில், அதனைக் கண்டிக்கவோ அல்லது அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ முன்வராமல் இருப்பது மிகுந்த வேதனைக்குரிய விடயமே.

சர்வதேச நாடுகளால் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை உற்பத்தி செய்கின்ற நாடுகளின் மீது பொருளாதாரத் தடைகளையும், அழுத்தங்களையும், தாக்குதல்களையும் மேற்கொள்கின்ற உலக நாடுகள், சிறீலங்காவின் இவ் ஆயுதக் கொள்வனவு குறித்து இனியும் மௌனமாக இருக்க முடியாது. அவ்வாறு மௌனமாக இருப்பது தமிழ் மக்களை அழிப்பதற்கு சிறீலங்கா எடுத்துள்ள இந் நாசகார செயற்பாட்டுக்கு ஆதரவு வழங்குவதாகவே இருக்க முடியும்.




# பார்வை

## முரண்படும் திசையில் தமிழீழம் - சிறீலங்கா

சிறீலங்காவில் போர் நிறுவனமயப்படுத்தப்பட்டுவிட்டது என இராஜதந்திரிகளை மேற்கோள் காட்டி *நியூயோர்க் டைம்ஸ்* தனது இவ்வார ஆய்வில் கூறுகின்றது. போரை மையமாக வைத்த ஒரு பொருளாதார அமைப்பு சிங்கள தேசத்தில் பலம் பெறுவதாக அவ்வாய்வில் விபரிக்கப்படுகின்றது. பணக்காரர்கள் போராயுதங்களை விற்கும் இடைதரகர்கள் மூலம் பணத்தை பெறுகின்றனர். ஏழைகள் இராணுவத்தில் சேர்வதன் மூலம் பணத்தைப் பெறுகின்றனர். இது ஒரு சனநாயக முறையாக இயங்குகின்றது என பிறநாட்டு இராஜதந்திரிகள் நிலைமையை கேலிசெய்வதாக அவ்வேடு கூறுகின்றது.

பெரும் பொருளாதார சிதைவை எதிர்கொள்ளும் சிங்களதேசம் போரினை சார்ந்து வாழ்வதன் மூலம் தன்னை பாதுகாத்துக் கொள்கின்றது என்பதே நியூயோர்க் டைம்ஸின் வாதமாகும். அமெரிக்க அரச கணிப்புக்களின் பிரகாரம் 215 000 சிங்களவர்கள் படைகளில் உள்ளனர் என்பதை சுட்டிக்காட்டும் அவ்வாய்வு, 50 குடும்பங்களைக் கொண்ட ஒரு தென் பகுதிக் கிராமத்தில் 25 ஆண்கள் போரிற்குச் சென்றுள்ளனர் என்கின்ற உதாரணத்தை முன்வைக்கின்றது. ஒருவர் போரில் கொல்லப்பட்டால் அவரது குடும்பத்திற்கு 55 வயதுவரை ஊதியம் வழங்கப்படுவதுடன் ஓய்வூதியமும் வழங்கப்படுகின்றது. ஒருவர் காயப்பட்டால் வேலைக்குப் போகாமலே ஊதியத்தைப் பெறலாம். இதனால் போரில் ஈடுபட ஏழைச் சிங்களவர்கள் தூண்டப்படுவதாக அவ்வாய்வு மேலும் கூறுகின்றது.

ஆயினும், பொருளாதார அடிப்படை விதிகளில் இது தற்காலிகமானதொரு நிலவரமே எனக் கருதப்படுகின்றது. போரிற்காக சிங்களம் செலவிடும் நிதியே இச் சுழற்சியில் அகப்படுகின்றது. எனினும் போராயுதங்கள் மற்றும் எரிபொருட்கள் உட்பட பல அத்தியாவசிய பொருட்களுக்கு அன்னிய செலவாணியை நம்பியுள்ள சிறீலங்காவின் நிதிவளமானது தொடர்ச்சியாக சிக்கலுக்குள்ளாகியுள்ளாகி வருகின்றது (உதாரணமாக சமீபத்தைய கட்டுநாயக்க சம்பவத்தின் பின்னர் சிறீலங்காவின் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் பாதிக்கப்படுவதையும் உல்லாசபயணத்துறை கொண்டுவந்த அன்னியச் செலவாணி பாதிக்கப்படுவதையும் பார்க்கலாம்). இத்தகைய நிச்சயமற்ற நிலைமைகள் சிங்கள பொருளாதாரத்தை அடிமட்டத்திற்கு கொண்டு செல்கின்றது என்பதில் சிங்கள பொருளாதார நிபுணர்களும் மறுகருத்துக் கொண்டிருக்கவில்லை. எனவே சிதைவுறும் பொருளாதாரத்தில் தங்கியுள்ள கிளை அமைப்பான போர் சார் பொருளாதாரமானது பலமகொண்டதாக இருக்க முடியாது. தமிழீழம் உருவாகும்போது தமிழர்கள் புதிய தேசத்தை கட்டியமைக்கும் பலத்துடன் நிமிர்கையில் சிங்களத்தின் போர் சார் பொருளாதார கிளை அமைப்பு சிதைந்து நம்பிக்கையற்றதொரு சூன்யப் பிரதேசத்திற்குள் சிங்களம் சென்றுவிடும் என்பதே சரியான மதிப்பீடாக அமையும்.

★ ★ ★

## வான்பயங்கரவாதிகள் யார் ?

கட்டுநாயக்க படைத்தளம் மீதான தாக்குதல்களிற்கு பயங்கரவாத முகமூடி கொடுப்பதற்கான பணியில் சிறீலங்காவின் ஏஜென்டுகள் இறங்கிவிட்டனர் என்பதற்கு இவ்வார சென்னை *புரோண்ட் லைன்* சஞ்சிகை ஆதாரம் தருகின்றது. தமிழர் எதிர்ப்பு குடும்ப ஏடான அச்சஞ்சிகையில் உளவாளி எனச் சந்தேகிக்கப்படும் றொகான் குணரட்டின எனும் சிங்களவன் எழுதிய கட்டுரையானது கட்டுநாயக்க படைத்தளத் தாக்குதலை வான் பயங்கரவாதங்களில் உச்ச பயங்கரவாதம் என விபரிக்கின்றது. 1970ம் ஆண்டு ஜோர்தானில் 4 பயணிகள் விமானத்தை அழித்ததே இதற்கு முன்னைய அதிகூடிய வான் பயங்கரவாதம் என்பதே அந்த கட்டுரையின் விளக்கமாகும். எனினும் தாக்குதல் நடாத்தியவர்களின் பிரதான இலக்கு சிறீலங்கா விமானப்படைதளங்களே என்கின்ற உண்மையும், சிறீலங்காவுக்குச் சொந்தமான விமானங்கள் மட்டுமே தாக்கப்பட்டது என்கின்ற உண்மையும் *புரோண்ட் லைன்* குடும்பத்தை நெருடும் உண்மையாகும். மேலும், சில சிவிலியன் விமானங்கள் சிறீலங்காப் படைகளாலேயே அழிக்கப்பட்டது என வெளிவரும் செய்திகள் புரோண்ட்லைனின் பயங்கரவாத கோட்பாட்டை கேலிக்குரியதாக்கியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் நிதி கட்டுப்பாட்டு உடன்பாட்டில் சிவிலியன் விமானங்கள் தாக்கப்படுவது பயங்கரவாதமாக குறிப்பிடப்பட்டிருந்தது.' இது தொடர்பான ஐ.நா ஆணைக்குழுவில் சிறீலங்காவும் இடம்பெற்றுள்ளது. இந்த வியூகத்தில் புலிகளை நிறுத்துவதே சிறீலங்காவின் திட்டமாகும். அதற்கான பரப்புரை பணிகளில் தனது உளவாளிகளையும், ஆதரவு செய்தியாளர்களையும் சிறீலங்கா பயன்படுத்துவது அவதானிக்கப்படுகின்றது. மேலும் புலிகள் தாக்குதலுக்கு உரிமைகோராத நிலையில் கொல்லப்பட்டவர்களின் உடல்களை செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அவசர அவசரமாகக் கொடுக்க முற்பட்டமையானது உடல்களை புலிகள் ஏற்றுக்கொள்வதை சர்வதேச சட்ட வியாக்கியானங்களிற்கு ஆதாரங்களாகக் கொள்வதே சந்திரிகா - கதிர் குழுவின் இரகசியத் திட்டமாகும். இதற்கு புலிகள் பதிலளிக்காத நிலையில் அரச ஊடகங்கள் ஊடாகப் புலிகள் உரிமை கோருவதாக சிறீலங்கா பரப்புரை நடாத்தியது. புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்கள் உரிமை கோர மறுத்த நிலையில் சிறீலங்கா பிறதரப்புக்கள் ஊடாக காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளது.

எனினும், கட்டுநாயக்க படைத்தள தாக்குதல் பற்றிய விவாதம் சிறீலங்காவின் விமானப்பாதுகாப்புப் பற்றிய கரிசனையை கேள்விக்குள்ளாக்கும் என்பதில் சந்தேகமில்லை. உலக விமான கண்காணிப்பு குழுக்களின் ஆட்சேபங்களையும் மீறி நச்சு ஆயுதங்களைக் கொண்ட களஞ்சியங்களை சிவிலியன் விமானநிலையத்திற்கு அண்மையில் நிறுவியதும், குண்டுவீச்சு விமானங்கள் நாசகாரக் குண்டுகளுடன் சிவிலியன் விமானநிலைய ஓடுதளத்தில் சாகசம் புரிவதையும் விவாதங்கள் வெளிக்கொண்டுவரும் என நம்பலாம். நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகிய மிக் 27 விமானமானது விமானநிலையத்திற்கு அருகில் அமைந்திருந்த கட்டடங்களை சேதப்படுத்திய செய்தியை உலகம் கேட்டிருககும்!

★ ★ ★

## கிலியும் வேண்டுதலும் !

*திஐலண்ட் ஏட்டின்* பத்தி எழுத்தாளரும், முன்னாள் அரச உயரதிகாரியுமான கே.கொடகே என்பவர் புலிகள் தமது இலட்சியத்திற்கு அருகே வந்துவிட்டனர் என்கின்ற அச்சத்தை எழுப்பியுள்ளார். ஒரு சிந்திக்கத் தெரிந்த எதிரி என புலிகளை விபரித்து தனது அரசையும், இராணுவத்தையும் விமர்சித்துள்ள இவர், இப்போது புலிகள் இராணுவ மேலாதிக்கத்தைப் பெற்றுள்ளனர் என்கின்றார். இதனை தடுத்து நிறுத்தி சிறீலங்காவைப் பாதுகாக்க வேண்டுமாயின் இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாட்டை எழுதி திருமலையை இந்தியாவுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே அவரது வேண்டுகோள்.

அவரது வேண்டுதல்கள் சிங்களத்தின் இயலாமையை பகிரங்கப்படுத்தும் அதே வேளையில் சிறீலங்கா அரசு பாக். விமானப்படையிடமிருந்து யுத்த விமானங்கள் நான்கை வாடகைக்கு எடுக்க முயல்வதாக செய்திகள் வெளிவருகின்றன. யாழ். மாவட்ட இராணுவத் தளபதி அவசரஅவசரமாக பயிற்சிக்காக சீனா அனுப்பி வைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இரு பிரதான சிங்கள கட்சிகளையும் இணைக்கும் பணியில் அமெரிக்காவும், மேற்குலகும் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இந்த வரைபடத்தில் சிறீலங்கா எங்கு இந்தியாவை வைக்கப்போகின்றது?

- ராஜா

# சமாதானம் பேச நாம் தயார் அரசுதான் கதவுகளை மூடியிருக்கின்றது

## - சு.ப.தமிழ்ச்செல்வன்

## கட்டுநாயக்கா தாக்குதலுக்கு 'புலிகளின் குரல்' உரிமை கோரவில்லை — ஆனால் இத் தாக்குதல் குறித்து தமிழ் மக்களும் நாமும் மகிழ்ச்சியடைந்தோம்.

சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் எப்போதுமே தயாராகவே உள்ளனர் ஆனால் சிறீலங்கா அரசுதான் சமாதானத்திற்கான கதவுகளை மூடியுள்ளதுடன் சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சிகளையும் குழப்பி வருகின்றது என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்தவாரம் இலண்டன் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் உரிமை கோரவில்லை என தெரிவித்ததுடன், இத் தாக்குதல் குறித்து தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் மகிழ்ச்சியடைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அப் பேட்டியின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்த யுத்தம் தொடர்வதை நாங்கள் விரும்பவில்லை. சுதந்திரமாகவும் உரிமைகளோடும் கௌரவமாகவும் இறைமையோடும் நாங்கள் எங்களுடைய தாயகப் பூமியில் வாழ வேண்டும். இதற்காகத்தான் எங்கள் பிரதேசங்களை ஆக்கிரமித்து, எம் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பவர்களுக்கு எதிராகப் போராடுகின்றோம். தமிழ் மக்களுடைய தாயக மண்ணை கைப்பற்றுவதற்கு இராணுவம் முயற்சிக்கின்றது. தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் சிறீலங்கா இராணுவம் அத்துமீறிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த இடங்களிலேயே இன்று யுத்தம் நடைபெறுகின்றது.


எம்மைப் பொறுத்தமட்டில் சமாதான முயற்சிகளுக்கு நாங்கள் ஒருபோதும் முட்டுக்கட்டை போட்டதில்லை. எங்களுடைய கோரிக்கைகள் தேவைகள் அபிலாசைகள் என்பன சரியான முறையில் அரசாங்கத்தினால் உணரப்படாத பொழுது, அவைகள் உரிய வகையில் கவனத்தில் எடுக்கப்படாத வேளைகளிலேயே சமாதான முயற்சிகள் தடைப்படுகின்றன. உண்மையிலேயே அரசாங்கம் தான் சமாதான முயற்சிகளை குழப்பி வருகின்றது. அதற்கு முட்டுக்கட்டை போடுகின்றது. சிறீலங்காவின் ஊடகத்துறையை ஆக்கிரமித்துள்ள அரசாங்கம், பொய்யான செய்திகளையே பரப்பி வருகின்றது. உண்மை நிலைமைகளையும், உண்மை செய்திகளையும் அது மக்களை அறியவிடுவதில்லை. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுடைய கோரிக்கைகள் அபிலாசைகளை முன்வைக்கும் போதெல்லாம் சிறீலங்கா அராசங்கம் அவற்றை நம்புவதில்லை. அதனை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. கவனத்தில் எடுப்பதில்லை. அதற்குப் பதிலாக அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளில் மாத்திரமே முனைப்புக் கொண்டிருக்கின்றது. சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது சிறீலங்கா அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கைகளை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல் அந்த நடவடிக்கைகளின் மூலம் எங்களை அடிபணிய வைக்க முயற்சிக்கின்றது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளை முறியடிக்கவும் முடமாக்கவுமே உதவுகின்றது.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஆரோக்கியமான சமாதான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அதனைக் கட்டியெழுப்புவதற்காக இரு தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆனால் சிறீலங்கா அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. அத்துடன் எமது தலைவரின் முயற்சிகளையும் அது உதாசீனம் செய்ததுடன், தனது இராணுவ நடவடிக்கைகளிலேயே முனைப்புக் காட்டியது. இதன் காரணமாக சமாதான முயற்சிக்கான சூழ்நிலை குழப்பியடிக்கப்பட்டது. நாங்கள் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை இன்னும் கைவிடவில்லை. அரசாங்கம் மனப்பூர்வமாக நியாயமான முறையில் சமாதானத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமானால் அவற்றைப் பரிசீலிக்க நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். எங்களுடைய தலைவர் கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் நோர்வே நாட்டுப் பிரதிநிதியைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியது, ஒருதலைப்பட்சமாக நான்கு மாதங்களுக்குப் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்தது போன்ற அவருடைய சமாதானத்திற்கான முன்முயற்சிகளெல்லாம் அரசாங்கத்தினால் உதாசீனம் செய்யப்பட்டன. இந்த முயற்சிகள் குறித்து அரசாங்கம் அலட்டிக்கொள்ளவில்லை. இதற்குப் பதிலாக ஆத்திரமூட்டும் வகையில் எங்கள் மீது தாக்குதல்களைத் தொடுத்தது.

*சிறு சிறு பிரச்சினைகளையே தீர்க்க முடியாதவர்களினால் ஓர் அரசியல் அமைப்பின் மாற்றத்தின் மூலம் நீதியாகவும் உண்மையாகவும் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளுக்கு அவரால் தீர்வு காண முடியுமா? அவ்வாறு தீர்வு காணமுடியும் என்று நாங்கள் நம்பவில்லை.*

இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் எமக்கும் தமிழ் மக்களுக்கும் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தின. சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்காக நாங்கள் ஏற்படுத்திய சந்தர்ப்பத்தை, சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக எம்மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அதன் மூலம் எம்மை அழித்தொழிப்பதற்குமே இராணுவம் பயன்படுத்தியது. நாங்கள் இப்போதும் சமாதானப் பேச்சுக்களுக்குத் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் அராசங்கமே இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் சமாதானத்திற்கான கதவுகளை மூடியிருக்கின்றது.

எங்களுடைய கடந்த கால வெற்றிகரமான தாக்குதல்களை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு அரசாங்கம் கூறுவதைப் போல நாங்கள் யுத்தத்திற்காக ஆயத்தமாக வேண்டியதில்லை என்பது புரியும். ஒருதலைப் பட்ச போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்தது, சமாதானத்தை முன்னெடுப்பதற்காகவே அன்றி யுத்தத்திற்கு எங்களைத் தயார்ப்படுத்துவதற்கல்ல. அவ்வாறு நாங்கள் தயார்படுத்தியதாக அரசாங்கம் கூறுவது சந்தர்ப்பவாதமே தவிர வேறொன்றுமில்லை. உண்மையான சமாதானம் ஏற்படுத்துவதற்கு முதலில் ஒரு சமாதானச் சூழல் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் இங்கே ஒரு பக்கம் யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது. மறு பக்கத்தில் செயல் முறையில் இல்லாத போலியான சமாதான முயற்சிகளே மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையில் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமாக இருக்கவில்லை. தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய முடியாத ஓர் அரசியல் தீர்வையே அராசங்கம் முன்வைத்திருக்கின்றது. அதிலும் கூட உறுதியான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவில்லை. எம்மைப் பொறுத்தமட்டில் எங்களுடைய கோரிக்கைகளையும் தேவைகளையும் நிலைப்பாடுகளையும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு வெளிப்படுத்தியுள்ளோம். அவற்றை உதாசீனம் செய்து ஒதுக்கி வைத்துவிட்டு அரசாங்கம் தனது வன்முறைகளையே எம்மீது பிரயோகித்து வருகிறது.



சுப. தமிழ்ச்செல்வன்

ஒவ்வொரு கட்டத்திலும் தமிழ் மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை மிகத் தெளிவாக முன் வைத்திருக்கின்றார்கள். ஆனால் அரசாங்கமும் சிங்கள இனவாத சக்திகளும் இவற்றை தொடர்ச்சியாக புறந்தள்ளியே வந்துள்ளன. இந்த நிலையிலேயே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நாங்கள் தனியாகப் பிரிந்து சென்று எங்களுக்கென்று ஒரு அரசை அமைப்பதற்குத் தீர்மானித்தோம். எங்களுடைய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட ஒவ்வொரு கட்டத்திலும் எமது சமுதாயம் ஒரு முடிவை மேற்கொள்ள் வேண்டிய நிலமைக்குத் தள்ளப்பட்டது. சிங்கள பேரினவாதச் சமுதாயம் எங்களுடைய உரிமைகளையும் கௌரவத்தையும் தர மறுக்கின்றபோது, நாங்கள் எங்களுடைய தாயகம் எமது தேவையென்ற முடிவுக்கு வந்துள்ளோம். சமாதானத்துக்காக நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டு எம்மீது பெரும் போர் ஒன்று திணிக்கப்பட்டதை அடுத்து, சமாதானப் பேச்சுகளுக்குரிய நியாயமான பாதையை அரசாங்கம் திறக்காமல் விட்டுள்ளது என்று எண்ணுகின்றோம். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் சமதான பேச்சுக்களுக்குரிய சகல கதவுகளையும் அரசாங்கம் மூடியுள்ளது என்றே எண்ணுகின்றோம். அரசியல் அமைப்பை மாற்றும் விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா கூறுவது ஒன்று, செய்வது வேறொன்றாகவே இருக்கிறது. அவர் தனது அதிகார காலத்தில் வாயளவில் பேசிக்கொண்டிருக்கிறாரே தவிர ஆக்கபூர்வமாக எதனையும் நடைமுறைப்படுத்தவில்லை.

நீண்ட காலமாக நிலவி வருகின்ற தமிழ் மக்களுடைய சிறு சிறு பிரச்சினைகளையே தீர்க்க முடியாதவர்களினால் ஓர் அரசியல் அமைப்பின் மாற்றத்தின் மூலம் நீதியாகவும் உண்மையாகவும் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளுக்கு அவரால் தீர்வு காணமுடியுமா? அவ்வாறு தீர்வு காணமுடியும் என்று நாங்கள் நம்பவில்லை. விடுதலைப் புலிகளைப் பெறுத்தமட்டில் தமிழ் மக்களுடைய அபிலாசைகள் பிரச்சினைகளுக்கு நியாயமான ஒரு தீர்வு தேவை. இந்தத் தேவை பூர்த்தி செய்யப்படா விட்டால் விடுதலைப் புலிகள் தங்களுடைய தீர்மானத்தை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. நாங்கள் சமாதானக் கதவுகளை மூடவில்லை. சமாதானப் பேச்சுக்களுக்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன. நோர்வே அரசாங்கத்திற்கு இதனை நாங்கள் மிகத் தெளிவாக எடுத்துக் கூறி இருக்கின்றோம்.

சமாதானப் பேச்சுக்களுக்கான சூழ்நிலையை நோர்வே அரசாங்கமே உருவாக்கியது. சிறீலங்கா அரசாங்கம் அதனை நிராகரிக்க முயற்சிக்குமானால், சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வே அரசாங்கத்தை புறந்தள்ளுமானால் அந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட சமாதானச் சூழ்நிலை நிச்சயமாக பாதிக்கப்படுமென எண்ணுகிறேன். நோர்வே அரசாங்கத்தை சமாதான முயற்சிகளில் இருந்து புறந்தள்ளும் நோக்கம் இரு தரப்பாருக்குமே கிடையாது. எம்மைப் பொறுத்தமட்டில் நோர்வே அரசாங்கம் சமாதான முயற்சியில் நடுநிலையான ஒரு பங்களிப்பையே மேற்கொண்டு வந்தது. நோர்வே அரசு இரு தரப்பாரையும் அணுகி தனது சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வே நிராகரிக்கப்பட்டு வேறொரு நாட்டுக்கு இடங்கொடுக்கப்படுமானால் அது நீதியானதல்ல. சிறீலங்கா அரசாங்கத்தை பொறுத்தமட்டில் நடுநிலையான பங்களிப்பை வகிக்கின்ற எந்த நாட்டையும் அது புறந்தள்ளவே செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலயத்தின் மீதான தாக்குதலுக்கு 'புலிகளின் குரல்' உரிமை கோரியதென்பது தவாறான செய்தியாகும். அந்தத் தாக்குதலை யார் செய்தது என்பது முக்கியமில்லை. என்ன நடந்துள்ளது என்பதுதான் முக்கியமானது. இந்த தாக்குதல் நடவடிக்கையானது தமிழ் மக்களினாலும், எம்மாலும் வரவேற்கப்பட்டது. அதுகுறித்து தமிழ் மக்களும் நாங்களும் மகிழ்ச்சியடைந்தோம். இந்த யுத்த நடவடிக்கையில் விமானப் படைகள் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றன. இந்த பங்களிப்புக்குக் காரணமான குண்டுவீச்சு விமானங்கள் அடித்து நொருக்கப்பட்ட

(தொடர்ச்சி 24-ம் பக்கம்)

# ஆட்டத்தை பார்க்காமல் ஆளையாள் பார்க்கிறார்



சந்திரிகாவின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது எனக்கு புளு ஸ்கங்க் (Blue skunk) என்ற பறவைதான் ஞாபகத்திற்கு வருகின்றது. கனடாவில் உள்ள ஸ்கங்க் என்ற அணில் வகை மிருகத்தைப் பற்றி தெரிந்திருக்கும். அதேபோல் ஆபிரிக்காவின் சில காடுகளில் மட்டும் வாழும் ஒருவகை தீக்கோழி போன்றவைதான் இந்த புளு ஸ்கங்க் என்ற பறவைகள். இந்த பறவைகள் தங்கள் எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் தன்மை மிகவும் சுவாரசியமானது. தன்னுடைய எதிரிகளைக் கண்டவுடன் இந்த பறவை என்ன செய்யும் தெரியுமா? எதிரியை நோக்கி அழகாக நடனமாடிக் கொண்டு செல்லுமாம். அவ்வாறு இந்த பறவை அழகாக நடனமாடிக் கொண்டு செல்லும்போது எதிரிகள், அதனை கொல்ல விரும்பி வந்த மிருகங்கள் அதன் நடனத்தின் அழகில் மெய் மறந்து அதனை பார்த்தபடி நிற்குமாம்.

அந்தச் சமயம் பார்த்து இந்தப் பறவை தனது எதிரியை நோக்கித் தனது பின் பக்கத்தைக் காட்டித் தனது பின்னுறுப்பின் ஊடாக ஒரு திரவத்தை வெளியேற்றுமாம். சுமார் 15 மீற்றர் வரை அந்த திரவத்தை அந்தப் பறவை பீச்சியடிக்குமாம். அந்தத் திரவத்திலிருந்து வரும் துர்நாற்றம் கனடாவில் உள்ள ஸ்கங்க் என்ற மிருகத்தின் துர்நாற்றத்தை விட மோசமாக இருக்குமாம். அந்தச் சமயத்தில் எதிரிகள் அதன் துர்நாற்றத்தைச் சகிக்க முடியாது ஓடிவிடுமாம். பிறகு இந்த பறவை எப்போதும் போல் ஜாலியாக சகஜ நிலைக்கு திரும்பிவிடுமாம். ஜனாதிபதி அம்மையாரே எனக்கு உங்களின் அரசியல் சித்து விளையாட்டுகளைப் பார்க்கும் போதும், உங்கள் அரசியல் எதிரிகளை நீங்கள் எப்படி ஏமாற்றி வெற்றி கொள்கிறீர்கள் என்று கவனிக்கும்போதும் இந்த ஸ்கங்க் என்ற கனடா மிருகமும், புளு ஸ்கங் என்ற ஆபிரிக்க பறவையும்தான் ஞாபகத்துக்கு வருகின்றன. தமிழ் கட்சிகள் உங்களுக்கு எதிராக ஏதாவது அரசியல் முயற்சிகளைக் கொண்டு வந்தால் உடனடியாக இனப் பிரச்சினைக்கான தீர்வு, உத்தேச அரசியல் தீர்வுத்திட்டம் என்று ஏதாவது ஒன்றை கொண்டுவருவீர்கள். அவர்களும் உங்கள் பேச்சில் மயங்கி உங்களுடன் ஆலோசனைகள் நடத்துவார்கள். ஒரு சில மாதங்களின் பின் உனக்கும் பே... பே... உன் அப்பனுக்கும் பே... பே... என்கிற மாதிரி அவர்களை வெறுங்கையுடன் அனுப்புவீர்கள். ஆனால் ஸ்கங் மாதிரி மலம் பூசாமல் அவர்களின் முகத்தில் கரிபூசி அனுப்புவீர்கள்.

தமிழ் கட்சிகளை விடுங்கள்... உங்கள் பரம எதிரியும், அரசாட்சியில் உங்களை கவிழ்க்க சந்தர்ப்பம் பாத்திருக்கும் ரணில் விக்கிரம சிங்காவே உங்களின் அரசியல் ஆட்டத்தில் மயங்கி பல தடவை ஏமார்ந்து முகத்தில் கரி பூசப்பட்டவர்தான். ரணில் விக்கிரமசிங்க எப்போதாவது உங்களுக்கு எதிராக அரசியல் காய்களை நகர்த்தும்போது, அல்லது மக்களை ஒன்றுகூட்டி போராட்டம் நடத்தும்போது, அல்லது எம்பிமாரைச் சேர்த்து பாராளுமன்றத்தை கவிழ்க்க முயலும்போது நீங்கள் உங்கள் தேசிய அரசு நடனத்தை உடன் ஆட ஆரம்பித்துவிடுவீர்கள். அவரும் உங்கள் தேசிய அரசு நடனத்தில் மயங்கி உங்களுடன் பேச்சுக்கு வருவார். பாவம் ரணில் ஒவ்வொரு தடவையும் உங்களுடன் பேச்சுக்கு வந்து சென்றகையுடன் நீங்கள் விடும் அறிக்கை, புளு ஸ்கங் விடும் மலத்தை விட அசிங்கமானது. இரகசியப் பேச்சு என்று நடத்தப்பட்ட கலந்துரையாடலில் உங்களிடம் ரணில் பிரதமர் பதவி கேட்டார் என்றும், நீங்கள் மறுத்ததாகவும் கூறுவீர்கள். ஆக மிஞ்சினால் ரணில் புலிகளுடன் சேர்ந்து உங்களைக் கொல்லச் சதி செய்கிறார் என்பீர்கள். இவ்வாறு எத்தனை தடவைதான் ரணில் ஏமாறுவார். இப்போது அவர் தன்னை சுதாகரித்துக் கொண்டுவிட்டார்.

இப்போது அவர் என்ன சொல்கிறார். விருப்பமாயின் ஒத்திவைத்த பாராளுமன்றத்தை திறந்து அங்கே வந்து தேசிய அரசு நடனத்தை ஆடு என்கிறார். நீங்கள் கெட்டிக்காரி இப்போது என்ன செய்கிறீர்கள். ரணிலை விட்டுவிட்டு அவருடன் இணைந்திருந்த எதிர்க்கட்சிக் கூட்டணியில் அங்கம் வகித்த முக்கிய கட்சியான ஜே.வி.பியை பார்த்து தேசிய அரசு நடனத்தை ஆடத் தொடங்கி இருக்கின்றீர்கள். முன்னரும் இப்படித்தான், 1994ம் ஆண்டில் நீங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோதும் ஜே.வி.பி உங்கள் நடனத்தில் மயங்கியது. ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் ஒரு வருடத்தில் ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன் என்று நீங்கள் ஜே.வி.பிக்கு உத்தரவாதம் அளித்திருந்தீர்கள். உங்கள் பேச்சில் மயங்கி உங்களை எதிர்த்து போட்டியிட்ட ஜே.வி.பி வேட்பாளரை உங்களுக்கு ஆதரவாக வாபஸ் பெறச் செய்தது ஜே.வி.பி. ஆனால், ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதும் நீங்கள் ஜே.வி.பி.யின் முகத்தில் கரியை பூசினீர்கள். இப்போது மீண்டும் ஜே.வி.பியை எதிர்க் கட்சிகளின் கூட்டணியிலிருந்து பிரிப்பதற்கு உங்கள் தேசிய அரசு நடனத்தையும் ஒரு வருட அவகாச ஆசை வார்த்தைகளையும் கூறுகிறீர்கள்.

மீண்டும் தாம் ஏமாறப் போகிறோம் என்று தெரிந்ததும் ஜே.வி.பி உங்களுடன் பேச்சுக்களை நடத்தி சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. அவற்றில் முக்கியமானவை, ஒரு வருடத்தில் 5 ஆணைக் குழுக்களை நியமிக்க வேண்டும். ஒரு வருடத்தில் ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும். ஒரு வருடத்தில் இடைக்கால அரசு மூலம் தேர்தலை நடத்த வேண்டும், அமைச்சரவையை 30 ஆகக் குறைக்க வேண்டும் என்பனவாகும். எல்லாவற்றுக்கும் மேலாக ஜே.வி.பியுடன் இணைந்திருக்கும் காலத்தில் இனப்பிரச்சினை தொடர்பாக புலிகளுடன் பேசக்கூடாது என்றும் ஜே.வி.பி இப்போது நிபந்தனை விதித்துள்ளது. அமைச்சரவையின் எண்ணிக்கையை குறைப்பது என்பது உங்களால் முடியாத காரியம் என்பது ஜே.வி.பிக்கு தெரியாததல்ல. அனேகமாக உங்கள் அரசில் உள்ள 99 சதவீதமான எம்பிமாரும் ஏதோ வகையில் அமைச்சராகவோ பிரதி அமைச்சராகவோ இருக்கின்றார். இல்லாதுவிடில் அவர்கள் கட்சிமாறிவிடுவார் என்ற பயம் உங்களுக்கு உண்டு. இன்னும் அவ்வப்போது உங்களை மிரட்டும், உங்களுடன் இணைந்துள்ள தமிழ் கட்சிகளுக்கும், உதிரிக் கட்சிகளுக்கும் எலும்புத் துண்டாகப் போட உங்களிடம் உள்ள ஒரே ஒரு அட்சயபாத்திரம் இந்த அமைச்சரவைதான். அதையும் ஜே.வி.பி தட்டிப்பறிக்கப் பார்க்கிறது.

அடுத்தது ஒரு வருடத்தில் ஐந்து ஆணைக்குழுக்களை நியமிப்பது. இது ஏற்கனவே முஸ்லிம் காங்கிரசால் முன்வைக்கப்பட்டு ஒரு வருட் தவணை கொடுக்கப்பட்ட நிபந்தனைதான். இதை நிறைவேற்ற நீங்கள் தயார் என்றால் அதனை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்தே செய்திருக்கலாம். ரவூக் கக்கீம் கேட்டுச் செய்யாததை நீங்கள் ஜே.வி.பி கேட்டா செய்யப் போகிறீர்கள். மேலும் இந்த ஆணைக்குழுக்களில் சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு என்று இரண்டு உள்ளன. அவற்றை அமைத்தால் நீங்களும் உங்களை சார்ந்த தமிழ் குழுக்களும் தேர்தலில் சில இடங்களில் ஒரு ஆசனத்தை கூட கைப்பற்ற முடியாமல் போகலாம். சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு என்பதை நீங்கள் நினைத்தும் பார்க்கமுடியாது. ஏனென்றால் ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் உள்ள 70 வீதமான பொலிசார் கடந்த 17 வருட ஐக்கிய தேசிய கட்சி அரசு காலத்தில் சேவையில் சேர்க்கப்பட்ட அவர்களின் கட்சி விசுவாசிகள். சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு ஒன்றை நியமித்தால் பொலிஸ் படை உங்கள் கையை விட்டுப்போய்விடும். எனவே இதுவும் சாத்தியமில்லை.

அடுத்ததாக ஒரு வருடத்தில் ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்று ஜே.வி.பி கேட்டுள்ளது. இது ஏற்கனவே 1994ல் நீங்கள் கொடுத்து ஜே.வி.பியை ஏமாற்றிய வாக்குறுதிதான். உங்கள் ஆட்டத்தை பார்த்து ஏமாறாத விதத்திலேயே ஜே.வி.பி இந்த நிபந்தனைகளை விதித்துள்ளது. இறுதியாக புலிகளின் முன் நீங்கள் ஆடக்கூடாது என்றும் ஜே.வி.பி எச்சரித்துள்ளது. இது உங்களுக்கு பரவாயில்லை. ஏனெனில் சர்வதேச சமூகத்தின் முன் உங்கள் சமாதான நடனத்தை ஆடி நோர்வேயின் முகத்தில் கரிபூசியதோடு உங்கள் ஆட்டம் முடிந்து விட்டது. புலிகள் உங்கள் ஆட்டம் பேயாட்டம், பேய்க்காட்டு ஆட்டம் என்று உலகிற்கு எடுத்துரைத்து விட்டனர். எனவே இப்போது ரணில், ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ் என எவரும் உங்கள் நடனத்தை பார்க்கத் தயாராக இல்லை. ஆக மிஞ்சியிருப்பது தமிழ் கட்சிகள்தான். தமிழ் கட்சிகள் ஆட்டத்தை பார்க்காமல் ஆளையாளைப் பார்பவர்கள். தங்களுக்குள் யார் உங்கள் ஆட்டத்திற்கு அதிகம் தலையசைப்பவர் என்று பார்த்து அவரைவிட தாங்கள் அதிகம் தலையசைப்பவர்கள் அவர்கள். வழமைபோல் நீங்கள் அவர்கள் முகத்தில் கரிபூசுவதைவிட்டு அவர்கள் கவலைப்படப் போவதில்லை. ஏனெனில் அவர்கள் கவலையெல்லாம் தமிழர்கள் முகத்தில் எவ்வாறு கரி பூசுவதென்பதிலேயே இருக்கும்.

**- இரட்ணதுரை**

புதிய முகவரியில்
**ஜீபோட் வகுப்புகளின் ஆரம்பம்**
ஆசிரியர் S.S. தில்லைச்சிவம்
22, Rue Chouveroux, 93000 Aubervilliers.
M°: Aubervilliers Quatre Chemins
Tel: 01 48 34 60 15 / 06 20 31 24 90

# சமாதானப் பேச்சுக்கள் சாதாரணமானவையல்ல

சமாதான முயற்சிகளுக்கான பேச்சுவார்த்தைகள் இனி மேல் சாதாரணமானதாக இருக்க மாட்டாது என்பதற்கான சமிக்ஞைகள் இப்போது வெளியாகியிருக்கின்றன. நோர்வேயின் மத்தியஸ்த ஏற்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் மனப்பூர்வமாக ஒத்துழைப்பு வழங்கினார்கள். அந்த மனப்பூர்வமான ஒத்துழைப்பிற்கு அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட தமது உறுப்பினர்களையும், யாழ். குடாநாட்டில் அவர்கள் இராணுவத்திடமிருந்து கைப்பற்றியிருந்த கொழும்புத்துறையில் இருந்து சாவகச்சேரி வரையிலான நிலப்பகுதிகளையும் தியாகம் செய்ய நேர்ந்திருந்தது. இந்தப் பின்னணியில் சிறீலங்காவின் பேரினவாத அரசியல் கட்சிகளில் ஒன்றாகிய பொதுஜன ஐக்கிய முன்னணி தனது வஞ்சகமான செயற்பாட்டின் மூலம், விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகச் சித்தரித்து, சர்வதேச நாடுகள் அந்த இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டும் என்ற பிரசாரத்தை முன்னெடுத்ததுடன், அவ்வாறான தடை நடவடிக்கை சமாதான முயற்சிகளைப் பாதிக்கமாட்டாது என்று சமாதானம் கூறிவந்தது.

**கட்டுநாயக்க தளத்தின் ஊடாக விழுந்த அடியின் காரணமாக முதுகெலும்பு முறிந்து நிமிர்ந்து நிற்க முடியாத அளவில் அல்லாடிப் போயுள்ள அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து நிமிர்த்துவதற்கான பகீரத முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா தமது முழு பலத்தையும் பயன்படுத்தி செயற்பட்டுவருகின்றார்.**

நோர்வே அரசு சமாதான முயற்சிகளை உண்மையிலேயே தீவிரமாகவும் உறுதிப்பாட்டுடனும் மேற்கொண்டு வந்ததை அவதானித்த சிறீலங்கா அரசாங்கம் சமாதானப் பொறிக்குள் தான் சிக்கப்போவதை உணர்ந்து அதனை முறியடிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கண்கொத்திப் பாம்பைப் போல காத்திருந்தது. நோர்வேயின் சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் சிறீலங்கா அரசாங்கம் சமாதான முயற்சிகளில் காட்டிவந்த வித்தியாசமான போக்கை அவதானித்ததன் காரணமாக, அதன் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்குமாறு அமெரிக்காவிடம் நடத்திய பேச்சுக்களின்போது வலியுறுத்தியதைக் கண்டது. இதுதான் சரியான தருணம் என்பதை உணர்ந்த சந்திரிகா குமாரதுங்காவும், லக்ஸ்மன் கதிர்காமரும் இணைந்து நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சரை முக்கியமான பேச்சுவார்த்தைக்காக கொழும்புக்கு அவசரமாக அழைத்தார்கள். விசேட சமாதான தூதுவர் எரிக் சோல்ஹெய்மின் நடவடிக்கை குறித்து அதிருப்தி தெரிவித்த அவர்கள், அவரை சிறீலங்காவின் சமாதான முயற்சிகளில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பதிலாக உயர்ந்த மட்டநிலையில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளுக்குத் தாங்கள் ஒத்தழைக்கத் தயாராக இருப்பதாக உறுதியளித்தார்கள்.

இந்தச் சந்திப்பின் விளைவாக எரிக் சோல்ஹெய்ம் சமாதான முயற்சிகளுக்கான நடவடிக்கை பாதையில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டார். நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சர் மட்டத்தில் மத்தியஸ்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறிவித்தார்கள். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை. சமாதான முயற்சிகள் பிசுபிசுத்தன. சமாதான முயற்சிகளுக்காக சிறீலங்காவுக்கான சிறப்புத் தூதுவராகச் செயற்பட்டு வந்த எரிக் சோல்ஹெய்ம் சமாதான நடவடிக்கைகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டதை, சமாதான நடவடிக்கைகளின் முக்கிய பங்காளர்களில் மற்றத் தரப்பினராகிய விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கவும் இல்லை. அது குறித்து அவர்களுடன் நோர்வே கலந்தாலோசிக்கவும் இல்லை. நோர்வேயின் இந்தச் செயற்பாடு விடுதலைப் புலிகளுக்கு எரிச்சலையும் அதிருப்தியையுமே ஏற்படுத்தியிருந்தன. இது குறித்து அவர்கள் தமது அறிக்கையொன்றில் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில் சந்திரிகா அரசு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் முரண்பட்டு, தனது அரசியல் உறுதிப்பாட்டை இழந்த நிலைமையும் சேர்ந்து கொண்டதையடுத்து, சமாதான முயற்சிகள் பின்தள்ளப்பட்டன. தனது இருப்பையே உறுதி செய்து கொள்ள முடியாமல் ஜனாதிபதி சந்திரிகாவும் அவருடைய அரசாங்கமும் அந்தரித்துக் கொண்டிருக்கும் வேளையில், அவர்களுக்கு சாதாரண நிலைமையிலேயே ஆர்வமில்லாத இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வுகாணும் விடயத்தில் அவர்கள் கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாத ஒன்றுதானே?

கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தின் மீதும், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீதும் கடந்த மாதம் விழுந்த மரண அடியோடு சிறீலங்கா அரசாங்கம் ஆட்டம் கண்டுள்ளதையடுத்து சமாதான முயற்சிகள் தொடர்பான பேச்சே அற்றுப் போய்விட்டது. உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்கள் சமாதான முயற்சி அடியோடு கைவிடப் பட்டுவிட்டதாக எதிர்வுகள் கூறின. இராணுவ, அரசியல், பொருளாதாரம் என்ற மும்முனைகளில் கட்டுநாயக்க தளத்தின் ஊடாக விழுந்த அடியின் காரணமாக முதுகெலும்பு முறிந்து நிமிர்ந்து நிற்க முடியாத அளவில் அல்லாடிப் போயுள்ள அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து நிமிர்த்துவதற்கான பகீரத முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா தமது முழு பலத்தையும் பயன்படுத்தி செயற்பட்டுவருகின்றார்.

இந்தச் சூழ்நிலையில்தான் விமான நிலைய அபிவிருத்தி, விமானப் போக்குவரத்து அமைச்சுப் பொறுப்போடு, கிறிஸ்தவ மதவிவகார அமைச்சுப் பொறுப்பையும் அண்மையில் ஏற்றுள்ள அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மடுமாதாவின் ஆவணித் திருவிழாவையொட்டி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மடுக்கோவிலுக்கான தனது பயணத்தை மேற்கொண்டார். கடந்த திங்கட்கிழமை நண்பகலளவில் வவுனியா ரம்யா ஹவுஸ் இராணுவ அலுவலகத்திற்கு வருகை தந்த அமைச்சரையும் அவருடைய மெய்ப் பாதுகாவலர்களையும் குழுவினரையும் வரவேற்ற இராணுவ அதிகாரிகள் அவருடைய மடு பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். விடுதலைப் புலிகளின் பிரதேசத்திற்கான மனப்பதற்றம் மிக்க இந்தப் பயணத்தையொட்டி, அவருடைய மெய்ப்பாதுகாவலர்கள் தமது ஆயுதங்களை வவுனியாவிலேயே கைவிட்டுச் சென்றார்கள். பிரமனாலங்குளம் இராணுவ சோதனைச் சாவடியைக் கடந்து அங்குள்ள பொதுமக்கள் பாதுகாப்பு பிரதேசத்தின் ஊடாக விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடியைச் சென்றடைந்த அமைச்சரையும் குழுவினரையும் அங்கிருந்த விடுதலைப் புலிகள் வரவேற்று பாதுகாப்பு வழங்கி அழைத்துச் சென்றார்கள். மடுக்கோவிலைச் சென்றடைந்து விசேட வழிபாட்டில் கலந்து கொண்ட அமைச்சரைக் குறிப்பிட்ட ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்த விடுதலைப் புலிகள் பொதுவான விடயங்கள் குறித்து கலந்துரையாடி இருக்கின்றார்கள்.

**எல்லைப் படையினரை அவர் தவறாகப் புரிந்துகொண்டு அறிக்கை வெளியிட்டதன் மூலம் பிழையான வகையில் சமாதான முயற்சிகள் குறித்து நம்பிக்கையை எற்படுத்த அவர் முயற்சித்துள்ளார்**

இந்தச் சந்திப்பை விடுதலைப் புலிகளின் பிரதேச தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களாகத் தெரிவித்து, விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை இப்போது வலியுறுத்தவில்லை என்றும், நாட்டில் உள்ள ஏனைய பிரஜைகளுடன் சமாதானத்துடனும், இறைமையோடும் தமிழ் மக்கள் வாழ்வதையே விரும்புவதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தார்கள் என்றும், இதற்குத் தேவையான வகையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்ததாகக் கொழும்பு திரும்பிய பின்னர், கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே தமது அமைச்சின் ஊடாக அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தார். செய்தி வட்டாரங்களில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்த இந்த சந்திப்பு குறித்து விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து செய்திகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், வியப்பளிக்கும் வகையில் அந்தச் சந்திப்பை மறுத்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழ்நெற் இணையத்தளத்திற்கு கருத்து வெளியிட்டிருந்தார்.

**நோர்வே அரசு சமாதான முயற்சிகளை உண்மையிலேயே தீவிரமாகவும் உறுதிப்பாட்டு டனும் மேற்கொண்டு வந்ததை அவதானித்த சிறீலங்கா அரசாங்கம் சமாதானப் பொறிக்குள் தான் சிக்கப்போவதை உணர்ந்து அதனை முறியடிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கண்கொத்திப் பாம்பைப் போல காத்திருந்தது.**

தமது எல்லைப்படையைச் சேர்ந்தவர்களே, அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தைக் கடந்தபோது பாதுகாப்பு வழங்கி உதவினார்கள் என்றும், மடுமாதா கோவிலுக்கு யாத்திரையாக வருகை தந்த அவருடன் தமது பிரதிநிதிகள் எவரும் பேச்சுக்கள் நடத்தவில்லை என்றும், எல்லைப் படையினரை அவர் தவறாகப் புரிந்துகொண்டு அறிக்கை வெளியிட்டதன் மூலம் பிழையான வகையில் சமாதான முயற்சிகள் குறித்து நம்பிக்கையை எற்படுத்த அவர் முயற்சித்துள்ளார் என்றும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். இதற்கு சர்வதேச ஊடகங்களும் தேவையற்ற வகையில் முக்கியத்துவம் கொடுத்துள்ளதன் மூலம் சமாதான முயற்சிகள் குறித்து தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்க முயற்சித்துள்ளன என்றும் அவர் குற்றம் சாட்டியிருந்தார். அரசியல் உறுதிப்பாட்டிற்காக அல்லாடிக் கொண்டிருக்கும் ஒரு நிலையில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சராகிய பெர்னாண்டோபுள்ளே விடுத்த அறிக்கைக்கு மறுப்பு தெரிவித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ள கருத்தானது, முடங்கிப்போயுள்ள சமாதான முயற்சிகளுக்கு உயிரூட்டும் நடவடிக்கைகள் எதுவுமே எந்தத் தரப்பிலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், அதற்கான முயற்சிகள் சாதாரணமானதாக அமைந்திருக்க மாட்டாது என்பதையுமே கோடிட்டுக் காட்டுகின்றன. இதுவே அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

**பி.மாணிக்கவாசகம்**

# சிறீலங்கா அரசின் இரசாயன ஆயுதக் கொள்வனவு

## பாரிய விளைவுகள் ஏற்படும் என புலிகள் எச்சரிக்கை

தமிழ் மக்கள் மீது பிரயோகிப்பதற்காக சிறீலங்கா அரசு கொள்வனவு செய்துள்ள இரசாயன ஆயுதங்களால் ஏற்படப்போகும் பாரிய விளைவுகள் குறித்து விடுதலைப் புலிகள் கடும் கண்டனத்தை தெரிவித்திருக்கிறார்கள். வன்னியிலுள்ள தலைமைச் செயலகத்திலிருந்து விடுதலைப் புலிகள் கடந்த 16ம் திகதி வியாழனன்று இது தொடர்பாக கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ் அறிக்கையில் இப்புதிய ஆயுதம் வடக்குகிழக்குப் போர்முனைகளில் பாவிக்கப்பட்டால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் சந்திரிகாவின் அரசுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ள விடுதலைப் புலிகள், தடை செய்யப்பட்ட இவ் ஆயுதத்தை கொள்வனவு செய்துள்ள சிறீலங்கா அரசை சர்வதேச நாடுகள் கண்டிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவ் அறிக்கையின் முழு விபரமும் வருமாறு, எரியூட்டும் இரசாயன வெடிப்பு முனைகளைக்கொண்ட நவீனரக ஆயுதங்களை சிறீலங்கா அரசாங்கம் வாங்கியுள்ளதை அறிந்து நாம் கவலை அடைந்தோம். ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்படும் இவ்வாயுதம் சர்வதேச ரீதியாகத் தடைசெய்யப்பட்டது. ஏவுகணையாகச் செலுத்தப்படும் இவ்வாயுதம் தீப்பிழம்பாக வெடிக்கும்போது அதிலிருந்து வெளியாகும் நச்சுவாயு போராடுபவர்களுக்கும், பொதுமக்களுக்கும் உயிராபத்து விளைவிக்க வல்லது. இந்தத் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயதங்களை வாங்கிக் குவித்திருப்பதன் மூலம் சிங்கள அரசானது ஈழப்போரை ஒரு புதிய, ஆபத்தான பரிமாணத்திற்கு விரிவாக்கம் செய்துள்ளது.

ரஷ்யாவைத் தவிர உலக நாடுகளின் தேசிய இராணுவங்கள் இவ்வாயுதப் பாவனையைத் தடைசெய்துள்ளன. போர் நியமங்களுக்கு விரோதமானதும் ஆபத்தான விளைவுகளை உண்டுபண்ணுவதுமான இந்த இரசாயன ஆயுதத்தைப் பெற்றிருப்பது பற்றி சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வித மனக்கிலேசமும் அடைந்ததாகத் தெரியவில்லை. வடக்கு கிழக்குப் போரில், பாரிய உயிர்ச்சேதம் ஏற்படுத்தும் நவீன ஆயுத தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் சிங்கள அரசானது தனது போர்வெறியை அம்பலப்படுத்தியுள்ளது. அத்தோடு இராணுவத் தீர்வில்தான் அரசுக்கு உறுதியான நம்பிக்கையுண்டு என்பதையும் வெளிப்படுத்திக்காட்டியுள்ளது. இந்தப் புதிய திருப்பமானது, தமிழரின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாணும் முயற்சிகளுக்கு பேரிடியாக அமைந்துள்ளது. தமிழர் தாயகத்திலுள்ள பட்டணங்கள், கிராமங்கள் மீது தற்போது தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் விமானத் தாக்குதல்களும் சமாதானத்திற்கான சூழ்நிலைகளைச் சிதைத்துவருகின்றன.

மிகவும் ஆபத்தான, தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை சிறீலங்கா அரசு வாங்கியுள்ளதை சர்வதேச சமூகம், குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இந்தியா ஆகியன கண்டிக்க வேண்டும். அத்தோடு இவ்வாயுதங்களைப் பாவிப்பதால் ஏற்படும் பயங்கர விளைவுகளைப் பற்றியும் சிங்கள அரசுக்கு அச்சுறுத்தல் விடுக்கவேண்டும். இவ்வாறு அவ் அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

# யாழ்.மண் மீட்கப்படும் நாள் தொலைவில் இல்லை

## துரோகங்களுக்கு துணைபோபவர்கள் எமக்கு பதில் சொல்ல வேண்டும்

### – குடாநாட்டு சீரழிவுகள் குறித்துப் புலிகள் எச்சரிக்கை –

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் சமூக, கலாச்சாரச் சீரழிவுகள் குறித்தும், தேசத்துரோக நடவடிக்கைகள் குறித்தும் விடுதலைப் புலிகளின் அரசியல்த்துறை அறிக்கையொன்றை விடுத்துள்ளனர். குடாநாட்டு மக்களுக்கு நீண்ட மடல் எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அவ் அறிக்கையில், தேசத் துரோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளதுடன், யாழ். மண் விடுவிக்கப்படும்போது அதற்கு பதில் சொல்லியாக வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முழுவிபரம் வருமாறு,

*எமது அன்புக்கினிய யாழ்.குடாநாட்டு மக்களே..!*

*யாழ்.குடாநாட்டின் கொந்தளிப்பான இக்கால கட்டத்தில் வாழும் நீங்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றீர்கள். சிங்களப் பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பு ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்க, மறுபுறம் இரத்தம் சொரிந்து பல்லாயிரம் மாவீரர்கள் உருவாக்கி வரும் புரட்சித்தீயை ஊதி அணைக்கும் முயற்சியில் தேச விரோதிகள் முழு மூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.*

*யாழ்.மண்ணின் ஒவ்வொரு சமூக கலாச்சார சீர்கேடுகளை உற்று நோக்கினால் அவற்றில் தேச விரோதிகளின் பலமான பின்னணி தெரியவரும். எமது இளம் சமூகத்தின் சுதந்திர வேட்கையை திசை திருப்ப இவர்கள் கடுமையாக முயற்சிக்கின்றனர். இதனை நிறைவேற்ற சமுர்த்தி அலுவலர், அபிவிருத்தித் தொண்டர் இன்னும் பல பெயர்களில் ஒரு எட்டப்பர் கூட்டத்தை உருவாக்க பிரயாசைப்படுகின்றனர்.*

*எமது இனிய மக்களே..!*

*எமது போராட்டம் அரசுடன் பேரம் பேசி வேலை வாய்ப்பைப் பெற ஆரம்பிக்கப்பட்டதல்ல இடிந்த கட்டடங்களுக்கு நிதியைப்பெற எம்மால் நடத்தப்படுவதுமல்ல. உன்னதமான விடுதலைக்காக, யாருக்கும் அஞ்சாத ஒரு வாழ்வுக்காக, பல நூற்றாண்டுகளாக எமது மக்கள் மீது போடப்பட்ட அடிமை விலங்குகளை உடைத்தெறியவே எமது தன்னிகரில்லாத் தலைவரால் இந்தப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அடக்கப்பட்ட சமுதாயத்தில் புரட்சி என்பது மாணவர்கள் ஊடாகவே சமூகத்துக்குப் பரவுகின்றது. எழுச்சி கொண்ட மாணவர்களை சில துரோகிகளின் காலில் விழத்தூண்டுகின்றனர். அது பயனளிக்காத போது கல்வி நிலையங்களைத் தொடர்ந்து மூடப்போவதாக அச்சுறுத்துகின்றனர். சிலர் தேச விரோதிகளை அழைத்து வந்து கல்வி நிறுவனங்களில் அரசியல் நடத்துகின்றனர். துரோகிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு கொட்டமடிக்கின்றனர். அற்பசொற்ப சலுகைக்காக, தமது சொந்த இலாபங்களுக்காக, உயர் பதவிகளிலுள்ள சிலர் தேச விரோதிகளின் முகவர்களாக தொழிற்பட்டு வருகின்றனர்.*

*தேசத்துரோகம் என்பது வெறுமனே எமது உறுப்பினர்களைக் காட்டிக்கொடுப்பது மட்டுமல்ல இந்த மண்ணை எதிரிக்கு விற்றுவிடத் துடிக்கும் தேசவிரோதிகளுக்குத் துணைபோவதின் பெயரும் தேசத்துரோகம் ஆகும். சில அரச அதிகாரிகள் கூட தமது கடமைகளை மறந்து தேச விரோதிகளின் அமைப்பாளர்கள் போல செயற்படுவதை நாம் அறிவோம். இந்த மண் விடிகின்ற வேளையில் மண்ணின் விடியலுக்காக வீழ்ந்து போனவர்களை மக்கள் ஒருபோதும் மறந்துபோவதில்லை. அதேபோல மண்ணை எதிரிகளிடம் விலைபேசி விற்க முனைந்தவர்களையும் அவர்களுக்கு உடந்தையாகச் செயற்பட்டவர்களையும் வரலாறு என்றும் மன்னிக்கப்போவதில்லை.*

*யாழ்.மண் எதிரிகளிடம் இருந்து மீட்கப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை. இந்த மண் எம்மால் முற்று கைவிட்டு மீட்கப்படும்போது எதிரிகளே தப்பமுடியாத நிலையில் துரோகங்களுக்குத் துணைபோனவர்கள் எமக்கு நிச்சயம் பதில் சொல்ல வேண்டிவரும். ஆகவே இவர்கள் விரிக்கும் துரோக வலைகளில் சிக்காமல் அவதானமாக நடந்து விடுதலையை விரைவுபடுத்த உதவும்படி கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## மடுவில் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்திக்கவில்லை

### சிறீலங்கா அமைச்சரின் கூற்றுக்கு புலிகள் மறுப்பு

கடந்த 15ம் திகதி நடைபெற்ற மடு தேவாலய உற்சவத்திற்கு சென்றபோது, திங்களன்று விடுதலைப் புலிகளின் பிராந்தியப் பொறுப்பாளர்களை சந்தித்து சிறீலங்காவின் விமானப் போக்குவரத்து, விமான நிலைய அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பேச்சுக்கள் நடத்தியதாக வெளியான செய்திகளை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

மடுவுக்குச் சென்றிருந்தபோது புலிகளின் பிராந்தியத் தலைவர்களைச் சந்தித்துத் தற்போதைய அரசியல் நிலை குறித்து பேச்சுக்கள் நடத்தியதாகவும், இந்தச் சந்திப்பின்போது மன்னார் மாவட்ட ஆயர் வண.இராயப்பு யோசப் உடனிருந்ததாக பெர்னாண்டோ புள்ளே கூறியிருந்தார். அமைச்சர் பெர்னாண்டோ புள்ளேயின் இக் கூற்றை முற்றாக மறுத்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடும் எல்லைப் படையினரையே சந்தித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். தமிழ்நெற் இணையத் தளத்திற்கு இது தொடர்பாக ஆலோசகர் தெரிவிக்கையில், மடு தேவாலய உற்சவத்திற்கு வருகைதந்த அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே, எமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் பிரவேசித்தபோது அவருக்குப் பாதுகாப்பளித்த எமது எல்லைப் படையினரை சந்தித்துள்ளாரே தவிர, அவர் கூறியதுபோன்று எமது அமைப்பின் முக்கியஸ்தர்கள் எவரையும் அவர் சந்திக்கவில்லை. இந்த எல்லையை அமைச்சர் கடந்த போது அவருக்குப் பாதுகாப்பு வழங்கிய எல்லைப் படையினரது பங்களிப்பையும் பதவி நிலைகளையும் அமைச்சர் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதாகவே தெரிகிறது.

அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே அங்கம் வகிக்கும் அரசு தற்போது மோசமானதோர் அரசியல் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில், புலிகளின் தலைவர்களுடன் தான் சந்தித்ததாக கூறியுள்ளதன் மூலம் சமாதான முயற்சிகள் குறித்துத் தவறான எண்ணப்பாடொன்றைத் தோற்று வித்துள்ளது வருத்தத்துக்குரியது. புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்ததாக இவர் வெளியிட்ட தகவல்களைச் சர்வதேச ஊடகங்களும் மிகவும் பெரிதுபடுத்தியுள்ளன. எனினும், இது குறித்து சாதகமாகக் கருதக் காரணமெதுவுமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் இம் மறுப்பு செய்தி வெளியாகிய பின்னர், இது பற்றிக் கருத்து தெரிவித்த பெர்னாண்டோ பிள்ளை, ஒரு கிறிஸ்தவ அமைச்சர் என்ற முறையிலேயே தான் மடுத் திருப்பதிக்குச் சென்றதாகவும், தனக்கு அங்கு விடுதலைப் புலிகள் உரிய பாதுகாப்பை வழங்கினர் எனவும், தான் அங்கு புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் எவரையும் சந்திக்கவில்லை. பிராந்தியத் தலைவர்களைத்தான் சந்தித்தேன். இது விடயத்தில் செய்தி ஊடகங்களில் அளவுக்கு மீறி நம்பிக்கை தரும் செய்திகள் வெளியானது தவறானதாகும் எனக் கூறியுள்ளார்.

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி சுகன்யா சிறீஸ்கந்தராஜாவை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்

**குணபாலசிங்கம் கிருசாந்தன்**



**இடம்:** 45144 Essen, Germany.
**வயது:** 06 (07.09.1995)
**தமிழ் பாடசாலை:** எச்ன் தமிழாலயம்
**பொழுதுபோக்கு:** TTN பார்த்தல், வானொலிகேட்டல்
**உறுப்பினர் எண்:** G-103

தமிழீழத்தின் மரங்கள்
பனை வாழை கமுகு
தென்னை மாதுளை தேக்கு
மாமரம் முதிரை செம்மனை
பலா வேம்பு வாகை
கொய்யா பாலை ஆலமரம்

## தகவல் முற்றம்

### வாசனை இரகசியம்!

மூக்கு குடைவது சிலருக்கு சுகமாக இருக்கும். நாளடைவில் இது மூக்கில் உள்ள நுண்ணிய செல்களை அழித்துவிடும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

காலையில் குளிக்கும்போதும், முகத்தை சுத்தப்படுத்தும் போதும் மறக்காமல் மூக்கை சுத்தப்படுத்திவிடவேண்டும். அதை விடுத்து சாதாரண சமயங்களில் மூக்கைக் குடைந்தால் நுண்ணிய செல்கள் அழிவதோடு நோய் பரவலுக்கும் ஏதுவாகிவிடும்.

மூக்கில் எந்த பக்க மூக்கு சிறப்பான பணி செய்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? வலதுபக்க மூக்கானது நல்ல வாசனைகளை மட்டும் நுகர்ந்து அதை மூளைக்குத் தெரிவிக்கும். இடதுபக்க மூக்கானது வாசனைகள் ஒவ்வொன்றையும் தரம் பிரித்துக்காட்டும் பணியைச் செய்கிறது!

### நூறாண்டு வாழ

இனிப்பு, எண்ணெய், வெண்ணெய், கொழுப்புப் பண்டங்களைக் குறைத்துச் சாப்பிட வேண்டும். காய்கறி, பழம், கீரைகள் நிறையச் சாப்பிட வேண்டும். இரும்பு, சுண்ணாம்புச்சத்து அதிகமுள்ள காய்கறி, கீரைகள் மிகவும் நல்லது.

மீன் சாப்பிட வேண்டும். நாள்தோறும் 30 நிமிடம் காற்றோட்டமாக நடவுங்கள், உடல் பயிற்சி செய்யுங்கள் இது மன இறுக்கத்துக்கு நல்லது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

– *க. உதயகுமார், லவுசான்- சுவிஸ்.*

## மணிமொழிகள்


★ தங்கள் பெற்றோர்களிடம் அன்பு செலுத்துபவர்கள், பிறரிடம் வெறுப்புக்காட்டத் துணியமாட்டார்கள். – *கன்பூசியஸ்*

★ தவறை மன்னிக்கும் குணம் ஒருவனின் உயர்ந்த பண்பாட்டைக் காட்டுகின்றது. – *மகாத்மாகாந்தி*

★ ஏழை மக்கள் வறுமையால் மூடராய் இருக்கிறார்கள். செல்வர்கள் பேராசையால் மூடராய் இருக்கிறார்கள். – *மக்சிம் கார்க்கி*

★ அழகு என்பது சீக்கிரத்தில் அழிந்துவிடக் கூடிய ஒரு கொடுங்கோலாட்சி. – *சோக்கிரட்டீஸ்*

★ எனது பூமியே, நான் உனது கரையில் ஓர் அந்நியனாகவே வந்து உனது வீட்டில் ஒரு விருந்தாளியாக வாழ்ந்து, ஒரு நண்பனாகவே உன் இல்லத்தைவிட்டு வெளியேறுகின்றேன். – *ரவீந்திரநாத் தாகூர்*




## கதை முற்றம்

### ஒரே வார்த்தை

'முல்லா! உங்கள் வயது என்ன?' என்று நஸ்ருதீனைப் பார்ப்பதற்கு வெளியூரிலிருந்து வந்த ஒருவர் கேட்டார்.

'நாற்பது!'

முல்லா பதில் சொன்னதும், கேள்வி கேட்டவருக்கு அதிசயமாக இருந்தது. அவர், 'ஐந்து வருடங்களுக்கு முன்பு உங்களை அரண்மனையில் பார்த்தேனே, அப்போது உங்கள் வயது நாற்பது என்று சொன்னீர்களே!' என்று கேட்டார்.

'பார்த்தீர்களா! அதுதான் என் சிறப்பு. இந்த முல்லா சொன்ன வார்த்தையை மாற்றிப் பேசமாட்டான்!' என்று பெருமையோடு கூறினார் நஸ்ருதீன்.

### அவ்வளவு முட்டாள் அல்ல

சந்தையில் அடுத்தவன் ஜாடியிலிருந்த கோதுமையைத் தம் ஜாடியில் கொட்டிக்கொண்டிருந்தபோது நஸ்ருதீன் பிடிபட்டார். நீதிபதி முன் நிறுத்தப்பட்டார்.

நீதிபதி வழக்கை விசாரித்தார்.

'ஐயா நீதிபதி, நான் ஒரு முட்டாள். அடுத்தவன் கோதுமை அது என்பதை அறிந்து கொள்ளும் அறிவில்லாத முட்டாள். அதனால் அடுத்தவன் கோதுமையை என் ஜாடியில் கொட்டிக்கொண்டேன்!' என்று கூறினார் நஸ்ருதீன்.

'அப்படியானால் உமது கோதுமையை அடுத்தவன் ஜாடியில் கொட்டியிருக்கலாமே?' நீதிபதி கேட்டார்.

'ஐயா, நான் அடுத்தவன் கோதுமை எது என்று அறியாத முட்டாள். ஆனால் என் கோதுமை எது என்று அறியாத அளவு அவ்வளவு முட்டாளல்ல!' என்றார் நஸ்ருதீன்.

எப்படி நஸ்ருதீனின் முட்டாள்தனம்?

### சந்திரன் பயன்

முல்லா நஸ்ருதீனைச் சுற்றி மாணவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். முல்லா அடிக்கடி அற்புதமான பேருண்மைகளை அள்ளி வீசிக்கொண்டிருந்தார். அடுத்து அவர் என்ன சொல்லப்போகிறார் என்று எல்லோரும் ஆவலோடு காத்து இருந்தார்கள்.

முல்லா நஸ்ருதீன் பேசினார்:

'சூரியனைக் காட்டிலும் சந்திரனே மிகவும் பயன் தருகிறான்.'

'எப்படி?'– ஒருவன் கேட்டான்.

'இரவில்தான் நமக்கு வெளிச்சம் தேவை. அதைத் தருபவன் சந்திரன்தானே!' என்றார் நஸ்ருதீன்.

மாணவர்கள் குருவின் கண்டுபிடிப்பைப் பாராட்டினர்.

## கண்டுபிடியுங்கள்

**கடந்த வார விடை**

| | | | | |
|---|---|---|---|---|
| மு | த் | த | மி | ழ் |
| மா | வ | ர | சி | |
| மா | ம | ல | ர் | |
| மா | தி | னி | | |
| மா | தி | னி | யா | ள் |
| மா | த | வி | | |
| மா | த | ர | சி | |

பின்வரும் சதுரங்களில் உள்ள எழுத்துக்களின் துணைகொண்டு தூய தமிழ்ப் பெயர்களைக் கண்டு பிடியுங்கள். முடியாது விட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மா | | | தி | |
| ம | | | கை | |
| ம | | | ள் | |
| ம | | | ழி | |
| ம | | | தி | |
| ம | | | | ள் |
| ம | | லி | | |

## வினா-விடை முற்றம்

**கடந்தவார விடைகள்:**

1. திராட்சை
2. கழுதைகளில்
3. 165 செ. மீற்றர்
4. 2400 கி. மீற்றர்
5. டைனமற் என்னும் வெடிமருந்தைக்கண்டு பிடித்த நோபல் என்பவர் விட்டுச்சென்ற மூலதனத்திலிருந்து கொடுக்கப்படும் பரிசு
6. மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்

**இவ்வார வினாக்கள்**

1. அளவுக்கு மிஞ்சினால் .................... ........... மிகுதியை முடிக்கவும்.
2. X-Ray [எக்ஸ்ரே] என்னும் பெயர் எப்படி வந்தது?
3. குரங்கினத்தில் பெரியது எது?
4. இருதயத்திற்கு குருதியை கொண்டுபோய் சேர்க்கும் கலன்கள் எவை?
5. உலகத்தில் எங்கே அதிகமாக பஞ்சு விளைவிக்கப்படுகிறது?
6. கூவுதல், கனைத்தல், ஊளையிடுதல் இந்தச் சத்தத்திற்குரிய உயிரனங்கள் எவை?

அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.

சிறு கதை

# ஜீவகாருண்யன்

அன்றைய தினம் வந்திருந்த ஈழமுரசு பத்திரிகை கடிதப்பெட்டிக்கு வெளியே தலையை நீட்டி என் வரவைப் பார்த்திருந்தது. எந்தக் களைப்போடு வந்தாலும் பத்திரிகையைப் பார்த்தால் உடனே ஒரு தேநீர் குடித்ததுபோன்ற உற்சாகம் எனக்குள் வந்துவிடும். படபடவெனப் பக்கங்களை ஒரு தட்டு தட்டினேன். வழமையாய் முதலில் என்னை இழுக்கும் மாயோனை முந்திக்கொண்டது அந்தப்படம்.

'எமது விடிவிற்காய் தமது உயிர்களை' அந்தப் பக்கத்தில் மிடுக்கோடு நின்றான் அவன்.

அவன்..? அவனேதான் என் நண்பன் ரகு... ஒரு கணம் அதிர்ந்து போனேன். என்னால் நம்பமுடியாத அந்த செய்தியைப் படிக்க கண்கள் மறுத்து பஞ்சடைவதுபோல் ஒரு பிரமை. மெல்லக் கண்ணீரை விட்டு கண்களை கழுவி அவன் கதையைப் பார்த்தேன். சாதனையாளன்... சரித்திர நாயகன்... வரலாற்றில் அவனும் இடம்பிடித்து.... அப்பனே... அவனால் எப்படி முடிந்தது. அவன் வென்றுவிட்டான்.. அவன் வீரன்... அது எனக்கும் பெருமைதான். எது எப்படியோ அவன் சாகடிக்கப்பட்ட துயரம் மட்டும் என்னை அழவைத்துவிட்டது. அழுதேன்.

ரகுவும் நானும் ஒன்றாக விளையாடி, ஒன்றாகவே அரிவரியில் 'அ' எழுதப் பழகி, ஒன்றாக பள்ளி முடித்து அந்த ஆனந்தமான உலகத்தில் அவனை மட்டும் தனியாய்விட்டு விட்டு இங்கு வந்து சேர்ந்ததால் இன்று கோழைபோல் அழவேண்டிவந்தது. நன்றாக அழுதுமுடித்தேன்.

அவனைப் பிரிந்துவந்த துயரம் முன்பொருபோதும் என்னை வாட்டியெடுக்கவில்லை. அவன் அங்கே... நான் இங்கே... ஒரு சிறு வேலி அவ்வளவுதான். கடைசியாய் அவன் கடிதம் வந்து கிட்டத்தட்ட இரண்டு வருஷம் ஓடியிருக்கும். அந்த வரிகள் நேற்றல்ல இன்று... அதுவும் என் முன்னே வந்து சொல்வதுபோல்... மோகன்... 'என் தாயை போல என் தாயகத்தை நேசிக்கிறேன்' என் நினைவு மலர் அவனுக்காய் மலர்ந்தது.

மெல்லிய றோஜா போன்ற அவனின் மெத்தென்ற இதயத்துக்குள் பாயும் புலிவீரனாகும் வலிமை எப்படிப் புகுந்துகொண்டது. என்னால் ஜீரணிக்க முடியாத உண்மையிது.

ரகுவுக்கும் எனக்கும் அப்போது சுமாராய் ஒரு பத்து வயசிருக்கும். அவன் ஒரு பயந்தாங்கொள்ளி. எப்போதும் பெட்டைக்கோழி மாதிரி என்னுடைய அட்டாதுட்டியம் தாங்காத அம்மா அடிக்கடி எனக்கு வாட்டும்போது, 'பாரடா ரகுவை... அவனும் உன்ரை வயசுப் பிள்ளைதானே... மிதிச்ச புல் சாகாமல் மெத்தனமாய் நடக்கிறான்' என்று தான் பேசுவா என்னுடைய நண்பன்தான் இருந்தாலும் என்ரை இழுப்புக்கு எடுபடாத ஒரு பிறப்பு. ஒரு நாள் அவனை மடக்கி எங்கள் வீட்டு முற்றத்தில் நின்ற மாலைதீவு இளநீர் குலைக்கு குறிவைத்தேன். ரகு ஏணியை எடுத்து மரத்தில் சாத்தினான். நான் வேகமாய்.. படுவேகமாய் ஏறியிட்டன்... ஏறினாப்பிறகுதான் தெரிஞ்சிது குலையிலை கொத்தாய் கிடந்த இளநீரைப்பிரிக்கிறளவு தைரியம் என்னிடமில்லையென்று. விட்டேனா பார்... என்று வீரன் மாதிரி குலைநீக்கி ஓங்கி... ஒரே வெட்டு... வெட்டுதான் 'ஐயோ'.... என்ரை சத்தம் கேட்ட ரகு பயத்தோடை 'என்னடா... என்ன!..' என்றான். நான் இரத்தம் ஒழுகிய என் இடது கையை காட்டினேன். அவ்வளவும்தான். 'ஐயோ... ஐயோ ஓடியாங்கோ பாம்பு கடிச்சிட்டுது' இப்படிக் கதறிய ரகு சுருண்டு விழுந்தான். எனக்குள் ஒரே பயம் கையைத் திரும்பியே பார்க்காமல் ரகுவைப் பார்த்தேன். அவன் மூச்சில்லாதவன்போல்... அதற்கிடையில் அங்கு ஓடிவந்த தையல் அன்ரி மகனைத் தூக்கி நாகதம்பிரானே என்ரை பிள்ளையை காப்பாத்து என்று கதறினா. கூடவே வந்த பக்கத்துவீட்டு தேவன் மாமா ரகுவின் முகத்திற்கு தண்ணி தெளித்தபடி அங்கை கடிச்சிருக்கு... எங்கை... என்று தேடினார். மரத்தின் மேலிருந்த எனக்கு அங்கு நடப்பவற்றைப்பார்க்க பயம்கூடியது. மெதுவாய்... மிகமெதுவாய்... 'தேவன் மாமா பாம்பு கடிக்கேல்லை இஞ்... இஞ்சை.. என்று என் கையை தூக்கி காட்டவும் ரகு மூச்சை தெளிந்து விழித்துக் கொள்ளவும் சரியாய் இருந்தது.' தேவன்... தேவன்... அவனை இறக்கு என்று தையல் அன்ரி பதறினா. தேவன் மாமா கோபத்தோடு 'ஏன்டா ஏறினனீ... ஏன்டா ஏறினனீ?' என பேசியபடி என்னை மெதுவாய் இறக்கி கையைப்பார்த்தார். என் பெருவிரலில் ஒரு துண்டு வெட்டியபடி தொங்கியது. அது இன்றும் ஊனைவிரலாய்... இந்த வெட்டுக்காயத்தைக் கண்டு மயங்கி விழுந்தவன் களத்தில் காயப்பட்ட தோழர்களை காவிச்சென்றான் என்றால் எப்படி நம்புவது. எதிரிகளின் பாசறை தேடி தேடி திரிந்து சாதனை படைத்தானாம் இது நடக்குமா? ஆனால் நடத்தித்தானே முடித்திருக்கிறான். கொலை... கொலை... இது அவனது நெஞ்சை பிளந்த சொல்லாச்சே... பின்னே எப்படி? கொலைக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்...

அந்தக் கொலை நிகழ்ந்த சம்பவம்கூட அவன் நினைவு மலராய் இன்று இன்னும் பிரிகிறது. நாங்கள் இரண்டுபேரும் மட்டுமல்ல எங்கள் வகுப்பில் எல்லோரும் புலமைப் பரிசிலுக்காய்ப் போட்டி போட்டோம். எனக்கு தெரியும் ரகு பாஸ்பண்ணுவான். அவ்வளவு கெட்டிக்காரன் ஆனால் நான்... எனக்கு எப்பவுமே அவசரம். சரியாய் செய்வனென்ற நம்பிக்கையில் விறுவிறென விளாசிதள்ளுவன் கடைசியில்... ஆனால் ஸ்கொலசிப்பில் கோட்டைவிடக் கூடாதென்ற பயத்தில் ரகுவும் நானும் ஓடியோடி பின்னேர வகுப்புக்களுக்கு பறந்து திரிந்த நேரம். சோதினைக்கு மூன்று நாள் இருக்கும்போது ரகுவுக்கு சரியான காய்ச்சல் வந்திட்டுது. அம்மாவுக்கு ஒரே பயம். 'ரகுவுக்கு காய்ச்சலாம் நீ வெயில் வளிய திரியாதை சோதினை நேரம்' என்று சட்டம் போட்டுவிட்டு தையல் அன்ரி வீட்டுக்கு போய் வந்தா. அம்மாவின் முகம் சரியாய் வியர்த்து பேயறைந்த மாதிரி இருந்ததைப்பார்த்த அப்பா 'என்ன யோசினை பலமாயிருக்கு' என்றார். அம்மா அப்பாவின் கேள்விக்குப் பதிலாய் எனக்கு ஒரு எச்சரிக்கை. 'மோகன் நீ ரகுவீட்டை இனி போகவேண்டாம். அவனுக்கு மூளைக்காய்ச்சல் போல கிடக்கு... கொலை செய்திட்டன் கொலை செய்திட்டன் எண்டு பிதற்றுறான். தொத்து காய்ச்சலோ தெரியாது' என்றா. எனக்கு ஒரே அழுகை... பாவம் ரகு சோதினை எழுதாமல்போனால் எவ்வளவு கவலைப்படுவான் என்ற கவலை. அதுவே எனக்கு பெரிய தலையிடி... விடிந்தால் சோதினை அதற்கிடையில் ரகுவைப் பார்த்தால்தான் நிம்மதியாய்ப் படிக்கலாம் என்று எண்ணியபடி பின்னேர வகுப்பு சாட்டில் ரகுவீட்டுக்கு போய்விட்டேன். அவன் கட்டிலில் சுருண்டு கிடந்தான். மெல்ல கிட்டப்போய் 'என்ன சுகமே... நாளைக்கு வருவியா...?!' என்றேன். முகமெல்லாம் வாடி கண்கள் சோர்ந்து கிடந்த ரகு என் கையைப் பிடிச்சபடி, மோகன் நான் கொலை செய்திட்டன்ரா கொலை!! என்றான். அவன் கண்ணிலிருந்து கண்ணீர் ஓடியது. எனக்கோ பயம் கூடியது. அம்மா சொன்னது சரி இவனுக்கு மூளை.. மெதுவாக கையை விலத்தி... 'ரகு உனக்கு காய்ச்சல் விடேல்லை.. நீ படு... நாளைக்கு வாறன்' என்று களரப்பார்த்தேன். அவனோ என் கையை இன்னும் இறுக்கமாய்ப் பிடித்தபடி 'நான் ஒண்டுக்கு போகவேணும் வா கோடிப்பக்கமாய் ஒருக்கால் போவம்' என்றான். எனக்கு ரகுவைப் பார்க்க பாவமாயிருந்திச்சு மெல்லப் பிடித்துக்கொண்டு வெளியில் வர தையல் அன்ரி ஓடிவந்து 'ஏன் ரகு எழும்பினனீ.!!' என்றா. 'எனக்கு காய்ச்சல் விடுகிது கொஞ்சம் காத்துப்படவேணும் போல இருக்கு' என்றான் ரகு. எனக்கு ஒரே குழப்பம் 'அம்மா சொன்னது மெத்தச்சரி ஒண்டுக்கு இருக்க வந்தவன் தென்னங்குத்தியிலை குந்தியிருந்து காத்து வாங்கிறான்' என்று நினைக்க, அவன் மீண்டும் புலம்பத்தொடங்கினான்.

'மோகன் உந்தப் பூசணிக்கொடி படர்ந்திருக்கிற சாம்பல் பிட்டியிலதான்ரா எறிஞ்சனான். நான் எறிஞ்சவுடனை பேசாமல் கிடந்திட்டு கொஞ்ச நேரத்திலை எழும்பிப் போனது. ஆனால் அடுத்தநாள் செத்து போச்சு' என்றான். எனக்கு நல்லாய் விளங்கிச்சு ஏதோ ஒன்று செத்திருக்கு. ஆனால் மனுசரில்லை... மிகவும்



துணிந்தவன் போல 'என்னத்தை எறிஞ்சனி' என்றேன். 'என்ரை சாம்பல்கோழி.. உனக்கு தெரியுமெல்லே குண்டாய்... அந்தப் பெரிய கோழி... ஒவ்வொரு நாளும் முட்டையிடும். எத்தினை முட்டையை நானும் நீயும் ஒலை கொழுத்தி சுட்டு சாப்பிட்டிருக்கிறம். இப்ப... அதை நானே கொலை செய்திட்டன்' என்று கண்கலங்கினான். நான் ஆர் அடிச்சாலும் அழமாட்டன். வீட்டிலை அக்காளவைபோடை அடிபடுவன். பெரியக்கா விளாசிப்போடுவாள் அது ஒரு மொக்கு. ஆனால் சின்னக்கா என்னோடை சரியான நேசம். 'ஏன்ரா அடி மாடு மாதிரி கும்ம அசையாமல் நிக்கிறாய்' என்று பேசுவாள். நான் அப்படி ஒரு விறுமன். ஆனால் எனக்கு முன்னால் ஆரும் கண்கலங்கினால் மட்டும் தாங்கமாட்டன். அப்பிடி அழுதால் நானும் அழுவன். ரகுவைப் பார்த்து நான் அழ அவன் அழுவதை நிறுத்தி...

மோகன் அன்றைக்கு வீட்டிலை ஒருதருமில்லை நான் மாலுக்கை இருந்து படிச்சுக்கொண்டிருந்தன். அந்த சீதேவி வந்து அம்மா சுளகிலை விளக்கி வைச்சு போட்டுபோன எள்ளை கிளறி போட்டுது எனக்கு சரியான கோவம் வந்திட்டுது... எள்ளுப்பாகு எள்ளுப்பாகு எண்டு அம்மாவை அரிச்ச அரிப்பு இதுக்கொங்கை தெரியப்போகுது மூதேவி எனத்திட்டியபடி தூக்கி ஒரே எறி... அதுபோய் அந்த சாம்பல் பிட்டியிலை விழந்தது. எறிஞ்சாப்பிறகுதான் யோசிச்சன் பாவம் வாயில்லா பிராணி ஓடிப்போய் தூக்கிவிட்டன். அது பேசாமல் போச்சுது. ஆனால் அடுத்தநாள் அம்மா சொன்னா 'சாம்பல் கோழி கூட்டுக்கை செத்துப்போய் கிடக்கு... பாம்பு கீம்பு பூந்தால் மற்றக்கோழிகளையும் கொத்தியிருக்கும் ஆனால் மற்றக் கோழியள் நல்லாய் நிக்குதுகள்' என்று. எனக்கு ஒரு மாதிரி இருந்திச்சு. போய்க் கோழியைப் பாத்தன். அப்பா சொன்னார் 'ரகு அந்தக் கோழியை கொண்டுபோய் எலுமிச்சையடியிலைபோடு தாக்கவேணும். ஏதும் நோய் நொடி எண்டால் மற்றதுகளும் செத்திடும் என்றார். எனக்கு காலும் ஓடேல்லை கையும் ஓடேல்லை. கோழி... என்ரை சாம்பல்கோழி அதை நான் கொலை செய்திட்டனெண்டு சொல்லமுடியாமல் தவிச்சுப்போனன். அதுக்கு நான் என்ன சாந்திசெய்ய எனக்குக் குமுறியபடி, 'அப்பா அதை இந்த சாம்பல் பிட்டியிலை தாட்டுவிடுங்கோ... அது நெடுகலும் அதிலைதானே சாம்பல் குளிக்கிறது' என்றேன். அப்பாவும் அம்மாவும் என் எண்ணப்படியே அதை அடக்கம் செய்துவிட்டனர் என்று நா தழுதழுத்தான்.

எனக்கு நன்றாகவே தெரியும். ரகு ஜீவகாருண்யம் மிக்கவன். நாங்கள் இருவருமே சிறுவர்களாக இருந்தபோதே அவன் உயிர்கள் மேல் மிகுந்த அன்பு கொண்டவன். நான் அவனுக்கு நேர் எதிர்மாறு. வேலியில் ஓணானைக் கண்டால் கட்டாயம் கல்லால் அடிப்பேன். ஆனால் அவன் வேலி ஓணானை விரல்விட்டு எண்ணி மகிழ்வான். பேனை அட்டையை கண்டால் நான் சுருளப்பண்ணி சரைகட்டி வைப்பேன். அவன் மண்புழுவைக்கூட மிதிக்கமாட்டான். எனக்கு பிராணிகளை இம்சிப்பதில் அலாதிப் பிரியம். அவனோ இந்த விளையாட்டுக்களில் ஒருபோதும் சேரவே மாட்டான்.

தையல் அன்ரி இடைக்கிடை பால் வாங்க வருவா. அப்போதெல்லாம் என் அம்மா 'ஏன் தையல் உங்கடை பசுவிலை பாலில்லையோ' என்று கேட்பா. அவ சிரித்தபடி, இண்டைக்கு என்ரை காருண்ணியன்தான் வீட்டிலால இருந்தவர் தெரியும்தானே. பின் வளவில கட்டியிருந்த கண்டுக்குட்டியை அவிழ்த்து விட்டிருக்கிறான். ஏனெண்டு கேட்டால் வேதாந்தம் பேசுறான். அது பச்சைப்பாலன்.. பாலுக்கு கதறுது பார்த்துக்கொண்டிருக்கிறவை மனுசர் இல்லையாம்.

அன்ரி சொல்வது போல் அவன் உண்மையில் காருண்ணியன். நான் பார்த்தவரையில் அவன் எந்த உயிரையும் வதைசெய்யவில்லை. தர்மம் தலை காக்கும் என்பார்கள். ஆனால் என் ரகுவின் தலையல்லவா கொய்யப்பட்டிருக்கிறது.

அவன் ஊரை நேசித்தான். உறவுகளை நேசித்தான், உலகிலுள்ள ஜீவன்கள் அத்தனையையும் நேசித்தான், தாயைப் பூசித்தான், தாயகத்தை யாசித்தான் எல்லாவற்றிற்கும் விலையாய் இன்று தன்னையே கொடுத்துவிட்டான். இவன் கொலைகாரனல்ல. ஜீவகாருண்யன் என் ரகு. ஜீவகாருண்யன் இதுவே நான் சூடும் புகழ்மாலை.

**சுபா (யேர்மனி)**

# வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் – (டிகோல் தொடர் - 58)

## தலைவன் கடமை

ஏறத்தாழ 4 ஆண்டுகளாக, டிகோல் பல்வேறு முடிவுகளை எடுத்து வந்தது நமக்குத் தெரியும். லண்டனில் இருந்தவரை, அவர் இராணுவ முடிவுகளை, அரசியல் முடிவுகளை எடுத்து வந்தார். போராடும் பிரான்சு இயக்கத்துடன் இணைந்த ஆசிய, ஆஃப்ரிக்கக் காலனிகளை, அவரே, நேரடியாக ஆட்சி செய்யவில்லை. அவரால் நியமிக்கப்பட்ட, அவரது நம்பிக்கைக்குரிய கவர்னர்கள் அங்கெல்லாம் ஆட்சி புரிந்தனர். 1940க்கு முன்பிருந்த பிரஞ்சு சட்டங்கள் அங்கெல்லாம் அமுலில் இருந்தன. நீதி மன்றங்கள் இயங்கி வந்தன.

1943 முதல், அவர் அல்ஜீரியாவில் தனது அலுவலகத்தை மாற்றிக்கொண்ட போதும், பிரஞ்சு வட ஆஃப்ரிக்காவையும் அவரே நேரடியாக ஆட்சி செய்யவில்லை. கவர்னர்களும், அவரது அமைச்சர்களும், அவரது வழிகாட்டலில் ஆட்சி செய்தனர்.



1944 முதல், அவர் தொடர்ந்து அரசியல் முடிவுகளையும், இராணுவ முடிவுகளையும் எடுத்துக் கொண்டும், பிரான்சில் எதிர்ப்பு இயக்கங்களின் நடவடிக்கைகளை நெருக்கமாகப் பார்த்துக்கொண்டும், வழி நடத்திக் கொண்டும் இருந்தார். அமைச்சரவையும், தற்காலிக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றமும் அவர் பல முடிவுகளை எடுப்பதற்கு உதவின. அல்லது எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு விளக்கங்கள் கோரின.

அவரது எதிரிகள் அவரை ஒரு 'சர்வாதிகாரி', 'ஃபாசிஸ்ட்' என்று வர்ணித்தாலும், மொத்தத்தில் அவர் ஒரு சனநாயக வாதியாகவே செயல்பட்டார். அவரது அமைச்சர்களும் சரி, பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி, உண்மையிலேயே அவர் சர்வாதிகாரியாய் இருந்தால், அவரை விட்டு விலகி இருப்பார்கள்.

ஒரு சில பொறுப்புகளை மட்டுமே அவரது நேரடி கண்காணிப்பில் வைத்திருந்தாலும், அவரது அமைச்சர்களின் முடிவுகளை அவர் அறிந்திருக்க வேண்டி இருந்தது. மொத்தத்தில், அவருக்கு ஓய்வு அதிகம் இல்லை.

இருந்த பொறுப்புக்களும், தலைவலி கொடுத்த கவலைகளும் போதாது என்று அவருக்குப் புதிய பொறுப்பு ஒன்று வந்து சேர்ந்தது. நாட்டின் விடுதலை நெருங்குகிறது.

1940தில், நாட்டைக் காட்டிக்கொடுத்த துரோகிகளை என்ன செய்வது. எப்படி நடத்துவது? முதலில், துரோகி என்று எப்படி ஒருவரைக் குற்றஞ்சாட்டுவது?

(இன்றும், பிரான்சில், 1940 தில், மார்ஷல் பெட்டெய்ன் எடுத்த முடிவு சரிதான் என்று வாதாடுபவர்கள், சிந்திப்பவர்கள் இருக்கிறார்கள். 1952ல், எனது 13வது வயதில், காரைக்காலில், படித்த, அனுபவம் நிறைந்த, வயதான ஒரு முஸ்லீம் பெரியவர் டிகோல்– பெட்டெய்ன் மோதலை, சுருக்கமாக என்னிடம் விவரித்தார். அவர் 40தில், இரு தலைவர்களுமே எடுத்த முடிவு சரிதான் என்று விளக்கினார்.

அவரது முக்கியமான கருத்து இது:

'மார்ஷல் பெட்டெய்னின் சரணாகதி முடிவு, பிரஞ்சு மக்களையும், பிரான்சு நாட்டையும் பல துன்பங்களில் இருந்தும், பல கொடுமைகளில் இருந்தும் பாதுகாத்தது. பெட்டெய்ன் இட்லருடன் சமாதானம் செய்து கொண்டதால் தான், கலாச்சார, சரித்திர முக்கியத்துவங்கொண்ட பிரஞ்சு நகரங்கள்– குறிப்பாக பாரிசு மாநகரம்– முழு அழிவில் இருந்து காப்பாற்றப்பட்டன. இதனை நாம் மறத்தல் ஆகாது.'

ஆனால், நான் அன்றும்– இன்றும் டிகோல் எடுத்த முடிவு தான் சரி என்று நம்புகிறவன். நாட்டின் மானம், மேற்கண்டவற்றை எல்லாம் விட மிக முக்கியமானது. பெட்டெய்ன் நாட்டின் மானத்தை அடகு வைத்தார், டிகோல் தான் நாட்டின் மானத்தைக் காப்பாற்றினார் என்று அன்றும் இன்றும் நம்புகிறவன் நான்) இதனை இங்கே எதற்கு எழுதுகிறேன் என்றால், துரோகி என்று எளிதாக, அவசரப்பட்டு, யாரையுங் குற்றஞ்சாட்டி விட முடியாது என்பதைக் குறிக்கத்தான்.

1940தில் டிகோலுக்கு 50 வயது. அவர் நேரடியாக பாதிக்கப்பட்டவர், வேதனைப்பட்டவர், வெட்கித் தலை குனிந்தவர் என்று கூற வேண்டிய அவசியம் இல்லை.

1940 தோல்விக்குக் காரணமான எல்லாத் துரோகிகள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் முடிவு எடுத்தார்.

என்ன நடவடிக்கை? சட்ட மூலமான நடவடிக்கை.

எப்போது? நேரம் வந்ததும்.

அந்த நேரம் நாட்டு விடுதலைக்கு முன்பே வந்தது.

Pierre Pucheu என்பவர், பிரான்சின் பெருமைக்குரிய Ecole Normale Supérieure [பேராசிரியர்களை உருவாக்கும் உயர்க் கல்வி நிறுவனம்] கல்வி பயின்றவர். கம்யுனிஸ்டுகளின் எதிரி. ஃபெப்ரவரி 41 முதல் ஏப்ரல் 42 வரை, விஷி அரசில் உள்துறை அமைச்சர் ஆகப் பணி ஆற்றியவர். கோடை 41 இல், விஷி அரசு உருவாக்கிய மோசமான சட்டங்களுக்குப் பொறுப்பானவர். Chateaubriant என்ற பிரஞ்சு நகரில், ஒரு ஜெர்மானிய இராணுவத் தலைவன் சுட்டுக் கொல்லப்பட்டபோது, ஜெர்மானியர்களின் விருப்பத்திற்கேற்ப, இவரே 25 பிரஞ்சுக் கம்யுனிஸ்டுகளைத் தேர்ந்தெடுத்தவர். அவர்கள் அனைவரும் ஜெர்மானியரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

புத்திசாலி என்று பெயரெடுத்த புய்ஷெ, 1942இல், ஜெர்மானியர்கள் தோல்வி காண்பார்கள் என்று உணந்து, விஷி அரசை விட்டு நீங்கி ஸ்பெயின் நாட்டில் புகுந்தார். அங்கிருந்தபடியே, அவர் பல முறை வட ஆஃப்ரிக்காவில் ஜெனரல் ஜிரோவுடன் தொடர்புகொண்டு, பிரஞ்சு இராணுவத்தில் இணைந்து போர் புரிய வேண்டினார். ஃபெப்ரவரி 43இல், மாற்றுப் பெயரில், பிரஞ்சு இராணுவத்தில் இணைய ஜிரோ அனுமதி அளித்தார். புய்ஷெ மே 43ல், மொரோக்காவில், கசாப்லான்க்கா துறைமுகத்தில், நம்பிக்கையுடன், வந்து இறங்கினார். ஜிரோ, கருத்து மாறி, புய்ஷெவை, சிறை வைத்தார்.

இந்த விவரங்கள் பிரஞ்சு தேசிய விடுதலைக் குழுவுக்குத் தெரியவந்தன.

14.08.43 இல், அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

05.03.44 இல், அவர் மீதான வழக்கு ஆரம்பித்தது.

கம்யுனிஸ்டுகளும், ஏன் தேசிய எதிர்ப்புக் குழுவும் அவருக்கு மரண தண்டனை அளிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தன.

ஜெனரல் ஜிரோ, நீதி மன்றத்துக்கு வந்து, புய்ஷெவின் பழைய நடவடிக்கைகள் பற்றி, தனக்கு ஒன்றும் தெரியாது என்று சாட்சியளித்தார்.

நீதிமன்றம், வழக்கு முடிவில், 11.3.44 இல் புய்ஷெவுக்கு, மரண தண்டனை விதித்தது. புய்ஷெ, ஜெனரல் டிகோலிடம், கருணை மனுவை அனுப்பினார்.

ஜெனரல் ஜிரோ, அந்தக் கருணை மனுவுக்கு ஆதரவாக ஜெனரல் டிகோலிடம் பேசினார்.

டிகோல், அவரது வாழ்நாளில், முதல் முறையாக, ஒரு கருணை மனுவின் மீது முடிவெடுக்க வேண்டிய நிலையில் இருந்தார்.

(தொடரும்)

# நோயற்ற வாழ்வே...



- Dr. N. S. மூர்த்தி

## BPH-Benign Prostatic Hyperplasia

புறொஸ்டேட் என்பது ஆண்களின் அடிவயிற்றினுள்புறத்தில் அமைந்துள்ள ஓர் சுரப்பியாகும். இது வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான ஓர் சுரப்பாகக் கருதப்படுவதில்லை. ஆண்களில் விந்து சுரக்கும் பொழுது அதற்கு ஓர் திரவத்தன்மையை அளிப்பதே இதன் வேலையாக அமைகிறது. வயது செல்லச்செல்ல இது பெரிதாகி சில வேளை மூத்திரப்பையில் இருந்து வெளியேறும் சிறுநீர்ப் பாதையைத் தடை செய்யக் கூடியது!

40 வயதுக்குமேல் ஆண்களில் ஐம்பது வீதத்தினர் இச் சுரப்பி வீங்கி ஏற்படுத்தும் நோயினால் வாடுகின்றார்கள் என்பது கணிப்பீடு. 60 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் இது மேலும் அதிகரித்துக் காணப்படுகின்றது. எண்பத்தைந்து வயதைத் தாண்டியவர்களில் 90 வீதமான ஆண்கள் B.P.H எனும் இந்நோயினால் வருந்துகிறார்கள்.

### இதன் குறிகுணங்கள்

புறொஸ்டேட் சுரப்பி வீக்கமடைவதனால் மூத்திரப்பாதை தடைப்படுகின்றது, இதன் காரணமாக மூத்திரப்பையில் (Bladder) அழற்சி ஏற்படுகின்றது. மெது மெதுவாக ஆனால் அதேவேளை படிப்படியாக அதிகரிக்கும் இந்நிலை சுகமான வாழ்க்கை முறைக்குத் தடங்கலை ஏற்படுத்துகின்றது.

★ இரவில் சிறுநீர் கழிக்கவேண்டி ஏற்படுதல் குறிப்பாகப் படுக்கைக்குப் போன பின்னர்

★ மிக மெதுவாகவும் சிறிது சிறிதாகவும் சிறு நீர் கழிதல்

★ மூத்திரப்பையின் செயற்பாடு காரணமாக என்னவென்று விளக்கமுடியாது ஓர் தொந்தரவு உணர்வு ஏற்படுதல்.

★ முற்று முழுதாக சிறிநீர் வெளியேறாதது போன்ற உணர்வு.

★ கட்டுப்பாட்டை மீறி சிறிது சிறிதாக சிறுநீர் வெளியேறுதல்.

★ வெளியில் எங்காவது நீர் ஓடும் சத்தம் கேட்டதும் சிறுநீர் கழிக்கவேண்டும்போல் உணர்வு தோன்றல்.

★ உரிய இடத்துக்குச் சென்று சிறுநீர் கழிக்க ஆரம்பிக்கு முன்னரே சிறிதளவாவது ஒழுக்கு ஏற்படுதல்.

மேற்கூறிய நிலைகள் B.P.H ன் குறிகுணங்களாகக் காணப்படுவதுடன், காலப்போக்கில் நிலைமை அதிகரித்துக்கொண்டே போகும். முன்னர் போலன்றி அறுவைச்சிகிச்சை மட்டுமல்லாது பல நவீன மருந்துகளும் தற்போது வெளிவந்துள்ள காரணத்தினால்; மருந்துவர் ஆலோசனையை உடனடியாகப் பெற்று நிவர்த்தி செய்துகொள்வது நல்லது.

**வாசகர்களே!**

***உங்கள் மருத்துவ கேள்விகளுக்கு பதிலளிக்க Dr. என். எஸ். மூர்த்தி அவர்கள் ஆதரவு தந்துள்ளார். உங்கள் சந்தேகங்களை ஈழமுரசிற்கு எழுதி அனுப்புங்கள். பெயர் விபரங்கள் அவசியமில்லை.*** [ஆ.ர்]




# NÆRKØB TRAVELS Ltd
# MONEY & TRANSFER



* Colombo
* Madras
* Singepor
* Canada
* London

இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.

★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)

★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக) மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

★ NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark

★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42



| NÆRKØB பேருந்துசேவை | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark _London | 540 Kr | 890 Kr |
| Danmark _Paris | 540 Kr | 865 Kr |
| Danmark _Hombrg | 205 Kr | 327 Kr |

பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூர்ட்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.

## உடன் பணமாற்று சேவை

உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD

★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

Pub

# Olten மாநகரில்

# ஐ.பி.சி.-ரி.ரி.என்

## சுவிஸ் மெலேனியம்

### இணைந்து நடாத்தும்

# நட்சத்திர இரவு நிகழ்ச்சி

அன்று அதே மண்டபத்தில் **Basel SPT ரவிகடை** ஸ்தாபனமும் இணைந்து மாபெரும் மலிவு விற்பனையும் நடாத்த உள்ளது என்பதை மன மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன். அன்றையதினம் அனைத்து ஆடைகளும் அதிரடித்தள்ளுபடியில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் புதியதாக தருவிக்கப்பட்டுள்ள மொடேர்ண் கண்கவர் தங்க ஆபரணங்களும் தங்கள் எண்ணங்கள்போல் மலிவு விலையில் தெரிவு செய்யும் வாய்ப்பை தவறவிடாதீர்கள்.



**இதோ தங்கப் பவுண் விலை விபரம்**

1 பவுண் கல்லுநகை
128 schf மட்டுமே!

**காலம்: 25.08.2001 சனிக்கிழமை**

**நேரம்: காலை 11 மணி முதல்**
**இரவு 8.00 மணி வரை**

**இடம்:**

**STADT HALLE**
**KLEINHOLZ OLTEN**

ஒல்டன் பிரதான புகையிரத நிலையத்தில் இருந்து இலவச வாகன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மேலதிகத் தொடர்புகளுக்கு: S.P.T. RAVI Shop**
**Tel: & Fax: 061 272 09 90**
**Mobel: 079 356 22 78**

# பாசத்தின் வேரறுந்த ஓராண்டு நினைவினிலே

## செல்வி நுதர்சினி நடராசா

(கைதடி வடக்கு, கைதடி)

மண்ணுலகில்: 26.06.1977

விண்ணுலகில்: 04.09.2000



ஆண்டொன்று ஆனதம்மா நீ எமை விட்டுச் சென்று
நீ வாழ்ந்த எம் வீடோ வெறிச்சோடிக் கிடக்கிறது.
ஆதரவாய் எமக்கிருந்தாய் – ஆனால்
இன்றோ அநாதரவாய் நிற்கின்றோம்.
உன் இதயத்தை வண்ணங்களால் நிரப்பி
ஒரு வண்ண மயில் போல் பறந்து திரிந்த உன்னை
பாவியரின் செல் வீச்சில் பறிகொடுத்து நிற்கின்றோம்.
இயற்கையின் விளையாட்டில் நீ அமிழ்ந்து போனாலும்
என்றென்றும் எம்முடனே வாழ்கின்றாய்
உன் ஆத்மா சாந்திக்காய் நித்தமும் பிரார்த்திக்கின்றோம்.

– அண்ணன் தீபன்

தொலைபேசி: 01 43 52 09 38

Pub.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## செல்வி கௌசியா ஜெயநாதன்



எங்கள் அன்பின் சிகரமே கௌசி!
இரு கரம் கூப்பி, மலர்ச்சரம் தூவி
மண்டியிட்டு வேண்டுகிறோம்.
எங்கும் உன் முகம், எல்லாம் சூனியம்
எழுந்து வா அம்மா எங்கே உன் திருமுகம்?

கால நதியில் நாட்கள் கரைந்தும்
உன் நினைவுகள் கரையாதே
எம் உயிரினும் மேலாம் அன்புச் செல்வமே-
எமைவிட்டு
எப்படியம்மா நீ மீளாத்துயில் கொண்டாய்?

ஈடில்லா உன் பிரிவால் வாடி நின்றாலும்
உன் ஆத்ம சாந்திக்காய் வேண்டி நிற்கும்

உன் அப்பா, அம்மா, சகோதரன்

எங்கள் ஆறாத்துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: திரு.திருமதி ஜெயநாதன்
லெம்கோ, ஜேர்மனி

மலர்வு: 07.07.1992

உதிர்வு: 26.07.2001

Pub.


# தமிழீழ வரலாறு கண்ட
## வீரப் பரம்பரை

07

'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள் முளரி மருங்கின் முதியோளின் சிறுவன்' போர்க்களம் சென்று விழுப்புண் பெற்று வீழ்ந்தது புறநானூறுகண்ட வீரம் இன்று அவன்போன்ற சிறுவர்கள் பலரும் வீராவேசமும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் கொண்டு பிரபாகரன் பின்பு அணிவகுத்து நிற்கிறார்கள். சிறுவர்கள் மட்டுமோ? இளம் வீராங்கனைகள் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தம்மை இணைத்துக்கொண்டு வீராங்கனைகளாய் பவனி வருகின்றனர். இவர்கள் வெறும் கூலிப்பட்டாளங்கள் அல்லர். 'மானம் பெரிதென்று எண்ணி வாழ்வு சிறிதென்றெண்ணும்' மறத்தமிழ் வீராங்கனைகள் இவர்கள். உயிர் வாழ்க்கையின் தந்தக் கோபுரக் கனவுகளுக்கும் இவர்களுக்கும் வெகுதூரம். நம்முந்தையரது மண்ணை மீட்டிட இவ்வளவு தொகையான பெண்கள் களவேள்விக்குத் தம்மை ஆகுதியாக வழங்க முன்வந்தமைக்கு உலக வரலாற்றில் வேறு சான்றுகளே இல்லை என்று துணிந்து கூறலாம்.

இத்தனைக்கும் 1954.11.26 இல் பிறந்தவர் பிரபாகரன் வயதில் இளைய அவர் அனுபவ முதிர்ச்சி மிகுதியும் பெற்ற பெரும் வீரர், சாதனையாளர்.

தமிழ் மாணவர் பேரவை பலம் பொருந்திய இயக்கமாக வளர்ந்தது. இதில் தீவிரவாதக் குழுவாக தங்கத்



'சங்கிலி' முதல் 'பிரபாகரன்' வரை



துரை, சின்னஜோதி, பிரபாகரன் ஆகியோர் இயங்கினர், தொடக்க காலத்தில் கைக்குண்டுகள் செய்யவும் துப்பாக்கி சுடுவதற்கும் இவர்கள் பயிற்சி பெற்றனர். பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் தங்கத்துரை. எனவே அவருடன் பிரபாகரனுக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. இந்தத் தீவிரவாதக் குழுவில் இருந்தவர்களில் சுமார் இருபத்தைந்து பேருக்கு மேற்பட்டோர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

அரசாங்கத்திற்குத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அரச பஸ் ஒன்றை எரிப்பது என முடிவு செய்தார்கள். நான்குபேர் இதற்கான பொறுப்பை ஏற்றுச் சென்றார்கள். ஆனால், மற்ற மூவரும் நடுவிலேயே பயம் கொண்டு திரும்பி ஓடிவிட்டார்கள். 14 வயதுச் சிறுவனான பிரபாகரன் மட்டும் தைரியமாகச் சென்று அரச பஸ்ஸைக் கொளுத்திவிட்டுத் திரும்பி வந்தார்....[35]

மாவட்ட நில அதிகாரியாகவும் சமயப் பற்று நிறைந்தவராகவும் 'மிதித்த இடத்தில் புல் சாகாத பரமசாதுவாகவும் விளங்கிய ஒரு தந்தைக்கு மகனாகப் பிறந்த பிரபாகரன் தமிழ் ஈழ மீட்புக்கு அரசியற் போராட்டமோ, அகிம்சைப் போராட்டமோ உதவாது என்று தமது பிஞ்சு வயதிலேயே உணர்ந்துகொண்டு துணிவோடும், தன்னம்பிக்கையோடும் செயற்பட எடுத்துவைத்த முதல் அடி இது. அடி என்று சொல்வதும் தவறு. மறத்தமிழ் வீர பரம்பரையாகிய ஏணியின் முதற்படியிலே கால் பதித்தார் என்பதே பொருந்தும்.

பொருளாதார வசதி, சமூக அந்தஸ்து என்பன குறைவின்றி அமைந்த இளைஞன் ஒருவன், விரும்பியிருந்தால் தனது படிப்பைத் தொடர்ந்து காலனித்துவ ஆட்சியின் எச்சசொச்சமான உத்தியோகம் பெற்றுப் பகட்டாகவும் இன்பமாகவும் வாழ்ந்திருக்கலாம். தனக்கே தனக்கென்று வாழ விரும்பும் சுயநலமிகளுக்குத்தான் இந்த வாழ்க்கை பொருத்தமாக இருக்கலாம். பிரபாகரனுக்கு அல்ல, மகாபாரதத்தில் அவர் படித்த வீமன், கர்ணன் ஆகிய கதாபாத்திரங்கள், நெப்போலியன், சுபாஷ் சந்திரபோஸ் போன்ற மாவீரர்கள், இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் என்போரின் வாழ்க்கை வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் உள்வாங்கி ஜீரணித்த அவருக்குத் தாமே வரலாறு படைக்க வேண்டும் என்ற எண்ணமும், அவாவும், தன்னம்பிக்கையும் ஏற்பட்டதில் வியப்பில்லை. அன்பான பெற்றோர், பாசம் நிறைந்த உடன்பிறப்புக்கள், உற்றார், உறவினர் ஆகியோரை எல்லாம் கைவிட்டுத் தியாகம் செய்த அவர் வரலாறு மெய்சிலிர்க்க வைப்பதாகும்.

பிரபாகரன் தம் தோழரோடு இருந்த இடத்திற்குச் சென்று அவரை அழைத்து வந்த தந்தைக்கு அவர் கூறிய பதில், அவரின் தீர்க்கமான முடிவை நன்கு புலப்படுத்துகின்றது. 'குடும்பப் பொறுப்பை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். எனக்கு ஒரு பொறுப்புமில்லை. குடும்பத்திற்கோ நான் ஒருபோதும் பயன்பட மாட்டேன். என்னால் உங்களுக்கு எத்தகைய தொல்லையும் வேண்டாம். என்னை என்போக்கில் விட்டு விடுங்கள். இனி எதற்கும் என்னை எதிர்பார்க்காதீர்கள்' [36]

தனிமனிதனாக நின்று இலங்கை அரசாங்கத்திற்கு இடைவிடாத தலையிடியைக் கொடுத்துத் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக விளங்கினான் சிவகுமாரன். அவனது இலட்சியத்தை இதயத்தில் ஏற்றுக்கொண்ட பிரபாகரன் அதற்கு இயக்க வடிவம் கொடுத்து வளர்த்தெடுக்க அடிப்படையாய் அமைந்தவை அவரது தியாகம், சொல்லும் செயலும் ஒன்றாய் அமைந்த நேரிய போக்கு, சத்திய ஆவேசம், கொள்கையில் கொண்ட அழுங்குப்பிடி என்பனவே. இவற்றால் கவரப்பட்டு கிட்டு, பேபி, ரகு, இரவீந்திரன்[பண்டிதர்], செல்வநாயகம், அன்ரனி, சங்கர், குமரப்பா, புலேந்திரன், சந்தோஷம் முதலாக ஆற்றலும், இலட்சியப் பிடிப்பும், தியாகவெறியும் கொண்ட இளைஞர் கூட்டம் ஒன்று அணி திரண்டது. அது சிறிது சிறிதாக இன்னும் பல மாவீரர்களை இழுத்துத் தனக்கு ஆட்படுத்திக்கொண்டது.

எதிரிகளின் கைகளில் அகப்பட நேரும் சூழ்நிலைகளில் சைனைட் அருந்தி மரணத்தைத் தழுவுதல், கழுத்தில் விழுந்த மணமாலை கருக முன்னரே தம் இன்னுயிரை மரணதேவதைக்குப் பலியாக்கல், மரணத்தைத் தாமே எதிர்கொண்டு சென்று பகைவர் பாசறைகளைப் பூண்டோடு அழித்தல். சாகும் வரை நீர் கூட அருந்தாது உண்ணாவிரதம் இருத்தல், பசி பட்டினி, நோய் முதலிய இடையூறுகளையெல்லாம் மாளாத மனஉறுதியோடு தாங்கிக்கொண்டு வனவாசம் செய்தல், பெற்றோர், உடன்பிறப்புக்களின் பந்தபாசங்களைப் பற்றறத் துறத்தல், துரோகி தனது சொந்த இரத்த உரித்தினன் என்றாலும் அவனைக் கொன்றொழிக்கவும் தயங்காமை முதலாகத் தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் செய்தவையும் செய்து வருகின்றனவுமான மாபெரும் தியாகங்களின் வரலாற்றிலே, ஒளி சுடரும் தீபமாக விளங்கி வருகின்றார் பிரபாகரன்.

போரும் வீர மரணமும் மட்டும் குறித்த இலட்சியத்தை அடைவதற்குப் போதியவை அல்ல. இராச தந்திரமும் அரசியல் ரீதியான நிகழ்கால எதிர்காலத் திட்டங்களும் வேண்டியவையே என்பதிலும் பிரபாகரனுக்கு அழுத்தமான நம்பிக்கை உண்டு. தேசியவாதம் பேசியோர், பாரதநாட்டின் அனுசரணையோடு தற்காலிகமானதும், பெரும் பயனை நீடித்து நின்று விளைக்காததுமான உடன்படிக்கைக்கு அவாவியோர் எல்லோருமே தங்களுடைய வேஷங்களைக் களைந்து தம்மை வெளிப்படுத்தி மக்களுக்குக் காட்டி அரசியல் அரங்கிலிருந்து மறைந்துபோக வைத்த சாணக்கியம் மிகவும் பாராட்டத்தக்கதாகும். பேரினவாத அரசோடு சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தியும், ஒரு கட்டத்தில் யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்தும் அதன் முகமூடியைக் களைந்து எறிய வைத்து அதன் உள் நோக்கத்தை உலக அரங்கில் வெளிப்படுத்தியதும் சாமானியமான அரசியல் தந்திரம் அல்ல.

*அடிக்குறிப்புக்கள்:*

*35. புலிகள் இயக்கம் பிறந்தது– பிரபாகரன் பக். 14 பழ. நெடுமாறன்*

*36. இளமைப் பருவம் – நூல் பக்.3*

- க. சொக்கலிங்கம் (சொக்கன்)

[தொடரும்]

*மேற்கு வங்க மாநிலம் கோல்கத்தாவில் நாக பஞ்சமி எனும் பெருவிழா நடைபெற்றுவருகிறது. இதில் கோல்கத்தாவின் காடியாடோலா எனும் பகுதியில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்திலேயே இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. விழாவை காண்பதற்கு வருடம் தோறும் சுமார் 50,000 பக்தர்கள் வரை வருகின்றனர். இவ்விழாவில் விசேடம் என்ன வென்றால், தங்கள் நேர்த்திகளை நிறைவு செய்ய பாம்பின் விஷத்தை குடிக்கின்றனர். பாம்பை வாயில் வைத்து பக்தி செலுத்துகின்றனர். பாம்பின் விஷத்தை ஒருவர் குடிப்பதையும், பாம்பின் தலையை தனது வாயினுள் வைத்திருக்கும் ஒருவரையும் இங்கு காண்கின்றீர்கள்.*





# பலதும் பத்தும்

'ரெனிஸ்' விளையாட்டுக்களை நீங்கள் பார்த்து இரசித்திருப்பீர்கள். இதுவும் ரெனிஸ் விளையாட்டுத்தான். அங்கவீனர்கள் பங்குபற்றுவதற்கென புதிதாக போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உலகின் பிரபல்யமான போட்டிகளிலும் இவை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளன. போட்டி ஒன்றில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தபடி விளையாடிக் கொண்டிருக்கும் ஒருவரையே படத்தில் காண்கிறீர்கள்.



DURON 800 Mhz
CARTE MERE MATSONIC
SD RAM 128 Mo PC 133
DISK DUR 20 Go
CD ROM 52X
FLOPPY 1.44 Mo
CARTE VIDEO 16 Mo Intégré
CARTE SON AC3 Intégré
MODEM 56 Kbps AMR
BOITER MOYEN TOUR ATX
CLAVIER PS/2
SOURIS PS/2
HP 240 W
ECRAN 15 `` IMPRIMANTE CANON BJC 2100SCANNER ARTEC USB 36BITS
Garantie 2 ans
Prix 4900 FTTC
LUNE INFORMATIQUE
26 RUE PERDONNET, 75010 PARIS
TEL 0153267670 / FAX 0153260874
LUNE INFORMATIQUE@IFRANCE.COM

# உலகில் இவ்வாரம்

## ஒகஸ்ட் 19 முதல் 25 வரை

**19**

1646: இலண்டனில் கிரீன்விச் வானிலை ஆராய்ச்சி நிலையத்தை அமைத்த ஜான் பிளேம் ஸ்டீட் பிறந்தார்.

1743: பிரான்ஸ் மன்னர் 15—வது லூயிசின் காதலி கம்டேசி பாரி பிறந்த நாள். பிரான்ஸ் புரட்சியின் போது கைதுசெய்யப்பட்ட இந்தப்பெண் 1793ம் ஆண்டு டிசம்பர் 7ம் திகதி தூக்கில் இடப்பட்டார்.

1772: மூன்றாவது ருஸ்டாவ் சுவீடன் அரசு கட்டுப்பாட்டை கைப்பற்றினார். 1720 முதல் பாராளுமன்ற ஆட்சி முறையில் இருந்த சுவீடன் மன்னர் ஆட்சி முறைக்கு வந்தது.

1839: போட்டோ எடுக்கும் முறையை முதலில் கண்டுபிடித்தது லூயிஸ்டாகரே அதை முதலாவதாக பாரீசில் வெளியிட்டார்.

1871: விமானத்தை கண்டுபிடித்த அமெரிக்க விஞ்ஞானி ஓர்வில் ரைட் பிறந்த நாள். 1903ம் ஆண்டு டிசம்பர் மாதம் இவர் தன் சகோதரர் வில்பர் ரைட்டுடன் சேர்ந்து தயாரித்த முதல் விமானத்தை வெற்றிகரமாக பறக்கவிட்டார்.

1934: ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் அதிபராக தேர்ந்து எடுக்கப்பட்டார்.

1940: இரண்டாவது உலக யுத்தத்தில் சோமாலிலாந்தில் இருந்து இங்கிலாந்து படையை இத்தாலி விரட்டியது.

1953: ஈரான் நாட்டு பிரதமர் முகமது முசாதிக் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. ஜெனரல் ஐஹேடி பிரதமரானார். இத்தாலிக்கு சென்று வாழ்ந்து கொண்டிருந்த மன்னர் ஷா நாடு திரும்பினார்.

1960: ரஷிய நிபுணர்கள் ஸ்புட்னிக்—5 என்ற 'ராக்கெட்டை' பெல்கா, ஸ்டிரெல்கா ஆகிய இரு நாய்களுடன் வானவெளிக்கு அனுப்பி பூமியை சுற்றி பறக்க விட்டார்கள்.

**21**

1911: லியோனார்டோடர்விசியின் புகழ் பெற்ற ஓவியமான மோனலிசா ஓவியம் பாரீஸ் நகரில் இருந்து திருட்டுப் போய்விட்டது. இத்தாலிய நாட்டு விடுதி ஊழியர் வின்சென்சோ பெருக்கியா அதைத் திருடிவிட்டார். 2 ஆண்டுகளுக்குப் பிறகு அது கைப்பற்றப்பட்டது.

1944: அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷியா, சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் வாஷிங்டனில் கூடி, ஐக்கிய நாடுகள்சபை அமைப்பது பற்றி திட்டமிட்டனர்.

1959: அமெரிக்காவின் 50—வது மாநிலமாக ஹவாய் தீவு இணைந்தது.

1983: பிலிப்பைன்ஸ் நாட்டு எதிர்க்கட்சித் தலைவரான பெனிக்னோ ஆக்கினோ அமெரிக்காவில் இருந்து விமானத்தில் வந்து இறங்கியதும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1988: இந்தியாவில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் 1000 பேர் கொல்லப்பட்டனர்.

1991: ரஷியாவில் இருந்து லட்வியா சுதந்திரம் அடைந்தது.

1991: ரஷிய அதிபர் கோர்பசேவ்வுக்கு எதிரான 60 மணி நேர கம்யூனிஸ்டு தீவிரவாதிகளின் புரட்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து முழுக்கட்டுப்பாட்டுக்குள் ரஷியாவை கொண்டு வந்ததாக கோர்பசேவ் பிரகடனம் செய்தார்.

**22**

1138: சிவ்டவுன்மூர் போரில் ஸ்கொட்லாந்து படைகளை இங்கிலாந்து படை தோற்கடித்தது.

1642: இங்கிலாந்தில் மன்னர் ஆதரவாளர்களுக்கும், பாராளுமன்ற ஆதரவாளர்களுக்கும் இடையே உள்நாட்டு போர் தொடங்கியது.

1788: ஆபிரிக்காவில் உள்ள சியாரா லியோனில் இங்கிலாந்து காலனி ஆட்சி அமைத்தது. அடிமைத் தலையில் இருந்து விடுவிக்கப்பட்ட நீக்ரோக்களை குடி அமர்த்துவதற்காக காலனி அமைப்பதாக அப்போது இங்கிலாந்து கூறியது.

1864: போரில் காயம் அடைந்தவர்களை பாதுகாப்பதற்கான ஜெனிவா ஒப்பந்தம் கையெழுத்தானது. செஞ்சிலுவைச் சங்கம் தொடங்கப்படுவதற்கு இதுதான் முன்னோடி.

1910: கொரியாவை, ஜப்பான் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

1914: பெல்ஜியம் மீது ஆஸ்திரியாவும், ஹங்கேரியும் போர் தொடுத்தன.

1941: ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜி படைகள் ரஷியாவில் உள்ள லெனின் கிராடு நகரை நெருங்கின. செப்டம்பர் 8ம் திகதி லெனின் கிராடை முற்றுகையிட்டன. 1944ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இந்த முற்றுகை நீடித்தது.

1968: போப் ஆறாம் பால், கொலம்பியாவிற்கு விஜயம் செய்தார். லத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றுக்கு போப் பயணம் செய்வது இதுவே முதல் முறை.

1994: குவைத்திற்கும், ஈராக்கிற்கும் நடந்த போரினைத் தொடர்ந்து, தனது நாட்டிற்குள் புகுந்த அகதிகளைத் தடுக்கும் பொருட்டு ஜோர்டான் தனது எல்லையை அடைத்தது.

**24**

79: இத்தாலியில் உள்ள வெசுவியஸ் எரிமலை வெடித்துச் சிதறியதில், பாம்பே, ஹெர்குலேனியம் மற்றும் ஸ்டா' நகரங்கள் முழுவதுமாக அழிந்து ஆயிரக்கணக்கானோர் மடிந்தனர்.

1572: பிரான்ஸ் நாட்டில் நடந்த, புனித பர்த்தலோமியோ தின படுகொலையில், ஹீகேனாட் சமூகத்தைச் சேர்ந்த 70,000 பேர் கொல்லப்பட்டனர்.

1814: அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் பிரிட்டிஷ் படைகளால் கைப்பற்றப்பட்டு அதன் முக்கிய கட்டடங்களுக்குத் தீவைக்கப்பட்டது. ஜனாதிபதி ஜேம்ஸ் மாடிஸன் தலைமறைவானார்.

1921: சகார்யா நதிக்கரையில், கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்கும் நடந்த 3 வாரப்போரின் இறுதியில், துருக்கியர்கள் வெற்றிபெற்றனர்.

1954: பிரேசில் நாட்டின் அதிபராக 1930 முதல் 45 வரையிலும் பின்னர் 1951 முதல் 54 வரையிலும் பதவிவகித்த ஜெடூலியோ வர்காஸ் தற்கொலை புரிந்துகொண்டார்.

1968: ஆஸ்திரேலியாவிற்கும், தென்னமெரிக்காவிற்கும் இடையே உள்ள பகடவ்ஃபா அடோல் என்ற இடத்தில் 'ஹைட்ரஜன்' குண்டை வெடித்துப் பரிசோதனை செய்து, பிரான்ஸ் 5வது அணுசக்தி நாடாக ஆனது.

1995: 'லைஃப்' பத்திரிகையின் புகைப்பட நிபுணர் ஆல்பிரெட் ஈசன்டாட் மரணமடைந்தார். இரண்டாம் உலகப்போரை முடிவிற்குக்கொண்டு வந்த ஜப்பானின் சரணடைந்த செய்தி வெளியானதையடுத்து அமெரிக்காவில் மக்களிடையே ஏற்பட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக அமைந்த; பொது இடமான டைம்ஸ் சதுக்கத்தில் ஒரு கப்பல்படை வீரரும், நர்சும் முத்தமிட்டுக்கொள்ளும் படத்தை எடுத்து, உலகம்முழுவதும் பெரும் புகழ் பெற்றார் அவர்.

**25**

1718: அமெரிக்காவில் லூசியானாவில் உள்ள 'நியூ ஒர்லியன்ஸ்' நகரம் உருவாக்கப்பட்டது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆர்லியன்ஸ் பிரபு நினைவாக அவர் பெயர் இந்த நகரத்துக்கு சூட்டப்பட்டது.

1819: நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்த ஸ்கொட்லாந்து நிபுணர் ஜேம்ஸ் வாட் மரணம் அடைந்தார்.

1822: யுரானஸ் கிரகத்தை கண்டுபிடித்த இங்கிலாந்து வானவெளி ஆராய்ச்சியாளர் வில்லியம் ஹெர்ச் சல் மரணம் அடைந்தார்.

1825: ஸ்பெயினில் இருந்து உருகுவே நாடு [தென் அமெரிக்கா] பிரிந்தது.

1841: சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி எமில்தியோடர் கோச்சர் பிறந்த நாள். தைராய்டு சுரப்பி சம்பந்தமான ஆராய்ச்சிக்காக 1909ம் ஆண்டு இவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.

1867: இங்கிலாந்தைச் சேர்ந்த ரசாயன நிபுணர் மைக்கல் பாரடே மரணம் அடைந்தார். மின்சார சாதனங்களை உருவாக்குவதில் இவர் முன்னோடியாக இருந்தார்.

1875: ஆங்கிலக்கால்வாயை கப்டன் மாத்யூ வெப்ஸ் முதலாவதாக நீந்திக்கடந்தார்.

1883: ஹியூவில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அன்னாட், டோங்கின் பகுதிகள் பிரான்ஸ் பாதுகாப்பின் கீழ் வந்தன. இந்தப் பகுதிதான் இப்போது வியட்னாம் என்று அழைக்கப்படுகிறது.

1912: பழைய கிழக்கு ஜெர்மன் தலைவர் எரிக்ஹோனேக்கர் பிறந்த நாள். இவர் காலத்தில்தான் 1962ம் ஆண்டு பெர்லின் சுவர் கட்டப்பட்டது.

1940: லிதுவேனியா, லாட்வியா, எஸ்தோனியா ஆகிய நாடுகள் ரஷியாவுடன் இணைந்தன.

1940: இரண்டாவது உலக யுத்தத்தில் இங்கிலாந்து விமானங்கள் முதல் தடவையாக பெர்லின் நகர் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தின.

1943: இரண்டாவது உலக யுத்தத்தின்போது மவுண்ட்பேட்டன் பிரவு நேச நாடுகளின் தென்கிழக்கு ஆசிய தலைமை தளபதியாக நியமிக்கப்பட்டார்.

1944: ஜெர்மன் பிடியில் இருந்து பாரிஸ் நகரம் விடுவிக்கப்பட்டது. ஜெர்மன் தளபதி சோலிட்ஸ் நேச நாட்டு படைகளிடம் சரண் அடைந்தார்.

1989: அமெரிக்கா அனுப்பிய வாயஜர்—2 என்ற 'ராக்கெட்' 12 ஆண்டு பயணத்துக்குப்பிறகு நெப்ட்யூன் கிரகத்துக்கு மேல் பறந்தது அங்கிருந்து வறண்ட ஏரிகள், நிலப்பிரிவுகள் ஆகியவற்றை படம் எடுத்து பூமிக்கு அனுப்பியது.

1991: ரஷியாவில் இருந்து பிரிவதாக பைலோ அறிவித்தது.

## சமாதானம்...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

போது தமிழ் மக்களும் அதே போல நாங்களும் பெரும் மகிழ்ச்சியடைந்தோம். இந்த மகிழ்ச்சியான செய்தி வேண்டுமானால் புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பப்பட்டிருக்கக் கூடும். ஆனால் அந்தத் தாக்குதலை நாங்கள் செய்ததாக உரிமை கோரியிருக்காது. இந்தத் தாக்குதலுக்கு நாங்கள் உரிமை கோரவில்லை. உரிமை கோருவதாக இருந்தால், எமது தலைமையலுவலகத்தில் இருந்து அதற்கான அறிக்கை வெளியிடப்பட்டிருக்கும். வழமைபோலவே இந்தத் தாக்குதலுக்கும் விடுதலைப் புலிகள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதுடன், அதன் மீதே பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து எம்மால் எதனையும் கூறமுடியாது. சிறீலங்காவின் சர்வதேச விமான நிலையமானது, விமானப்படைத் தளத்தின் ஒரு பகுதியாக இயங்கி வந்துள்ளது. இதன் மீது ஏன் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால், விமானப் படையின் வலிமையை அழிப்பதற்கும் நாட்டின் பொருளாதாரத்தை முடக்குவதற்குமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம்.

ஒருதலைப்பட்சமாக நாங்கள் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தபோது இவ்வாறான தாக்குதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. ஆனாலும், அதற்கு முந்திய சில தாக்குதல் நடவடிக்கைகளுக்கு நாங்கள் உரிமை கோரியிருக்கின்றோம். நாங்கள் உறுதியளித்திருந்ததன்படி, 'ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தின்போது, தாக்குதல்கள் எதனையும் நடத்த மாட்டோம்' என்று உறுதியளித்திருந்ததை நாங்கள் கடைப்பிடித்தே வந்திருக்கின்றோம். சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து வாழ்வதென்பதில் எதுவிதமான பிரச்சினையும் இல்லை. சிங்கள மக்களைப் போலவே, தமிழ் மக்களும் தமக்கென தனியான கலாசாரம், இறைமை, உரிமைகள், மொழி, பிரதேசம் என்பவற்றைக் கொண்டிருக்கின்றார்கள். நிரந்தரமான தீர்வென்பது ஒவ்வோரினமும், தமக்குரிய பிரதேச மண்ணில் சுதந்திரமாக வாழ வேண்டும். அவர்கள் தனித்துவமாக, தமது உரிமைகளுடன் மகிழ்ச்சியாகவும் சமாதானத்துடனும் வாழ வேண்டும். இவ்வாறான ஒரு நிலைமையையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இவ்வாறான நிலைமை வருமானால், அது குறித்து நாங்கள் பரிசீலிக்கவும் தயாராக இருக்கின்றோம் எனவும் இப் பேட்டியின்போது சுப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

AArthi Euro Vision
அனைத்து தமிழ் நாடகங்கள்
(Sun, Raj, Vijay, Jaya, Sun news, Bharathi, other new Channel)
தமிழ் திரைப்படம்
Audio Cd, Video CD, DVD
தொடர்புகளுக்கு: Tel.Fax+49 228 663715
Handy: +49 01738910309
E.Mail: Arthiraj @ Aol.Com

உங்கள் ஜாதக குறிப்புக்கள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்
கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம்.
உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம், பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது.
பிறந்த நேரம் தெரியாதவர்களுக்கு நியூமராலஜி மூலம் எதிர்காலப் பலன்கள் கணித்துத் தரப்படும்.
உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புக்கள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கெள்ள வேண்டிய முகவரி
Pega Star -Co Verleger
Mr. A. Thevaraj
Böblinger str. 87
D-70199 Stuttgart/ Germany
Tel: 0049 + 711 - 6157028
Fax: 0049 + 711-6157030
E-Mail: theva@t-online.de
ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால் செலவு உட்பட தொகை 56 DM, 50 Swiss FR, 40 Ca $ மட்டுமே!
படிவத்தை நிரப்பி அனுப்பவும்
Fullname: ..........
Date of Birth: .......... Time of Birth: ..........
Place of Birth: ..........
Address: ..........
..........
City/ Date: .......... Signature
Name: A. Thevaraj
Bank: Deutsche Bank Stuttgart
Konto Nr: 962056800 BLZ 60070024
Name: Antonippillai Thevaraj
Pub.Gr

# புத்திசிகாமணி பதில்கள்

★ தலித்... தலித்.... என்கிறார்களே அதென்னையா தலித்? ஒன்றுமாய் புரியவில்லையே?

*இ.மகேஸ்வரன்- பலர்மோ, இத்தாலி.*

❣ உமக்கு மட்டுமல்ல பேரிலக்கியவாதிகள், படைப்பாளிகள் என்றெல்லாம் கூறிக்கொள்கின்ற பலருக்கும் இச்சொல் பற்றிய குழப்பம் இருக்கவே செய்கின்றது. இப்போதைக்கு நான் அறிந்தவரையிலும் நீர் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் சொல்வதானால், எத்தகைய வழியிலாயினும் எவராலாயினும் அடக்கி ஒடுக்கப்படுகின்ற ஒருமனிதனின் அல்லது சமூகத்தின் உள்ளார்ந்த எதிர்ப்புணர்வாய் தகித்தெழும் குரலையே தலித் எனலாம். ஆனால், புலம்பெயர் சூழலில் எம்மவர் சிலர் 'தலித்' என்ற பதாகையின் கீழ் குளிர் காயவும், முகம் தேடவும் முனைவது நகைப்புக்கும் வேதனைக்குமுரியது.

★ அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக அரசு வெளியிட்டிருந்த செய்தியின் உள்நோக்கம் என்ன?

*க. ராஜன்–ஒஸ்லோ, நோர்வே.*

## தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்துவதற்காக தடைசெய்யப்பட்ட கொடிய இரசாயன ஆயுதங்களை அரசு கொள்வனவு செய்திருப்பது பற்றி...?

❣ மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தத்துடனேயே அரசுடன் எந்தவொரு பேச்சுவார்த்தைக்கும் புலிகள் தயாராய் இருக்கின்ற நிலையில், புலிகளுடன் நேரடிப் பேச்சு முயற்சிகளிலும் தாம் ஈடுபட்டிருப்பது போன்ற ஒரு பிரமையை, மாயத்தோற்றத்தை வெளிப்படுத்தும் அரசின் சூழ்ச்சிகர முயற்சியாகவே இதனைக் கொள்ள முடியும். நோர்வே தூதுவர் சொல்ஹெய்ம் அவர்களுடனான சமாதான பேச்சு முயற்சிகளுக்குப் பின் அரசுடன் எந்தவொரு பேச்சுக்களிலும் தாம் ஈடுபடவில்லை என்பதை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மிகவும் திட்டவட்டமாகவே மறுத்துரைத்துள்ளார்.

★ தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்துவதற்காக தடைசெய்யப்பட்ட கொடிய இரசாயன ஆயுதங்களை அரசு கொள்வனவு செய்திருப்பது பற்றி...?

*க. ரேவதி– டொட்முன்ட், ஜேர்மனி.*

❣ விடுதலைப் புலிகளை போர்முனையில் எதிர்கொள்ள முடியாத சிறீலங்காவின் படையினரும், அரசும் தமிழ் மக்களை பூண்டோடு அழித்தொழிக்கும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளது. அரசின் இந்த விஷப்பரீட்சை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என புலிகள் எச்சரித்துள்ளனர். சர்வதேச சட்டவிதிகளுக்கு முரணான சிங்கள அரசின் கொடும் செயலை சர்வதேச சமூகம் கண்மூடிப் பார்த்துக்கொண்டிருக்கப்போகிறதா என்பதே தற்போதுள்ள கேள்வி.

★ பிரான்சில் எம்மவர்கள் ஒன்று கூடும் பல நிகழ்ச்சிகளிலும் பிரெஞ்சு நாட்டவர்களும் ஓரளவு வருகின்றார்கள். ஆனாலும் எம்மவர்கள் அவர்களை அணுகுவதற்கும், தாயகத்தில் நடக்கும் போராட்டம் பற்றி அவர்களுக்கு தெளிவுபடுத்தவும் தயங்குகிறார்களே?

*இ.திலீபன்– பாரிஸ், பிரான்ஸ்.*

❣ உண்மைதான். மொழி ஒருதடையாக இருந்தாலும்கூட இயல்பாகவே மற்ற நாட்டவர்களுடன் எம்மவர்கள் ஒன்றுகூடிப் பழகவோ, பேசவோ தயக்கம் காட்டவே செய்கிறார்கள். இந்த இடைவெளி நீங்கவேண்டும். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டு மக்களுடன் நெருங்கிப் பழக வேண்டியதும் எமது முகத்தை அவர்களுக்கு இனங்காட்டவேண்டியதும் அவசியம். எமது அடிப்படை உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் இனம் நாங்கள் என்பதை சர்வதேச சமூகத்திற்கு நாம் வெளிவுபடுத்தவேண்டும்.

★ புத்திசிகாமணி அவர்களே! தமிழக முதல்வர் ஜெயலலிதா, இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இருவரையும் ஒப்பிடுங்கள்?

*சீ. சிவகுரு–Kortrijk, Belgiem*

❣ இருவருமே பதவிவெறி பிடித்த அதிகார மமதை கொண்டவர்கள். முன்னவர் கீழ்த்தர அரசியல்வாதி, பின்னவர் பேரினவாதி!

★ மீண்டுமொரு மிக் ரக விமானம் சீதுவைப் பகுதியில் விழுந்து நொருங்கியுள்ளதே. இதையும் புலிகள்தான் சுட்டு வீழ்த்திியிருப்பார்களா?

*த.தங்கா– லியோன், பிரான்ஸ்.*

❣ புலிகள் சுட்டு வீழ்த்தியதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆனால் கட்டுநாயக்கா விமானத்தளப் பெரும் தாக்குதலில் காயப்பட்ட விமானங்களில் ஒன்றாக அது இருக்கலாம்.

★ சமாதானப் பேச்சுக்களுக்கு தாங்கள் எப்போதும் தயாராகவே இருப்பதாக மீண்டும் புலிகள் அறிவித்துள்ளனரே?

*இ. அன்பழகன்–ஒபகௌசன், ஜேர்மனி.*

❣ அவர்கள் எதற்கும், எப்போதும் தயார்தான். ஈழத் தமிழ் மக்களின் நிம்மதியான சுதந்திரமான வாழ்வுதான் விடுதலைப்புலிகளுக்குத் தேவை.

★ அண்மையில் நடந்த மடுத் திருவிழாவில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் மத்தியில், சென்ற தமிழீழ வீதி நாடகக் கலைஞர்கள், தமது கலை வெளிப்பாட்டின் மூலம் தமிழர்களின் போராட்ட நியாயப்பாடுகளை அவர்களுக்கு விளங்கப்படுத்தியுள்ளார்களாமே?

*க. கதிர்காமநாதன்– பலெர்மோ, இத்தாலி.*

❣ ஆரோக்கியமான மகிழ்ச்சியளிக்கக்கூடிய விடயம் இது. எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. சிங்கள பேரினவாத சக்திகளுக்கும் அரசுக்கும் எதிரானது என்பதில் விடுதலைப்புலிகள் எப்போதும் தெளிவாகவே இருக்கிறார்கள். எமது போராட்டத்தின் நியாயப்பாட்டை பெரும்பான்மையான சிங்கள சமூகம் புரிந்துணர்ந்து கொள்ளுமானால் எமது போராட்டம் இலகுவானதாகிவிடும். தமிழர் பிரச்சினையை நியாயபூர்வமாக சிங்கள மக்களிடம் எடுத்துச்செல்ல எந்தவொரு தென்பகுதி அரசியல் சக்திகளோ அமைப்புகளோ தயாராய் இல்லாதது எமது துரதிஸ்டமே. இந்தவகையில் கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது போராட்ட நியாயத்தை சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்திய தமிழீழ கலைஞர்களின் பணி பாராட்டுதலுக்குரியது. ஆனால் தம் மக்களுக்கு இனவாத விஷத்தை ஊட்டி தங்களை வளர்க்கிறார்கள் பேரினவாத சக்திகள்.

★ அண்மையில் நீங்கள் பார்த்து மகிழ்ந்த திரைப்படம் எது?

*சி. செந்தூரன்– ஈஸ்ரரம், லண்டன்.*

❣ பார்த்து நெகிழ்ந்த படம் 'குட்டி'! தமிழகத்திலிருந்து தொடர்ந்துவரும் திரைக்குப்பைகளில் அவ்வப்போது சில குண்டு மணிகளும் வெளிப்படுவதுண்டு. அந்த வகையில் அண்மையில் வெளிவந்திருக்கும் 'குட்டி' குழந்தைத் தொழிலாளர்களின் அவலத்தை வெளிப்படுத்தி, அந்தப் பிஞ்சுகளின் மனவெளியையும் கலைத்துவத்துடன் படம் பிடித்துள்ளது.

**உங்கள் கேள்விகளை,**
புத்திசிகாமணி பதில்கள்
**CHEZ EELAMURASU**
**22, Rue Perdonnet, 75010 Paris, France.**
அல்லது **E.Mail-eelamurasu@noos.fr**
**எனும் முகவரிக்கு அனுப்பவும்.**

LE PRESTATAIRE AU SERVICE DE L'EXPO
EXPOLY

EX POLY Nettoyage Industries

ஆண்களுக்கான பகுதி/ முழு நேர வேலைக்கு ஆட்கள் தேவை

பிரான்சின் வதிவிட அனுமதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். 23.08.2001 முதல் பெயர்கள் பதிவு செய்யப்படும். பதிவு செய்ய வரும் பொழுது

* வேலை செய்வதற்கான அனுமதி பத்திரம்
* Sécurité Sociale No
* தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் என்பவற்றை எடுத்து வரவும்

எமது நிறுவன தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு தந்த மேலதிகாரிகளுக்கும், முகாமையாளர்களுக்கும் சக தொழிலாள நண்பர்களுக்கும் Ex-Poly நிர்வாகம் தனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் புதிதாக இணையவிருக்கும் தொழிலாளர்களின் வரவை எதிர்பார்க்கின்றது

229, Av.Jean Jaures, 93300 Aubervilliers, France.
Tel: 0148391530 / 0603556176

அலுவலக நேரம்
9.30 – 12.00
15.00 – 19.00

## இத்தாலியில்
# பொங்கு தமிழ் எழுச்சி விழா

தமிழர்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் ஆகியவற்றை வலியுறுத்தி தமிழர்கள் வாழும் நாடெங்கிலும் நடைபெற்று வரும் பொங்கு தமிழ் எழுச்சி விழா நிகழ்வுகள் கடந்த 22.07.01 ஞாயிற்றுக்கிழமை இத்தாலியில் பலெர்மோ மாநகரில் வெகு சிறப்பாக எழுச்சியுடன் நடைபெற்றது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் குண்டுகளால் அழிக்கப்பட்டு இன்றும் கலாச்சார கலை அம்சங்களை வெளிப்படுத்திக்





கொண்டிருக்கும் Spasimo அரங்கில் மாலை 6.30 மணிக்கு உயிரினும் மேலான தாயகத்தின் மலர்விற்காக தமது இனிய இளைய உயிர்களை அர்ப்பணி-த்த மாவீரர்களுக்காகவும் இனவாத அழிப்பில் சிக்கி உயிரிழந்த மக்களுக்காவும் அகவணக்கம் செலுத்தி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

முதலில் மாவீரர் நினைவு ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. ஈகைச் சுடரை 1998 இல் யாழ். நகரில் இன ஆக்கிரமிப்பு கும்பலோடு ஏற்பட்ட மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை எழிலன் என அழைக்கப்படும் நவரட்ணம் மகேஸ்வரன் அவர்களின் சகோதரர் நவரட்ணம் சுகிதரன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் வரவேற்று செல்வி மயூரா ஜேசுதாசன் அவர்கள் வரவேற்புரையை வழங்கினார். கறுப்பு யூலையின் 18ம் ஆண்டின் கனத்த நினைவுகளும் நினைவு கூரப்பட்டது.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. 'வணக்கம், வணக்கம், வணக்கம்' என்று வருகைதந்திருந்த அனைவரையும் வரவேற்று வணக்க நடனத்தை மாலதி கலைப்பள்ளி மாணவிகள் செல்விகள் றிச்செட் மேரி உசாந்தினி, குமாரசாமி சுரேக்கா இருவரும் இணைந்து நடன வடிவமைத்துத் தந்திருந்தார்கள்.

நடராஜா மாலினி அவர்களின் நடன வடிவமைப்பில் கத்தானியா தமிழ்ச்சங்க மாணவிகளின் ஆடிப்பாடுவோம் கூடிப் பாடுவோம் என்ற பாடலிற்கான நடனமும், லேச்சே திலீபன் கல்வி நிலைய ஆசிரியர்களின் நடன வடிவமைப்பில் திலீபன் கல்வி நிலைய மாணவர்களின் 'நெஞ்சு பொறுக்கலையே தேசம் விடியலையே...' என்ற பாடலிற்குரிய கும்மி நடனத்துடன் செல்வி ஜெசீமா செபமாலை அவர்களின் நடன வடிவமைப்பில் மாலதி கலைப்பள்ளி மாணவிகளின் 'நூற்றாண்டு நூற்றாண்டம்மா..' என்ற பாடலிற்குரிய நடனமும் இந் நிகழ்வில் இடம்பெற்றது.

தொடர்ந்து உரைவேளையில், கத்தானியா தமிழ்ச்சங்கத் தலைவர் திருஇருதயதாசன் அவர்களும் வத்திக்கான் வானொலி தமிழ்ப் பணிப்பொறுப்பாளர் அருட்தந்தை திரு. ஆரோக்கியநாதன் அவர்களும் உரையாற்றினார்கள்.

புலம்பெயர் மண்ணில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினை தடைசெய்யும் நோக்குடன் இத்தாலியிலும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுச் செயற்பாட்டாளர்கள் மீதும் தொடரப்பட்ட வழக்கில் தொடர்ந்து



வாதாடி தமிழ் மக்களின் பக்கம் நீதியை நிலைநாட்டித் தந்த இத்தாலிய வழக்கறிஞர் திரு. வின்சன்சோ ஜெர்வாசி (Vincenzo Gervasi) அவர்களும் உரையாற்றினார்.

அடுத்து பொங்கு தமிழ் எழுச்சி உரையை நிதிப்பொறுப்பாளர் திரு. யூனிஸ் அன்ரிப்புறோ அவர்கள் நிகழ்த்தி பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடனத்தை வெளியிட்டுக் குரல்கொடுக்க எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து தமிழீழ மக்களும் உரக்கக் குரல் கொடுத்து உரிமைக் குரலை வெளிப்படுத்தினார்கள்.

தொடர்ந்து இத்தாலியப் பணியக பிரதிநிதி அவர்கள் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்ச்சியுடன் தமிழ்மக்கள் தங்கள் முழுமையான பங்களிப்பினையும் தொடர்ந்தும் வழங்கி விடுதலைப் பயணத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அத்துடன் சர்வதேசத்தின் பார்வையை தமிழீழ மக்கள் மீது திருப்ப நடைபெறும் அனைத்து விடுதலை நிகழ்வுகளிலும் தொடர்ந்தும் குரல்கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக எழுச்சிமிக்க பொங்குதமிழ் விழாவில் தமிழிசைப்பாணர் திரு. புஸ்பவனம் குப்புசாமி குழுவினரின் புரட்சிப் புயலிசை கானங்கள் இடம் பெற்றது. பாடல் நிகழ்வின் இடையே லேச்சே மாநகரில் இருந்து வருகை தந்த இசையமைப்பாளரும், பாடகரும் ஆகிய இத்தாலியரான திரு. மர்செல்லோ பிறினாறியோ (Marcello Prinario) அவர்கள் புஸ்பவனம் குப்புசாமி அவர்கள் பாடிய 'அதோ தெரிகிறது தமிழீழம்..' என்ற பாடலை தமிழில் பாடி தமிழ் மக்களின் பலத்த கரகோசத்தைப் பெற்றார். 1983 யூலை கலவரத்தில் தனது தமிழ் நண்பனை இழந்து விட்டதைப்போன்ற கற்பனையில் ஒரு பாடலை இசையமைத்துப் பாடினார்.





இவ் எழுச்சி விழாவிற்கு பலெர்மோ வாழ் தமிழ் மக்களுடன், கத்தானியா மற்றும் இத்தாலியின் மேற் பிரதேசங்களான லேச்சே, பொலோனியா, நாப்போலி ஆகிய நகரங்களில் இருந்தும் மக்கள் வருகை தந்தனர் இவர்களுடன் இருநூறுக்கும் மேற்பட்ட இத்தாலிய மக்களும் கலந்துகொண்டனர். இவர்களுள் அரச சார்பற்ற பிரமுகர்கள், வழக்கறிஞர்கள் பத்திரிகையாளர்களும் அடங்குவர்.

1200க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்த பொங்குதமிழ் எழுச்சிவிழா நிகழ்ச்சியை தமிழில் திரு.லடிஸ் அவர்களும், இத்தாலிய மொழியில் செல்வி ஜனனி தவராஜசிங்கம் அவர்களும் இணைந்து தொகுத்து வழங்கினார்கள்.

நன்றி உரையுடன் நிறைவாக 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்ற பாடலிற்கு மக்கள் அனைவரும் எழுந்து நின்று உணர்வுடன் கைதட்டிப் பாடி பொங்குதமிழ் எழுச்சி விழா நிகழ்வை இரவு 10.30 மணிக்கு நிறைவு செய்து வைத்தனர்.

## அகலிட நிகழ்வுகள்

# ஜேர்மனியில் மேலும் 3 தமிழாலயங்கள்

ஜேர்மன் உலகத் தமிழர் இயக்க கல்விப்பணி மேலும் மூன்று தமிழாலயங்களை ஆரம்பித்துள்ளது. அயன்பேர்க், லிம்பேர்க், கார்ஸ்ட் ஆகிய நகரங்களில் இந்தத் தமிழாலயங்கள் ஆரம்பமாகியுள்ளன.

அயன்பேர்க் நகரில் இயங்கி வந்த தமிழ்ப் பாடசாலை உலகத்தமிழர் இயக்கத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. மேற்படி இயக்க பொறுப்பாளர் திரு. இரா. நாகலிங்கம் அயன்பேர்க் தமிழாலயத்தை ஆரம்பித்து வைத்தார்.

லிம்பேர்க் காடாமர் நகர தமிழ்ப் பாடசாலை உலகத்தமிழர் இயக்க கல்விப்பணியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. திரு. இரா. நாகலிங்கம் புதிய தமிழாலயத்தை ஆரம்பித்துவைத்தார்.

இரு பாடசாலைகளும் தமிழாலயமாக மாற்றப்பட்டது குறித்து பெற்றோர் மகிழ்ச்சி தெரிவித்தனர். கார்ஸ்ட் நகர தமிழ் மக்களின் வேண்டுதலுக்கிணங்க அந் நகரில் தமிழாலயமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதனையும் திரு. நாகலிங்கம் ஆரம்பித்துவைத்தார்.

புதிய தமிழாலயங்களில் திறப்பு விழாக்களில் கலந்துகொண்டு உரையாற்றிய உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் திரு.இரா. நாகலிங்கம் குறிப்பிட்டதாவது 'தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்மொழியை ஆர்வமுறக் கற்று எமது கலை, கலாச்சார பண்புகளுடன் தமிழ்ச் சந்ததியாக தன்மானத்துடன் வாழ எமது கல்விப் பணி தமிழாலயங்களுக்கூடாக தூயபணி ஆற்றி வருகின்றது. இங்கே தமிழ் வாழ்கின்றது. வளர்கின்றது எனும்போது நாம் மன நிறைவு கொள்கின்றோம். ஜேர்மனியில் பரவலாக நூற்றுக்கும் அதிகமான தமிழாலயங்களை நிறுவி பதினொரு ஆண்டுகளைக் கடந்தும் சேவையாற்றி வருகின்றோம். புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழிக்கல்வியில் ஜேர்மன் முன்னணியில் நிற்கின்றது. ஆகவே அயன்பேர்க், லிம்பேர்க், கார்ஸ்ட் தமிழாலயங்களும் எம் பணியின்கீழ் இணைந்துள்ளது மகிழ்ச்சியை தருகின்றது. அவற்றின் வளர்ச்சிக்காக உலகத்தமிழர் இயக்க கல்விப் பணி சகல உதவிகளையும் வழங்கும் என்றார்.

*- வீ. ஆர். வரதராஜா.*

# மகாஜனாவின் முன்மாதிரி

கிளிநொச்சி கல்வி வலய ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையினர் நிதி அன்பளிப்பு செய்துள்ளனர்.

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை கவனத்தில் எடுத்த இச் சங்கத்தினர், ஓர் இன்னிசைக் கச்சேரியை நடாத்தி அதன் மூலம் பெறப்பட்ட 3214 பிராங்குகளை தமிழர் புனர்வாழ்வு கழகம் பிரான்ஸ் கிளையிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாக மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் மூன்று ஆசிரியர்களுக்கான ஊதியத்தை தொடர்ந்து வழங்கிவரும், மகாஜனா பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையின் இம் முன்மாதிரி செயற்பாடு பாராட்டத்தக்க ஒன்றாகும். ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறையால் இன்று தமது கல்வியை தொடரமுடியாமல் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் வன்னி மாணவர்களுக்கு இவ்வாறான ஒத்துழைப்புக்கள் பல வழிகளாலும் கிடைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

*- செந்தூரன்*

## 'கல்லறைப் பூக்கள்'
### நூல் வெளியீட்டு விழா

மண் சஞ்சிகை ஆசிரியர் வ. சிவராசா அவர்களின் 'கல்லறைப் பூக்கள்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டுவிழா.

காலம்: 25.08.2001 சனி மாலை 3 மணி

இடம்: International Zentrum
Flachsmarkt am innenhafen
Nieder Str-5, 47051 Duisburg-Zentrum

கலை, இலக்கிய ஆர்வலர்கள் அன்போடு அழைக்கப்படுகின்றனர்.

# ஈழத்து படைப்பொன்று பாரிசில் வெளியீடு

## அ. யேசுராசாவின் 'தூவானம்'

தமிழீழத்திலிருந்து வருகை தந்து இரண்டு மாதங்களுக்கு மேலாக ஐரோப்பிய நாடுகள் எங்கும் ஈழத்துக் கலை இலக்கிய நிகழ்வுகளில் பங்கெடுத்து ஈழத்துப் படைப்பிலக்கியம் ஆற்றிய ஊக்கிய செயல்பாட்டினை விளக்கிய இருவரது நூல்கள் பிரான்சில் வெளியிடப்பட்டது- கவிஞர் சு.வில்வரத்தினத்தின் 'உயிர்தெழும் காலத்திற்கா'... அ. யேசுராசாவின் 'தூவானம்' நான் இங்கு 'தூவானம் பற்றிய குறிப்பையே லயத்தில் 1974 களில் வெளியிடப்பட்டது. அந்த நூல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. அத்தகையவரின் நூல் இன்று புலத்தில் பிரான்சில் அந்தப் பள்ளி மாணவர்களாலே இங்கும் வெளியிட்டு விழா இடம்பெறுவது சிறப்புக்குரியது. ஈழத்துக் கலை இலக்கிய வளர்ச்சிக்கு - முயற்சிக்கு - முன்னேற்றத்திற்கு உறுதுணையாகவும் உந்துசக்தியாகவும் மூன்று கட்டங்கள் இருந்தன. 1943 களில் உருவான தமிழிலக்கிய மறும




நூல் வெளியீட்டில் கவிஞர் கி.பி. அரவிந்தன் நூல் ஆய்வுரை · ஆற்றுகின்றார். அமர்ந்திருப்பவர் இடது பக்கம் படைப்பாளி அ.யேசுராசா, தலைவர் கவிஞர் மா.கி. கிறிஸ்ரியன், கவிஞர் சு.வில்வரத்தினம்.

தருகிறேன். ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றில் அ. யேசுராசாவின் 'அலை' சஞ்சிகை ஆய்விற்கும் ஆவணப்படுத்தலுக்கும் உரிய தொன்றாகும். கலை இலக்கிய விமர்சனப் பார்வையை மிகுந்த நுண்ணறிவோடு கொண்டு செயல்படுத்தும் அவரது தூவானம் நூலை குருநகர் பழையமாணவர் சங்கமும்- குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திப் பெருமை சேர்த்துள்ளனர். 27.07.2001 பாரிஸ் 11 வெல்வில் மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் மங்கலவிளக்கை கழகத் தலைவர். எ. சாள்ஸ் லர்ச்சிச் சங்கமும்-1946 களில் உருவான இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் 1980 களின் பின்னர் ஏற்பட்ட ஈழவிடுதலைப் போர்க்கால கட்டமுமாகும். மற்றும் தூவானம் நூலில் இடம்பெற்றுள்ள பத்திகளை படித்துப் பார்ப்பதும் பயன்தருவனவாக இருக்கும் என்றார். அடுத்து வெளியீட்டுரையை டெமியன். சூரி அவர்கள் நிகழ்த்தினார். அவர் தனது உரையில் நமக்குப் பயன்படக்கூடிய அரிய நூல் இதுவென்றார். இதனைத் தொடர்ந்து நூல் ஆய்வுரை இடம்பெற்றது. நூல் ஆய்வினை




அ. யேசுராசா ஏற்புரை நிகழ்த்துகின்றார். அருகில் அமர்ந்திருப்பவர் மாணவர் சங்கத் தலைவர் கு. பீலிக்ஸ்.

அவர்களும் சங்கத் தலைவர் கு. பிலிக்ஸ் அவர்களும் ஏற்றிய தன்பின் மண்ணில் மடிந்த மகத்தான மனிதர்களுக்கு மௌன வணக்கம் செலுத்தியதும் வரவேற்புரையை ம.அன்ரன் அவர்கள் கூறிமுடித்ததும் விழாவுக்குத் தலைமை வகித்த கவிஞர். மா.கி. கிறிஸ்ரியன் தலைமையுரை ஆற்றினார்.

தனதுரையில் அ. யேசுராசா அவர்கள் 1964 களிலிருந்து எழுதத் தொடங்கியவர். அவரது முதல் சிறுகதைத் தொகுப்பு 'தொலைவும் இருப்பும்' நூல் குருநகர் சென் ஜேம்ஸ் வித்தியா கி.பி. அரவிந்தனும், கவிஞர் சு. வில்வரத்தினமும் நிகழ்த்தினர். கவிஞர் கி.பி. அரவிந்தன் பேசுகையில், யேசுராசாவின் பரந்துபட்ட வாசிப்பிற்கும், கண்டுபிடிப்புக்கும் விமர்சனத்திற்கும் உரிய வெளிப்பாடே இந்தத் 'தூவானம்'. பத்தி எழுத்து பலதரப்பட்ட விசாலமான பார்வைக்குரிய எழுத்தாக உருப்பெற்றுள்ளமையும் அவரது இலக்கிய அணுகுமுறையை பலதரப்பட்டனவற்றை ஆராயும் ஆய்வுக்கோணத்தை இந்த நூல் வெளிக்காட்டும். காலத்தின் கடமை, உணர்த்தும் பத்திகள் இதில் அதிகமாக அடக்கப்பட்டுள்ளது. நகைச்சுவைமிகுந்த பத்திகளும் சாடல் தேடலுடன் இடம்பெற்றுள்ளமை போற்றுதலுக்குரியது என்றவகையில் 45 நிமிடங்கள் தன் ஆய்வுரையை ஆற்றினார். இவரைத் தொடர்ந்து ஈழத்திலிருந்து வருகை தந்த கவிஞர். சுவில்வரத்தினம்- கலைகள் பற்றிய தேடலை மிகுந்த நுண்ணறிவுடன் நுண்புலத்தினுள் நுழைத்தார். தனக்கேயுரிய பாணியில் தங்கு தடையின்றி சீருடன் பேசினார். ஈழத்து யாழ்ப்பாணக் 'கூழ்' தொடங்கி, நமது பாரம்பரியக் கலையான 'நாட்டுக் கூத்து' வரையான கலை இலக்கிய விழிப்பை விபரமாகக் கோத்தளித்தார். மனிதனே கலையின் வடிவம். அவனது உடல் அசைவுகள் அனைத்தும் கலையின் ரூபமாகவே மிளிர்கின்றது என்றார் மண்டபத்திலிருந்த மக்கள் அனைவரும் ஒருமுகமாக அவரது பேச்சினை உணர்ந்து போற்றினர். இதைத் தொடர்ந்து அ. யேசுராசாவுக்கு வாழ்த்து மடல் வாசித்து ஆசிரியர் மலக்கியாஸ் அவர்களால் கையளிக்கப்பட்டது. ஏற்புரையை படைப்பாளி ஆற்றினார். பத்தி எழுத்து உருவான பகுதிகளையும் ஆய்வுரையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடைபகர்ந்தும் தனது மாணவகால ஆசிரியர்களையும் நினைவில் நிறுத்தினார்.

நன்றியுரையை மைக்கல் ஆஞ்சலோ கூறிமுடித்தார்.

- குவாட்டஸ்

# பிரான்ஸ் தமிழர் விளையாட்டு விழா 2001

பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடாத்திய தமிழர் விளையாட்டுவிழா 2001 கடந்த 5ம் திகதி ஞாயிறன்று நடைபெற்றது.

நாலாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இவ்விழாவில், அணிகளாகக் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு:



**உதைபந்தாட்டம் பெரியவர்கள்**

1ம் இடம்: ஈக்கிள்ஸ் வி.கழகம்
2ம் இடம்: ஈழவர் வி.கழகம்

**மென்பந்து துடுப்பெடுத்தாட்டம்**


1ம் இடம்: அருணோதயா வி.க.
2ம் இடம்: நல்லூர்ஸ்தான் வி.க.











**கரப்பந்தாட்டம்**

1ம் இடம்: வள்ளுவன் A
2ம் இடம்: வள்ளுவன் B

**கயிறு இழுத்தல் ஆண்கள்**

1ம் இடம்: புனிதகென்றி அரசர்
2ம் இடம்: T.T.N கலைஞர்கள்

**கயிறு இழுத்தல் பெண்கள்**

1ம் இடம்: புனிதகென்றி அரசர்
2ம் இடம்: தென்றல் இல்லம்

**கிளித்தட்டு ஆண்கள்**

1ம் இடம்: தமிழர் வி.கழகம் 93

**கிளித்தட்டு பெண்கள்**

1ம் இடம்: தமிழர் வி.கழகம் 93
2ம் இடம்: பாரிஸ் தமிழர் கல்வி நிலைய வி.கழகம்.



# இரசாயனப் போருக்கு தயாராகும் சிறீலங்கா!

## -தமிழர் மனித உரிமை மையம்-

பிரான்சை தலைமையகமாக கொண்டு செயற்படும் 'தமிழர் மனித உரிமை மையம்– TCHR' வெளியிட்ட அறிக்கையில் சிறீலங்கா அரசு இலங்கைத் தீவில் தமிழீழ மக்கள் மீது ஓர் இரசாயன யுத்தத்திற்கு தயாராகுவத்தாக கூறியுள்ளது. கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையான 'சண்டே லீடரை' ஆதாரம் காட்டி வெளியிட்ட அறிக்கையில், சிறீலங்காவினால் ஏற்கனவே பலகோடி டொலர் பெறுமதியான இரசாயன ஆயுதங்கள் ரஷ்யாவிலிருந்து இறக்குமதியாகவுள்ளதாகவும், இவை சர்வதேச ரீதியில் ஏற்கனவே தடைசெய்யப்பட்ட ஆயுதங்களெனவும் கூறப்பட்டுள்ளது.

தமிழர் மனித உரிமை மையத்தின் அறிக்கை மேலும் கூறியுள்ளதாவது, சிறீலங்கா ஏற்கனவே 'இரசாயன ஆயுத ஒப்பந்தத்தில்' கைச்சாத்திட்டுள்ளது மட்டுமல்லாது இவ் ஒப்பந்தத்தை கண்காணிக்கும் நிறுவனமான 'இரசாயன ஆயுத பாவிப்பு தடை ஸ்தாபனத்தின்' (Organisation for the Prohibition of Chemical Weapons-opew) நிர்வாக குழுவில் முக்கிய அங்கத்துவம் வகிக்கும் நாடாக விளங்கி வரும் அதேவேளை இவ் இராணுவ ஆயுத கொள்வனவில் ஈடுபட்டுள்ளமை மிக அதிர்ச்சியை கொடுப்பதாக கூறியுள்ளது.

சிறீலங்காவினால் கொள்வனவு செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் நிட்சயமாக தமிழ் மக்கள் மீதே பாவிப்பதற்காகவே கொண்டுவரப்பட்டன என குறிப்பிடும் இவ் அறிக்கை, இதே ஆயுதத்தை ரஷ்யா துருப்புக்கள் செச்சினியா மக்கள் மீது பாவித்தபோது ஏற்பட்ட சர்வதேச அழுத்தங்களையும் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ் அறிக்கை சகலரையும் உடனடியாக ஐ.நா செயலாளர் நாயகத்திற்கும், இரசாயன ஆயுத பாவிப்பு தடை ஸ்தாபனத்தின் இயக்குநர் நாயகத்திற்கும் ஓர் கண்டன அறிக்கையை அனுப்புமாறு வேண்டிக்கொண்டுள்ளது.

சிறீலங்கா அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட 'இரசாயன ஆயுதங்களை' கண்டித்து உங்கள் கடிதங்களை உடன் கீழ்கண்ட விலாசங்களுக்கு அனுப்புங்கள்

1. Secretary General
United Nations
New York
United States
Fax: 00-01-212 - 9637055

2. Director General
Opew
Johan De Wittlaan-32
2517-JR The Hague
Netherlands
Fax: 00-31-70 -306 35 35

# மரண அறிவித்தல்



## திருமதி நாகரெட்ணம் முத்தையா

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் வசித்தவரும் தற்பொழுது கனடா (Toronto)வில் வசித்து வந்தவருமாகிய திருமதி. நாகரெட்ணம் முத்தையா சனிக்கிழமை 18.08.01 அன்று கனடாவில் காலமானார் அன்னார்

இவர் காலம் சென்ற முத்தையாவின் மனைவியும் அமரர் நாகலிங்கம், அமரர் தெய்வானைப்பிள்ளையின் மகளும்

மாசில்லாமணி (இலங்கை), மங்களம் (பாரிஸ்), நடராசா (இந்தியா), சிவராமலிங்கம்(பாரிஸ்), அமரர் கனகாம்பி, அமரர் சிவசோதி வடிவேல் (கனடா), நாதன்(சுவிஸ்), பாக்கியம்(கனடா), சாந்தினி(கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், கனகாம்பிகை அமரர், பாலசிங்கம், காந்தலெட்சுமி, பரமேஸ்வரி, பரஞ்சோதி, சறோஜினி(சுவிஸ்), அன்னலெட்சுமி, தவம், துரைச்சாமி, சிவனேஸ்வரனின் அன்பு மாமியாரும்,

அமரர் ராசரெட்ணம், நல்லதங்கம்(சுவிஸ்), அமரர் சின்னத்துரை Dr கந்தையா, முத்தையா ஆகியோரின் சகோதரியும், சிதம்பரம், தம்பிப்பிள்ளை, அமரர் பூலோகம், சறோஜினிதேவி மகாலெட்சுமி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

உதயன், ரவி, மோகன், ரதி, பாலகுமார், செயராசன், ராசாத்தி, சசிஸ்குமார், சசீஸ்கரன், கலாயினி, காந்தன், கண்ணா, கௌரி, கரன், கஜன், வரதன், அமரர் மகேந்திரன், லுஜி, துசிஜா, சிந்துஜா, நதீபன், ரதீபன், துசார், துசாரினி சயன்னி, டக்சன், டக்சியா, தர்சிகா இவர்களின் பேத்தியாருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு (கனடா) 0014162881870


# ஐரோப்பா வாழ் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஏடு

**கறுப்பு**

| அளவு | பெறுமதி Euro | Franc |
|---|---|---|
| 27 x 18.4 | 762.31 | 5000 |
| 27 x 9 | 457.39 | 3000 |
| 18.4 x 13.4 | 457.39 | 3000 |
| 18.4 x 8.6 | 304.92 | 2000 |
| 13.4 x 9 | 243.94 | 1600 |
| 9 x 8.7 | 152.46 | 1000 |
| 9 x 6.6 | 121.97 | 800 |
| 18.4 x 3.1 | 121.97 | 800 |
| 6.5 x 4.4 | 76.23 | 500 |
| 9 x 3.1 | 76.23 | 500 |
| 4.4 x 3.1 | 53.36 | 350 |

ஐரோப்பிய தமிழர் தகவல்
**களஞ்சியம**

ஐரோப்பா வாழ் தமிழர்களுக்கு பயன்தரக்கூடிய தகவல்களை உள்ளடக்கிய வழிகாட்டி நூல்

**இது ஓர் ஈழமுரசு வெளியீடு**

2002ல் வெளிவர இருக்கும் இத் தகவல் களஞ்சியமானது ஐரோப்பா வாழ் தமிழ் மக்களை நாடு ரீதியாக, அவர்களின் விபரங்கள், மற்றும் முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவரவுள்ளது. தங்களின் விபரங்களை விளம்பரமாகவோ அல்லது தகவல்களாகவோ வெளியிட விரும்பின் 15.09.2001 இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும். அஞ்சல் உறையின் மேல் இடதுபக்க மூலையில் 'தகவல் களஞ்சியம்' என்று குறிப்பிட்டு ஈழமுரசின் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**வர்ணம்**

| அளவு | பெறுமதி Euro | Franc |
|---|---|---|
| 27 x 18.4 | 1524.62 | 10000 |
| 27 x 9 | 914.78 | 6000 |
| 18.4 x 13.4 | 914.78 | 6000 |
| 18.4 x 8.6 | 609.84 | 4000 |
| 13.4 x 9 | 487.88 | 3200 |
| 9 x 8.7 | 304.92 | 2000 |
| 9 x 6.6 | 243.94 | 1600 |
| 18.4 x 3.1 | 243.94 | 1600 |
| 6.5 x 4.4 | 152.46 | 1000 |
| 9 x 3.1 | 152.46 | 1000 |
| 4.4 x 3.1 | 106.72 | 700 |

விளம்பரம் தொடர்பான ஏனைய விபரங்களுக்கும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளுக்கும் தொடர்புகொள்ளவும்:

**EELAMURASU**
22, Rue Perdonnet, 75010 Paris, FRANCE.
Tél: 00 33 (1) 40 37 63 63
Fax: 00 33 (1) 40 37 64 64
E.Mail-kalangiam@worldonline.fr

களஞ்சியம

தாங்கள் தெரிவு செய்யும் விளம்பர அளவு மற்றும் விபரங்களை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பிவைக்கவும்.

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொலைபேசி: ..............................
தொலை நகல்: ..............................
கைத்தொலைபேசி: ..............................
மின்னஞ்சல் (E.mail): ..............................

தாங்கள் தெரிவு செய்யும் அளவு [ ]

தங்கள் தெரிவின் விபரம்
கறுப்பு/மஞ்சள் [ ]
வர்ணம் [ ]

# இயற்பியல் விதியை வகுத்த ஹைசன்பர்க்

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்

*உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக் மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் ஹெறச் ஹார்ட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசைமுறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப் பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.*



1932-ம் ஆண்டில் இயற்பியலுக்காக நோபல் பரிசு பெற்றவர் ஜெர்மன் இயற்பியல் விஞ்ஞானி வெர்னர் ஹெய்சன்பர்க். கதிரியக்க இயக்கவியல் (Quantum Mechanics) உருவாக்கியதற்காக இந்தப் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. அறிவியல் வரலாற்றிலேயே மிக முக்கியமான சாதனங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

பருப்பொருள்களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் பொதுவிதிகளைப் பற்றி ஆராய்வது இயற்பியில் 'இயக்கவியல்' (Mechanics) என்னும் பிரிவாகும். இந்தப் பிரிவு, இயற்பியலில் மிகவும் அடிப்படையான பிரிவு எனலாம். அது அறிவியலில் மிகவும் அடிப்படையானதாக விளங்குகிறது. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அணுக்கள், அணு உட்கூற்றுத் துகள்கள் (Sub atomic barticles) போன்ற மிக மிக நுண்ணிய பொருள்களின் இயக்கத்தை விளக்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட இயக்கவியல் விதிகளால் (Law of mechanics) இயலவில்லை என்பது படிப்படியாகப் புலனாகியது. தனி அணுக்களை விடப் பல மடங்கு பெரிதான பொருள்களுக்கும் (Macroscopic Objects) பயன்படுத்தும் வகையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த விதிகளால் மிகச் சிறப்பாகப் பயன் விளையும்போது, நுண்ணிய பொருள்களுக்கு ஏன் பயன்படவில்லை என்பது புரியாத புதிராக இருந்தது.

1925ஆம் ஆண்டில் ஒரு புதிய இயற்பியல் விதியை வெர்னர் ஹெய்சன்பர்க் வகுத்துரைத்தார். இது பழைய நியூட்டனின் விதியிலிருந்து, அடிப்படைக் கோட்பாடுகளிலேயே முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. ஹெய்சன் பர்க்குக்குப் பின்வந்தவர்கள் சில மாற்றமைவுகளைச் செய்த பிறகு இந்தப் புதிய கோட்பாடு வெற்றிகரமாகச் செயற்பட்டது. இந்தப் புதிய கோட்பாடு எல்லா இயற்பியல் முறைகளுக்கும் அவை எந்த வகையைச் சேர்ந்ததாயினும் எந்த வடிவளவில் இருப்பினும் பயன்படுத்தக் கூடிய கோட்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

வெற்றுக் கண்களுக்குப் புலனாகிற அமைப்புகள் ஆய்வுப் பொருள்களாக இருக்கும்போது, கதிரியக்க இயக்கவியலின் ஊகங்களுக்கும், பழைய இயக்கவியலின் ஊகங்களுக்குமிடையிலான வேறுபாட்டின் அளவு, அளவிட்டு அறிய முடியாத அளவுக்கு மிக மிக குறைவாகவே இருக்கிறது என்பதைக் கணித முறைப்படி மெய்ப்பிக்க முடிகிறது. (இந்தக் காரணத்திற்காகவே, கதிரியக்க இயக்கவியலைவிடக் கணித முறையில் மிகவும் எளிமையுடையதாக இருக்கும் பழைய இயக்கவியலைப் பெரும்பாலான அறிவியல் கணிப்புகளுக்கு இன்னும் பயன்படுத்த முடிகின்றது). எனினும், அணுப் பரிமாணங்களைக்கொண்ட அமைப்புகள் ஆய்வுப் பொருள்களாக இருக்குமிடத்து, கதிரியக்க இயக்கவியல் ஊகங்கள், பழைய இயக்கவியலின் ஊகங்களிலிருந்து மிகப் பெருமளவில் வேறுபடுகின்றன. இத்தகைய நேர்வுகளில் கதிரியக்க இயக்கவியலின் ஊகங்கள்தாம் மிகத் துல்லியமானவை என்பது பரிசோதனைகள் மூலம் மெய்ப்பிக்கப்பட்டு இருக்கிறது.

ஹெய்சன்பர்கின் கோட்பாட்டினால் ஏற்பட்ட முக்கிய விளைவுகளில் ஒன்று புகழ்பெற்ற 'உறுதியின்மைத் தத்துவம்' (Uncertainty Principle) ஆகும். இதனை ஹெய்சன் பர்க் தாமே வகுத்தமைத்தார். அறிவியல் முழுவதிலும் பரந்த செயல்வினைவுடைய அடிப்படையான தத்துவங்களில் ஒன்றாக இந்தத் தத்துவம் பொதுவாகக் கருதப்படுகிறது. அறிவியல் அளவீடுகளைச் (Scientific Measurement) செய்வதில் நமது திறம்பாட்டிற்குச் சில கோட்பாட்டு வரம்புகளை (Limits) இந்த உறுதியின்மைத் தத்துவம் குறித்துரைக்கிறது. இத்தத்துவத்தின் பாதிப்புகள் அளவிறந்தன. மிக உன்னதமான சூழ்நிலைகளில்கூட, ஒரு விஞ்ஞானி, தாம் ஆராய முனைந்துள்ள அமைப்பு பற்றித் துல்லியமான அறிவைப் பெறுவதற்கு இயற்பியலின் அடிப்படை விதிகள் தடையாக இருக்குமானால், அந்த அமைப்பின் எதிர்கால நடத்தைப் போக்கினை முற்றிலுமாக, ஊகித்தறிவது இயலாத காரியம் என்பது தெளிவு. நமது அளவீட்டுக் கருவிகளில் எத்துணை சீர்திருத்தங்களைச் செய்தபோதிலும் இந்தத் தடையைச் சமாளிப்பது ஒருபோதும் இயலாது என்று உறுதியின்மைத் தத்துவம் திட்டவட்டமாகக் கூறுகிறது.

இயற்கையின் அமைப்பு முறையில், புள்ளியில் ஊகங்களுக்கு மேற்பட்டு இயற்பியலினால் வேறொன்றும் செய்திட இயலாது என்பதை உறுதியின்மைத் தத்துவம் உறுதிப்படுத்துகிறது. (எடுத்துக்காட்டாக, கதிரியக்கம் (Radioactivity) பற்றி ஆராயும் ஒரு விஞ்ஞானி பதினாயிரம் கோடி கதிரியக்க அணுக்களில், இரண்டு கோடி அணுக்கள் அடுத்த நாளிலேயே மிகக் குறுகிய ஒளிக் கதிரலையுள்ள ஊடுருவு 'சிற்றலை ஒளிக் கதிர்களை' (Gamma Rays) உமிழ்கின்றன என்பதை ஊகித்துக் கூற இயலும். ஆனால், ஏதேனும் குறிப்பிட்ட கதிரியக்க அணு, அவ்வாறு சிற்றலை ஒளிக்கதிர்களை உமிழுமா என்பதை ஊகித்துக்கூற அவரால் இயலாது). பல நடைமுறைச் சூழ்நிலைகளில், இது அப்படியொன்றும் கடுமையான தடைவரம்பு இல்லை. மிகப் பெருமளவு எண்ணிக்கைகள் உள்ளடங்கியிருக்குமிடத்து, செயல்வினைக்கான மிக நம்பகமான அடிப்படைப் புள்ளியியல் முறைகள் பெரும்பாலும் அளிக்கக் கூடும். ஆனால், மிகச் சிறிய எண்ணிக்கைகளைப் பொறுத்தவரையில், புள்ளியியல் ஊகங்கள் நம்பத்தக்கனவாக இல்லை. உண்மையைக்கூறின், மிகச் சிறிய அமைப்புகளில், கண்டிப்பான இயற்பியல் காரணங்கள் பற்றி நமது கருத்துகளைக் கைவிடும்படி உறுதியின்மைத் தத்துவம் வற்புறுத்துகிறது. இது அறிவியல் தத்துவத்தில் மிகப் பெரிய மாற்றமாகும். இதனால்தான் ஐன்ஸ்டீன் போன்ற தலைசிறந்த விஞ்ஞானிகள் கூட ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். 'இந்த அண்டத்தை வைத்துக் கொண்டு, ஆண்டவன் பகடை ஆடுகிறான் என்பதை என்னால் நம்ப முடியவில்லை' என்று ஒருமுறை ஐன்ஸ்டீன் கூறினார். பெரும்பாலான மற்ற இயற்பியலறிஞர்கள்கூட இதே கருத்தைத்தான் கொண்டிருந்தார்கள்.

கதிரியக்கக் கோட்பாட்டை ஒரு கோட்பாட்டுக் கண்ணோட்டத்தில் நோக்கும்போது, அது சார்புக்கொள்கையை (Theory of Relativity) விடவும் மிகப் பெருமளவில் இயற்பியல் உலகம்பற்றிய நமது அடிப்படைக்கோட்பாட்டினை மாற்றியமைத்திருக்கிறது என்பது தெளிவாகும். எனினும், இந்தக் கோட்பாட்டின் பின் விளைவுகள், வெறும் கோட்பாட்டளவிலேயே நின்றுவிடவில்லை. நடைமுறையில் அது பெருமளவுக்குப் பயன்படுகிறது.

நடைமுறையில் இக்கோட்பாட்டின், பயன்பாடுகளில் எதிர்மின்ம நுண்ணோக்காடிகள் (Electoron Microscope) லேசர்கள், மின்மப் பெருக்கிகள் (Transistors) போன்ற நவீன சாதனங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். அணு இயற்பியல் (Nuclear Physics) அணு ஆற்றல் (Atomic Energy) ஆகியவற்றிலும் கதிரியக்கக் கோட்பாடு விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. வண்ணப் பட்டை ஆய்வியல் (Spectroscopy) பற்றிய நமது அறிவுக்கும் இக்கோட்பாடு அடிப்படையாக அமைந்துள்ளது. வானியல், வேதியியல் ஆகியவற்றிலும் இதன் பயன்பாடு அளப்பரியது. திரவ ஹீலியத்தின் பண்புகள், விண் மீன்கள் அக அமைப்பு, அயக்காந்தவியல், கதிரியக்கம் ஆகியவை பற்றிய கோட்பாடு ஆராய்ச்சிகளுக்கு இக்கோட்பாடு பயன்படுகிறது.

வெர்னர் ஹெய்சன்பர்க் 1901ம் ஆண்டு ஜெர்மனியில் பிறந்தார். மூனிக் பல்கலைக் கழகத்தில் 1925ம் ஆண்டில் கோட்பாடு இயற்பியலில் 'டாக்டர்' பட்டம் பெற்றார். தலைசிறந்த டென்மார்க் இயற்பியலறிஞர் நீல்ஸ் போர் என்பவருடன் இணைந்து கோபன்ஹேகனில் 1924 முதல் 1927 வரை பணியாற்றினார். கதிரியக்க இயக்கவியல் பற்றிய இவரது முக்கியமான ஆய்வுக் கட்டுரை 1925ம் ஆண்டில் வெளியிடப் பட்டது. இவர் வகுத்தமைத்த 'உறுதியின்மைத் தத்துவம்' 1927ஆம் ஆண்டில் வெளியாகியது. ஹெய்சன்பர்க் 1976ஆம் ஆண்டில் தமது 74ஆம் வயதில் காலமானார். இவர் இறந்தபோது இவரது மனைவியும், ஏழு குழந்தைகளும் இருந்தனர்.

# கவிக்களம்

## இனியும் அவன் இறைவனா!

செந்தமிழீழ மண் தனிலே
எந்தன் மக்கள் படும் துன்பத்தை
ஐந்தொழில் புரியும் ஆண்டவனும்
கண் திறந்து பார்க்க மறந்துவிட்டான்.
ஆதியிலே தொடக்கி வைத்த
ஆழ் கடல் சூழ் பூமிதனை
கண் திறந்து பார்க்காமலே
கர்த்தனவனும் தூங்குகின்றான்.
அவலக் குரலெழுப்பி கண்ணீர் சொரிந்து
மானம் காக்க எம் மங்கையர்
காமுகருடன் போராடுவதை
பாஞ்சாலிக்கு துகில் கொடுத்த
பரந்தாமனும் பார்க்காமலே தூங்குகின்றான்.
கொல்லாமையை போதித்த அந்த
பௌத்த நெறியாளர்கள்
எம்மினத்தைக் கொல்லுவதை
அன்னப் பறவைக்கே உயிர் கொடுத்த- அந்த
புத்தபெருமானும் பார்க்காமலே தூங்குகின்றான்.

மங்கையர்கள் கண்ணீரை
கடவுளரும் காணவில்லை- எங்கள்
கௌரவத்தை சூதாடும்
கயவர்களைக் கொல்லவில்லை.
பட்டினியால் சாகும் எங்கள்
பிஞ்சுகளைக் காக்கவில்லை.
செங்குருதி சிந்தும் மக்களையும்
அவன் காக்கவில்லை.
எல்லையில்லா எம் துயர் தீர
இறைவன் கூட இல்லையென்றால்
இனியும் அவனை இறைவன் என்றே
துதிக்க நாங்கள் எண்ணமாட்டோம்!

*வன்னேரியூர்- பொன். சிவகௌரி*
*நோர்வே*

## ஊமைத்த தேசங்களே ஒரு வார்த்தை கேளும்!

*ஊமைத்துக் கிடக்கின்ற*
*உலகத்து நாடுகளே!*
*உங்களைத்தான்*
*கேட்கின்றோம்*
*எங்களுக்காய் வாய்மூடும்*
*விரதமின்னும்*
*எத்தனைநாள்?*

*பெண்ணாட்சி நடத்தும்*
*அந்த*
*பேய்புகுந்த நாட்டினிலே*
*பெண்தமிழ்க் குலத்தோற்கு*
*பெரும்துயர் தொடர்கிறதே!*

*தோளுவத்து மந்தைகளாய்*
*கொழுப்புணவு கொடுத்து...*
*குழுபற்றப் படையினரை*
*கடன்பட்டே வளர்க்கின்றாள்*
*காட்டேறி சந்திரிகா!!*

*பாட்டன் காலத்து*
*பகைகொண்ட பாதகி*
*கட்டவிழ்த்து விட்டபடை*
*கடப்புகளைத் தாண்டிவந்து...*
*வீட்டுக் கதவுடைத்து*
*தாய்க்குலத்தின்*
*தோள்முறித்து*
*தொடர்கிறதே வல்லுறவை!!*

*மதநீர் வெளிப்பட*
*கழிவுறுப்போ நீண்டுவிட*
*யோனிக் குளிதேடி*
*யானைகள் அலைவதுபோல்,*
*கல்மனத்தாள் மூட்டிவிட்ட*
*காமுகர் பெருநீரையும்*
*வல்லுறவை நாடியங்கே*
*வெங்கொடுமை*
*விளைக்கிறதே!*

*ஊமைத்த தேசங்களே*
*ஒருவார்த்தை கேளும்!*
*விழிசிவந்தே எம் தலைவன்*
*வேள்விகொள்ள*
*எழுந்துவிட்டான்!!*

*போட்ட கணக்கிலொரு*
*புள்ளியும் தவறாது*
*கூட்டோடு காமப்படை*
*குதறுண்டு குவியும்காண்!!*

ந. கிருஷ்ணசிங்கம்
நோர்வே.

# 4வது தடவை சம்பியனாகிய மிகைல் சூமாக்கர்


19.08.2001 அன்று கங்கேரியின் தலைநகர் வுடாபெஸ்டில் நடைபெற்ற கார்ஓட்டப்பந்தயம் Formula இல் சூமாக்கர் வெற்றிபெற்றார். இவ்வாண்டுக்கான போட்டிகள் இன்னமும் 4 மிகுதியாக இருக்கும் வேளையில் உலகின் அதிவேக ஓட்டுநராக மிகைல் சூமாக்கர் 4வது தடவையும் தெரிவாகியுள்ளார். யேர்மனியரான சூமாக்கர் பறாறிகாரை ஓட்டிச்சென்றே சம்பியனானார். சென்றவருடமும் இதே காரையே ஓட்டி சம்பியனாக மிளிர்ந்தார். இம்முறை பெரிய அளவில் எதிர்ப்பை எதிர்கொள்ளாது சூமாக்கர் வெற்றிபெற்றிருக்கிறார் என்பதைவிட 51 போட்டிகள் வென்று பல சாதனைத்தரவுகளை நோக்கி முன்னோக்கிக் கொண்டும் வருகின்றார். இப்போட்டியில் சூமாக்கர் வெற்றிபெற்ற அதே வேளை பறாறியின் மற்ற ஓட்டுநரான பார்ச்சிலோவும் இரண்டாம் இடத்துக்கு வந்து பறாறி நிறுவனத்திற்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தினார். மூன்றாவது இடம் மக்லேறன் ஓட்டுநர் குத்தாட்டுக்கு கிடைத்தது.





சூமாக்கரின் இவ் வெற்றியை அடுத்து அவரின் சொந்தநாடான யேர்மனியிலும் பறாறி கார்களை தயாரிக்கும் இத்தாலியிலும் தடல் புடலான கொண்டாட்டங்கள் இரசிகர்களின் வெற்றிக்கூத்தாட்ட களிப்புக்கள் இடம் பெற்றன.

## பிரட்மன் அணியில் பிரமித்து நிற்கும் டெண்டுல்கர்

கிரிக்கட்டின் பிதா என்று வர்ணிக்கப்படும் டொன்பிரட்மன் அண்மையில் இறந்திருந்தார். இவரின் இறப்பிற்கு பின் இவரால் 'இரகசியமாக காப்பாற்றப்பட்ட சில விடயங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றது. அதில் ஒன்றுதான் உலகின் முக்கிய கிரிக்கட் ஆட்டக்காரர்கள் என அவரால் கணிக்கப்பட்ட வீரர்களை வைத்து உருவாக்கப்பட்ட அணி. இவ் அணியில் இடம்பிடிக்கும் தற்காலவீரன் என்றால் இந்திய நம்பிக்கை நட்சத்திரம் டெண்டுல்கர் ஒருவர்தான். ஏனைய அனைவரும் முன்னாள் வீரர்கள். இவ்வணியில் 7 அவுஸ்திரேலியர்களும் மற்றும் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள் இந்தியா நாடுகளின் தலா ஒரு வீரரும் இடம்பெற்றனர். பிரட்மனின் கனவு அணியை 'பிரட்மன் பெஸ்ட்' என்ற நூலில் அவர் குறிப்பிட்டிருந்தார். அத்தோடு இதனை தனது இறப்புக்கு பின்பே வெளியிட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.



# சிறீலங்காவிடம் வாங்கிக்கட்டியது இந்தியா




சிறீலங்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய கிரிக்கட் அணி அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போட்டிகளில் பெரும் பின்னடைவை சந்தித்து வருகின்றது. இருவாரங்களுக்கு முன் முத்தரப்பு ஒருநாள் பந்தய இறுதிப்போட்டியில் வாங்கிக்கட்டிய இந்திய அணி காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியிலும் அதே நிலையை தொடர்ந்துள்ளது.

கடந்த 17ம் திகதி முடிவுற்ற இப்போட்டியில் சிறீலங்கா அணி மிக எளிதாக 10 விக்கட்டுகள் வித்தியாசத்தில் இந்தியர்களை வீழ்த்திக்கொண்டனர். முதலில் துடுப்பாடிய இந்திய அணி தமிழக வீரன் ரமேஸ் மற்றும் டாஸ் ஆகியோரின் சிறப்பான ஆரம்பத்துடன் 79 ஓட்டங்களை சேர்த்திருந்தபோதிலும் பின்வந்த வீரர்கள் சோபிக்க மறுத்ததால் 187 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது. சிறீலங்கா வீச்சாளர் பெர்ணாண்டோ 5 விக்கட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்காடிய சிறீலங்கா அணித் தலைவர் ஜெயசூரியா உதவித்தலைவர் அதபத்து ஆகியோரின் நேர்த்தியான ஆரம்பமும் சங்ககாராவின் உறுதியான ஆட்டமும் கைகொடுக்க 362 ஓட்டங்களை பெற்றது. இதில் ஜெயசூரியா 111 ஓட்டங்களையும் சங்ககாரா 105 ஓட்டங்களையும் குறிப்பிடும்படியாக எடுத்தனர். இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சிறீநாத் 5 விக்கட்டுக்களை பெற்றார். மீண்டும் மட்டை பிடித்தாடிய இந்தியாவால் 180 ஓட்டங்களையே சேர்க்கமுடிந்தது. உதவித்தலைவர் ராவிட் மட்டும் நிதானமாக ஆடி ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களைப் பெற்றார். உலகின் சிறந்த சுழல்பந்து வீச்சாளர்களில் ஒருவரான முரளிதரன் 5 விக்கட்டுக்களை சாய்த்தார். வெற்றி பெற தேவையான 6 ஓட்டங்களையும் விக்கட் இழப்பின்றி சிறீலங்கா பெற்று வெற்றியீட்டியது. இவ்வாட்டத்தின் நாயகனாக ஜெயசூரியா தெரிவானார்.

பொன். தாமோதரம்

இனி உங்களுக்கு கவலைகள் ஏது...

தடைகள் ஏதுமின்றி யாழ்ப்பாணம் சென்றுவர விசேட ஒழுங்குகளுடன் கூடிய விமானப்பயண வசதி.

SriLankan Airlines

IATA

ROYAL JORDANIAN

ABTA J1528

உலகத்தின் எந்தப் பகுதிக்கும் நீங்கள் பறந்து செல்ல நினைத்தால் உடனே எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். தமிழிலேயே பேசி உங்கள் தேவைகளை விளக்கி விமான டிக்கட்டுகளைப் பதிவு செய்துகொள்ளலாம்.

Sri Lankan Airlines ல் Colombo £ 440 அத்துடன் மேலதிகமாக £ 20 செலுத்தினால் Singapore. Kuala Lumpur. Bangkok or south India விமானச் சீட்டை பெறலாம்.

Air Canada வில் Toronto, Montreal £ 241. ← Only At Time Travel

Kenton
136 Kenton road
Harrow
Middlesex
HA3 8AZ

Tel: 020 8907 6969
020 8907 6969
Email: Sutha@ucanfly.co.uk

Main Agent

TIME Travel & TOURS

வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

Flights To Every, Destination on All Popular Airlines

(32 ம் பக்கத் தொடர்ச்சி)

## மேலும் ஒரு...

மிகையொலித் தாரை விமானங்களை இழந்துள்ளது. இதன் போது அதனைச் செலுத்திச் சென்ற உக்கிரேன் நாட்டு விமானியும் பலியாகியுள்ளார்.

பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே இயந்திரக்கோளாறு காரணமாக விபத்து எற்பட்டதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதே நேரம் உக்ரேயின் நாட்டின் விமானப்படை தினத்தை கொண்டாடும் முகமாக அந்நாட்டு விமானி வானில் சாகசம் செய்து கொண்டிருந்தபோது விமானம் நிலைகுலைந்து விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, தாக்குதலின் போது சேதமடைந்த விமானமே திருத்தப்பட்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்ட போது விபத்துக்கு உள்ளாகியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இத் தாக்குதலின் போது மிக்-27 ரக விமானம் ஒன்று சேதமாக்கப்பட்டதாக சிறீலங்கா இராணுவ தரப்பே கூறியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, கட்டுநாயக்க விமானப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது சேதமாக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை 13 என சிறீலங்கா விமானப்படை வட்டாரங்களின் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் ஐந்து உலங்குவானூர்திகளும், இரண்டு கிபீர் விமானங்களும் மீளவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள விமானப்படைப் பேச்சாளரான விங்கொமாண்டர் அஜித் விஜயசுந்தர, மேலும் ஆறு விமானங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இரண்டு எம்.ஐ-24 ரக உலங்குவானூர்திகளும், மூன்று பெல்ரக உலங்குவானூர்திகளும், கிபீர் விமானங்கள் இரண்டும் திருத்தப்பட்டுள்ளன என்றும். மூன்று கிபீர் விமானங்கள், ஒரு மிக்-27 ரக விமானம் மற்றும் இரண்டு பெல் ரக உலங்குவானூர்திகள் திருத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

(32 ம் பக்கத் தொடர்ச்சி)

## காணாமல் போன...

யுத்தமுனைகளில் பல சந்தர்ப்பங்களிலும் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான படையினரின் சடலங்களைப் படையினர் கைவிட்டுச் செல்வதுடன் புலிகளால் கைப்பற்றப்படும் பல சடங்களில் ஒரு சிலவற்றையே படையினர் கையேற்கிறார்களே தவிர, படையினர் கூறுவது போல் காணாமல் போன படையினர் எவரும் எங்கள் பாதுகாப்பிலில்லை. காணாமல் போனவர்கள் புலிகளிடம் இருப்பதாக இராணுவம் பொய்களைக் கூறி வருகின்றது எனவும் தெரிவித்த அவர், மோதல்களின் போது தம்மால் பிடிக்கப்பட்ட மிகக் குறைந்த எண்ணிக்கையிலான படைவீரர்களைப் பார்வையிடுவதற்கு செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுமதியை வழங்கியதாகவும், முல்லைத்தீவு இராணுவ முகாமைப் புலிகள் கைப்பற்றிய வேளை, அந்தச் சமரில் கொல்லப்பட்ட 1000ற்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் உடல்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அரசிடம் கையளிக்க முயற்சிகளை மேற்கொண்டதாகவும், எனினும், அவற்றில் 55 உடல்களை மாத்திரம் இராணுவம் பொறுப்பேற்றதாகவும் மீதி உடல்களை இராணுவ மரியாதையுடன் புலிகள் அடக்கம் செய்ததாகவும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த வருடம் மே மாதம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது ஆனையிறவிற்கு அருகிலுள்ள பகுதியொன்றில் பெருமளவிலான இராணுவத்தினர் கண்ணிவெடிகளில் சிக்கிக் கொண்டதாகவும் அவர்களது பலரின் உடல்கள் இன்னமும் அப்பகுதியிலேயே சிதறிக் கிடப்பதாகவும் உறவினர்களிடம் தெரிவித்துள்ளார். ஆனால் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ள கருத்துக்களை மறுத்துள்ள சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரட்ண, காணாமற்போன இராணுவத்தினரின் பெற்றோர்கள் மற்றும் உறவினரின் மனங்களைச் சோர்வடையச் செய்வதே இத்தகைய செய்திகளின் நோக்கம் எனக் கூறியுள்ளதுடன், ஒரு சடலத்தை மீட்க முயல்வதால், இன்னொரு உயிரை இழக்க நேரிடலாம் என்பதற்காக இராணுவம் அந்தச் சடலத்தை மீட்க முடியாமல் போய்விட்டாலும், அந்தச் சிப்பாய் காணாமற்போய் விட்டதாக ஒரு போதும் கூறாது என்றும் கூறியுள்ளார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## தாக்குதலை ஆராய..

குறித்தும் இக்குழு விரிவாக ஆராய்ந்து ஒரு மாதத்திற்குள் தனது அறிக்கையை சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## விமான நிலைய...

தாக்குதலின் பின்னர் தான் இவ்வாறான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்தும் இக்குழு ஆராய்ந்து வருவதாகவும், அத்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக பாதுகாப்பு குறித்தும் சிபார்சு செய்ய உள்ளதாகவும் தெரியவருகிறது.

(11 ம் பக்கத் தொடர்ச்சி)

## தலிபான்...

தினர் பக்ராம் மற்றும் அருகேயுள்ள கரபா நகரப்பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். ஆப்கானிஸ்தான் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்த 82வது ஆண்டினை நினைவுபடுத்தும் இராணுவ அணிவகுப்புக்களை தலிபான் அரசினர் மேற்கொண்டனர். இதன்போது வடபகுதியில் இருந்து காபுல் விமான நிலையத்தை நோக்கி ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

(11 ம் பக்கத் தொடர்ச்சி)

## உக்கிரேன்...

லாளர்கள் கொல்லப்பட்டனர். கிழக்கு ஐரோப்பாவில் அதிக சுரங்க விபத்துக்களும் உயிரிழப்புக்களும் ஏற்படும் நாடாக உக்கிரேன் கணிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் மாத்திரம் 140 சுரங்கத் தொழிலாளர்கள் உக்கிரேனில் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடம் 306 பேர் இவ்வகையில் உயிரிழந்தனர் என அந்நாட்டின் அவசரகால செயற்பாடுகளுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

## இணுவை மக்கள் ஒன்று கூடல்

**நேரம்:** மாலை 4 மணி முதல் இரவு 11 மணிவரை
**இடம்:** South Wimbledon Community Association
Community Centre, Haydons Road,
London, SW19 1HL

(விம்பிள்டன் பிள்ளையார் கோவிலிற்கு அருகாமையில்)

அன்புடையீர்!

எதிர்வரும் 25.08.2001 சனிக்கிழமை விம்பிள்டன் சமூகசேவை நிலையத்தில் இணுவை மக்களால் நடாத்தப்படவுள்ள கலை நிகழ்ச்சியிலும் விருந்துபசாரத்திலும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு இணுவை மக்கள் அனைவரையும் பேரன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!!

இணுவை மக்கள் ஐக்கிய ஒன்றியம்

தொடர்புகளுக்கு

விவேகானந்தன்: 020 8905 7319 - கரன்: 07956326445 - சிவகுமார் : 020 8659 8441 - கேசவன்: 07714497261 - மாணிக்கவாசகர்: 02 8900 9108

## மரண அறிவித்தல்

தோற்றம்: 18 – 04 – 1918



மறைவு: 12 – 08 – 2001

### திருமதி .மாணிக்கம் கிருஸ்ணபிள்ளை

(வடவறணி)

வடவறணியை சேர்ந்த திருமதி .மாணிக்கம் கிருஸ்ணபிள்ளை அவர்கள் 12.08.2001 (ஞாயிறு) அன்று வடவறணியில் இறைவனடி சேர்ந்தார். இவர் கிருஸ்ணபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) யின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 13.08.2001 திங்கட்கிழமை வறணியில் நடை பெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கி றோம்.


தகவல்: சிறி

**AirLink Travel**

416-292-6200 / 416-287-9166

## மரண அறிவித்தல்

தோற்றம்: 1933



மறைவு: 11 – 08 – 2001

### திரு.முன்னையா தவமணி

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறையைச் சேர்ந்த சின்னையா தவமணி அவர்கள் 11-08-2001 (சனிக்கிழமை) கொழும்பில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் இரவீந்திரன் (கனடா), சுபேந்திரன் (ஜேர்மனி), உஷா (ஜேர்மனி), ஜெயந்திரன் (கனடா), யுகந்திரன் (ஜேர்மனி), வனஜா (இலங்கை), றஜீந்திரன் (கனடா), கிரிஜா (சுவிஸ்), சுஜா (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும்.

காலஞ்சென்ற இரத்தினம், கனகம்மா, இராசமணி, காலஞ்சென்ற மாசிலாமணி, அசுவத்தம்மா, பாவனாசிவம். சறோசா, மல்லிகா ஆகியோரின் அன்புச் சகோதரரும்.

காலஞ்சென்ற நடிக மணி வி.வி.வைரமுத்து காலஞ்சென்ற சின்னத்துரை, குருநாதர், திருமதி. சின்னமணி மாசிலாமணி, மார்க்கண்டு, தங்கத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும்.

நளினி (கனடா), ஜெயந்தி (ஜேர்மனி), மனோராஜன் (ஜேர்மனி), குயின்ரா (கனடா), குமார் (சுவிஸ்), குணசேகரன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனும்.

கனடாவைச் சேர்ந்த சோபனா, றஜீவன், றயூலன் -(டஸ்ரின்) ஜேர்மனியைச் சேர்ந்த டிலூசன், றொபின்சன், நிலூஜன், சுபேதா, நிறோஷீன், நிஜிஷீன், மிதுஷீன் இலங்கையைச் சேர்ந்த யாகுலன், கெவின் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 16-08-2001 வியாழக்கிழமை நாயன்மார்கட்டில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: இரவீந்திரன், ஜெயந்திரன், றஜீந்திரன், நளினி
905-472-2708 / 416-835-8389 (கனடா)


PAPAYA
MODERN CEYLON CUISINE

Restaurant



குறைந்த விலையில்
குன்றாத மனநிறைவு

* தமிழர்களால் தயாரிக்கப்பட்டு தமிழர்களால் பரிமாறும் அறுசுவை உணவகம்.
* அனுபவமும், திறமையும் உள்ள சமையலாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.
* இத்தாலிய உணவுவகைகளும் தேர்வுகளுக்குண்டு.
* திருமணம், பிறந்தநாள் மற்றும் விருந்துபசார வைபவங்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த நியாயமான விலைகளில் அறுசுவையுடன் பரிமாற காத்திருக்கின்றார்கள்.

15 Village Way East,
Rayners Lane,
Harrow,
Middlesex HA2 7LX
Tel: 020 8866 5582 Fax: 020 8866 5582
www.papayauk.com,
e-mail:papaya@papayauk.com

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126
Pub

# மேலும் ஒரு மிக்-27ஐ சிறீலங்கா இழந்தது
# சேதமடைந்த விமானங்கள் 13 ஆக உயர்வு

*(20.08.01)*

கட்டுநாயக்க விமானப் படைத் தளத்திற்கு சமீபமாக சீதுவ பகுதியில் நேற்று சனிக்கிழமை நண்பகல் விமானப் படையின் மிக்-27 ரக குண்டு வீச்சு விமானம் ஒன்று வீடொன்றின் மீது விழுந்து வெடித்துச் சிதறி முற்றாக அழிந்துள்ளது. இதன்போது விமானி உடல் சிதறிப் பலியானதுடன் விமானம் வீழ்ந்து நொருங்கிய இரட்டைமாடி வீடும் முற்றாக இடிந்து தரைமட்டமாகியுள்ளது. அருகிலுள்ள வீடொன்றில் இருந்த ஏழு பேரும் ப்டுகாயமடைந்துள்ளனர். கடந்த மாதம் கட்டுநாயக்கா விமானப் ப்டைத் தளம் மீதான தாக்குதலில் ரஷ்யத் தயாரிப்பான இரண்டு மிக்-27 ரக மிகையொலி குண்டு வீச்சு விமானங்களை பறிகொடுத்திருந்த சிறீலங்காவின் வான் படை, கொழும்பு கட்டுநாயக்க விமானப்படைத்தளத்திலிருந்து வடக்கே 2 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள சீதுவ என்னுமிடத்தில் நேற்று முன்தினம் சனியன்று நண்பகல் 11.20 மணியளவில் மேலும் ஒரு மிக்-27 விமானத்தை இழந்து மூன்று

(தொடர்ச்சி 31ம் பக்கம்)



## காணாமல் போன படையினர் புலிகளிடம் இல்லை
## கள முனைகளில் உடல்கள் சிதறிக் கிடக்கின்றன

**- சு.ப.தமிழ்ச்செல்வன்**

*(19.08.01)*

போர்முனைகளில் காணாமல் போன படையினர் புலிகளின் காவலில் உள்ளதாக சிறீலங்கா அரசு கூறிவரும் கருத்தினை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறுத்துள்ளார். மடு தேவாலய திருவிழாவிற்கு சென்றிருந்த காணாமல் போன படையினரின் பெற்றோர்கள், சுப.தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்தபோது, காணாமல் போன தமது பிள்ளைகள் குறித்தும் அவர்களை கண்டுபிடித்து தருமாறும் கோரிய போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கொழும்பு வந்த தொடருந்து தடம் புரண்டது
### 14 பேர் பலி - 45 பேர் பருகாயம்

*(20.08.01)*

பதுளையிலிருந்து கொழும்பு கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்த 'உடரட்டமெனிக்கே' என்ற அதிவேக தொடருந்து அளவ பகுதிக்கு அருகில் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியதில் 14 பேர் பலியாகியதுடன், 45 பேர் படுகாயமடைந்தனர். நேற்று முன்தினம் சனிக்கழமை மாலை மூன்று மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொடருந்து தடம் புரண்டபோது அதனது பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று வேகமாக மோதியதில் அதற்குள் இருந்தவர்கள் பலியானதுடன் படுகாயங்களுக்கும் உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு குருநாகல், அளவ வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தாக்குதலை ஆராய மேலுமொரு விசேட குழு

*(20.08.01)*

கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து விசாரணை நடத்துவதற்கென சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா மேலும் ஒரு விசேட குழுவை நியமித்துள்ளார். ஓய்வுபெற்ற நீதியரசர் ஜெயவிக்கிரம மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் மெண்டிஸ் ஆகியோர் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்காத் தாக்குதல் குறித்தும், பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்த குறைபாடுகள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## விமான நிலையப் பாதுகாப்பு குறித்து சர்வதேச சிவில் விமான அமைப்பு ஆராய்வு

*(20.08.01)*

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலை குறித்து சர்வதேச சிவில் விமான அமைப்பு (ICAO) அதிகாரிகள் குழு ஒன்று ஆராய்ந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கட்டுநாயக்க விமானத் தளம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து, விமான நிலையத்தின் பாதுகாப்பு, வெளிநாட்டு விமானங்கள் வந்து செல்லக்கூடியவாறு உள்ளதா என்பதைக் கண்டறியும் நோக்கிலேயே இக்குழு கொழும்பிற்கு வந்து தற்போது நிலைமைகளை ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. நான்கு நாட்கள் தங்கியிருந்து இக்குழு, கட்டுநாயக்க விமான நிலைய அனைத்துப் போக்குவரத்துச் சேவைகளுக்கும் மிகவும் பாதுகாப்பான நிலையில் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்க உள்ளதாகவும், இந்த நிபுணர்கள் வெளியிடப்போகும் அறிக்கையின் அடிப்படையிலேயே சிறீலங்காவின் விமானப் போக்குவரத்தின் எதிர்காலம் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சர்வதேச விமான நிலையங்களில் இருக்க வேண்டிய பாதுகாப்பு கட்டுநாயக்காவில் இருந்ததா அல்லது

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 020 8423 6321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub